இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 121 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 14 திங்கட்கிழமை 27.03.2017

## வாக்குறுதிகளை கொடுத்தாலும் கலப்பு நீதிமன்றம் நிறுவப்படாதாம்

கொழும்பு, மார்ச் 27
"ஜெனிவாக் கூட்டத்தொடரில் இலங்கை எவ்வாறான வாக்குறுதிகளைக் கொடுத்தாலும் இலங்கைக்குள் கலப்பு நீதிமன்றம் அமைக்க ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்" >> 24

## யாழ்ப்பாண மாவட்டத்தில் 7 பிரதேச செயலர்களுக்கு விரைவில் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாணத்தில் உள்ள 7 பிரதேச செயலாளர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். இவர்களின் இடமாற்ற விவரங்கள் பொதுச்சேவை ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிய வருகின்றது.
யாழ்ப்பாண மாவட்டத்தில் வருடாந்த இடமாற்றத்துக்குப் புறம்பாக இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.
ஊர்காவற் >> 24

# வடக்கு உட்பட 4 மாகாணங்களுக்கு வெளிநாட்டு முதலீட்டு வாய்ப்புக்கள்

### நோர்வேயின் ஏற்பாட்டில் கொழும்பில் மாநாடு

கொழும்பு, மார்ச் 27
வடக்கு - கிழக்கு உள்ளிட்ட நாட்டின் 4 மாகாணங்களில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்பும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடல் நோர்வே அரசின் ஏற்பாட்டில் அடுத்த மாதம் 20ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.
முதலீட்டு மாநாடு தொடர்பில் 4 மாகாண முதலமைச்சர்களுடனும் நேரடியாகக் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், அந்த மாகாணங்களின் கீழ் உள்ள மாவட்டச் செயலர்களுடனும் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
நோர்வே அரசின் நிதிப் பங்களிப்பில் அரச >> 24

## கைநழுவவிட்ட நிதியில்வரும் திட்டங்களில் பங்குதாரராக இப்போது கேட்கிறார் விக்கி

### வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 27
"வடக்கு மாகாணத்துக்கு வழங்கிய நிதியைக் கைநழுவவிட்ட முதலமைச்சர், அந்த நிதி சந்திரிகாவிடம் சென்ற பின்பு, அதில் எம்மையும் பங்குதாரராக இணைக்குமாறு கெஞ்சுகின்ற நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம்"
இவ்வாறு வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்துக்கு வழங்கிய நிதி >> 24

# ஐ.நாவின் கட்டளைகள் சகலதுக்கும் தலையாட்ட முடியாது

### இப்படிக் கூறுகிறார் கிரியெல்ல

கொழும்பு, மார்ச் 27
ஐக்கிய நாடுகள் சபையுடன் முரண்படுவதற்கு அரசு தயாரில்லை. இருப்பினும் அந்தச் சபை பிறப்பிக்கும் கட்டளைகளுக்கெல்லாம் தலையாட்ட முடியாது"
இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே >> 24



## இலங்கை – இந்திய கடற்படையினர் தெற்குக் கடலில் ஆய்வு

கொழும்பு, மார்ச் 27
இலங்கையின் தெற்குக் கடல் பகுதியில், இந்தியகடற்படையும், இலங்கைக் கடற்படையும் இணைந்து, கூட்டு சமுத்திரவியல் ஆய்வை மேற்கொள்ளவுள்ளன.
எதிர்வரும் வியாழக்கிழமை தொடக்கம், மே மாதம் 11 ஆம் திகதி வரை இந்தக் கூட்டு ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளதாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்தது. >> 24

## யாழ். பல்கலை. கலைப்பீடத்தின் விரிவுரைகள் புதனன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட 3 ஆம் 4 ஆம் வருடங்களுக்கான கற்றல் செயற்பாடுகள் நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று கலைப்பீடாதிபதி அறிவித்தார்.
"கலைப்பீடத்தின் முதலாம் மற்றும் இரண்டாம்வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் கடந்த 20ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று >> 24

## புதிய அரசமைப்பு மீது பொது வாக்கெடுப்பு

### மக்களின் ஆணையே அரசுக்கு அவசியமாம்

கொழும்பு, மார்ச் 27
"புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் பொது வாக்கெடுப்புக்குச் செல்வதற்கு ஏன் பயப்பட வேண்டும்? சிங்கள மக்களின் நிலைப்பாட்டையும் அறிய வேண்டும் என்று தமிழர் தரப்பிலிருந்து கூறப்படுகின்றது. சிங்கள மக்களின் நாடியைப் பிடித்துப் பார்க்காது புதிய அரசமைப்பை உருவாக்குவதில் பயனில்லை. இதனால்தான் பொது வாக்கெடுப்புக் குறித்துப் பேசப்படுகின்றது.
மக்கள் ஆணையே அரசுக்கு அவசியமாகவுள்ளது"
இவ்வாறு சபை >> 24

## விபத்தில் காயமடைந்த முதியவர் சாவு

### தலைக்கவசத்தைச் சீராக அணியாததால் பரிதாபம்

யாழ்ப்பாணம், மார்ச் 27
தலைக்கவசத்தைச் சீராக அணியாததால், சாலையைக் கடந்த ஆசிரியருடன்மோதுண்டுசுயநினைவையிழந்த முதியவர் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
கிளிநொச்சி திருமுறிகண்டியில், கடந்த வியாழக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது. நல்லூர் பருத்தித்துறைச் சாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி சண்முகம் (வயது -68) >> 24



## உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் வழிபடச் சென்ற மக்களுக்கு ராணுவத்தால் புதிய கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 27
வலி. வடக்கில் உள்ள பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இருக்கும் ஆரோக்கிய மாதா ஆலயத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற வழிபாட்டுக்குச் சென்ற பக்தர்களின் அலைபேசிகள் அனைத்தும் இராணுவத்தால் பெறப்பட்ட பின்பே உட்செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.
வலி. வடக்கிலுள்ள ஆரோக்கிய மாதா கோயிலுக்கு மாதத்தில் ஒரு தடவை சென்று வழிபாடுகள் செய்வதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர். நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டுக்காக மதகுருமார், 3 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் 150 பேர் வரை மக்கள் அங்கு சென்றிருந்தனர். இவ்வாறு சென்ற பொது மக்கள் எவரும் தம்முடன் ஒளிப்படக் கருவியோ அல்லது அலை >> 24

**அச்சுவேலி முக்கொலை:**

## சிறையிலிருந்து சாட்சியை மிரட்டிய சந்தேகநபரின் அலைபேசி சிக்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அச்சுவேலி முக்கொலை வழக்கின் சந்தேகநபர் தனஞ்செயனிடமிருந்து அலைபேசி ஒன்றையும் அதற்குரிய சார்ஜர் ஒன்றையும் மீட்டதாக சிறைச்சாலைத் தரப்பினர் மல்லாகம் நீதிமன்றில் அறிக்கையிட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் அலைபேசிகள் பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பில் பல வருடங்களாகவே குற்றஞ்சாட்டப்பட்டுவந்தது. அதனை நிரூபிக்கும் வகையில் சிறைச்சாலைத் தரப்பினர் >> 24

## இந்திய மீனவர்களுடன் கைதாகியோரில் ஒருவர் மன்னாரில் பிறந்தவர்

யாழ்ப்பாணம், மார்ச் 27
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களுள் ஒருவர் மன்னாரைச் >> 24



## சங்குப்பிட்டி விபத்தில் குடும்பத்தலைவர் சாவு

### அவரது மகள் படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 27
கேரதீவு சங்குப்பிட்டிப் பாலத்தை அண்மித்து நேற்று முற்பகல் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த குடும்பத் தலைவர் சிகிச்சை பயனளிக்காது சில மணித்தியாலங்களில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
சாவகச்சேரி, வீரசிங்கம் சாலையைச் சேர்ந்த சண்முகம் கிருஸ்ணபிள்ளை (வயது 51) என்பவரே உயிரிழந்தார்.
அவருடன் பயணித்த அவரது மகள் >> 24



கேப்பாபிலவு காணிகளை விடுவிக்கக்கோரி தொடர் அறவழிப் போராட்டதில் ஈடுபட்டுவரும் மக்களுக்கு ஆதரவு தெரிவித்து கேப்பாபிலவு போராட்ட களத்துக்கு நேற்றயை தினம் வருகைதந்த அனைவரும் ஒன்றாக இணைந்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (வ-7)

## 3 மாதங்களுக்குள் ரூபா 217 பில்லியன் நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டனவாம்

கொழும்பு, மார்ச் 27

ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 17ஆம் திகதி வரையிலான மூன்றரை மாத காலப் பகுதியில் 217 பில்லியன் ரூபா நாணயத்தாள்களை அரசு அச்சிட்டுள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசின் செலவுகள் வருமானத்தை விடவும் பல மடங்கு அதிகரித்துள்ளன. அரச ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள், ஓய்வூதியம் மற்றும் அமைச்சரவைக் கொடுப்பனவுகள் போன்றவற்றால் அதிகளவு பணத்தை அரசு செலவிட நேரிட்டுள்ளது. வட்டி வீதங்கள் உயர்வடைந்துள்ளதனால் அரசு இழப்புகளைத் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு பணத்தை அச்சிட்டு வருகின்றது" என்று குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

எவ்வாறெனினும், இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் மட்டுமே பணம் அச்சிடப்படுவதாகவும் புறம்பான வகையில் பணம் அச்சிடப்படவில்லை எனவும் பெயர் குறிப்பிட விரும்பாத மத்திய வங்கியின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். (வ-5)

# ஒரு வாரத்துக்குள் தீர்வைத் தரவேண்டும்

### மக்கள் பிரதிநிதிகளிடம் கேப்பாபிலவு மக்கள் வலியுறுத்து

முல்லைத்தீவு, மார்ச். 27

கேப்பாபிலவு மக்கள் தங்கள் காணியை விடுவிக்கக் கோரி முன்னெடுத்து வரும் போராட்டத்துக்கு மக்கள் பிரதிநிதிகள் உரிய தீர்வுகளை பெற்றுதர தவறின் எங்கள் போராட்டத்தை வலுச்சேர்க்கும் முகமாக அடுத்த கட்ட அகிம்சை போராட்டத்தை முன்னெடுக்கும்நிலைக்குதள்ளப்படுவோம். ஒரு வாரத்துக்குள் எமக்கு நல்ல செய்தி பெற்றுத் தர வேண்டும்"

இவ்வாறு வலியுறுத்துகின்றனர் கேப்பாபிலவு மக்கள்.

கேப்பாபிலவு மக்கள் தமது பூர்வீக காணிகளை விடுவிக்க கோரி 26ஆவது நாளாக தொடர் அமைதி வழிப்போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். நேற்றையதினம் மக்கள் பிரதிநிதிகள் கேப்பாபிலவு மக்களை நேரில் சென்று சந்தித்தனர்.

"கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக நாங்கள் தொடர்ந்து போராட்டங்களைமுன்னெடுத்து வருகின்றோம். எங்கள் காணிகளை விடுப்பதற்கான எத்தகைய ஆக்கபூர்வமான நடடிவடிக்கைகளையும் மக்கள் பிரதிநிதிகள் எடுத்ததாகத் தெரியவில்லை. நீங்கள் எமக்கு நல்ல முடிவை பெற்றுத்தாருங்கள். தவறின் எங்கள் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக அடுத்த கட்ட அகிம்சை போராட்டத்தை முன்னெடுக்கும் நிலைக்கு தள்ளப்படுவோம். ஒரு கிழமைக்குள் எமக்கு நல்ல செய்தி பெற்றுத் தரவேண்டும்" என்று கேப்பாபிலவு மக்கள் தெரிவித்தனர்.

கேப்பாபிலவு மக்களின் அழைப்புக்குஇணங்கவன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சி. சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராசா மற்றும் வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் ப.டெனீஸ்வரன் மற்றும் உறுப்பினர்களான து. ரவிகரன், க.சிவநேசன், ஆ. புவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-7)

## திட்டங்களை முன்வைத்தாலும் முத்திரைத் தீர்வை கிடைக்கவில்லை

### வடக்கு உள்ளூராட்சி சபைகளின் நிலை இது

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்குமாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய முத்திரைத் தீர்வை நிதிக்கான, திட்டங்களைத் தயாரித்து வழங்குமாறு உள்ளூராட்சித் திணைக்களத்தால் கடந்த 8 மாத காலப் பகுதியில் 4 தடவை கோரப்பட்டுள்ள போதும், இன்னமும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி விடுவிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் 2011ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை உள்ளிட்ட 34 உள்ளூராட்சி சபைகளுக்கான முத்திரைத் தீர்வை நிதியாக ஆயிரத்து 202.373 மில்லியன் ரூபா மீளளிப்புச் செய்யப்பட வேண்டியுள்ளது. இதனை வழங்குமாறு பல தடவைகள் வலியுறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிதி கொழும்பு அரசினால் விடுவிக்க ப்படும் என்று தெரிவிக்கப்பட்டதற்கு அமைவாக, கடந்த ஆண்டு மே மாதத்திலிருந்து இதற்குரிய திட்டங்களைத் தயாரித்து தருமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தால் உள்ளூராட்சி மன்றங்களிடம் கேட்கப்பட்டிருந்தது. கடந்த 8 மாத காலப் பகுதியில் 4 தடவைகள் திட்டங்கள் கோரப்பட்ட போதும் இன்னமும் நிதி வழங்கப்படவில்லை.

தற்போது மீண்டும் திட்டத்தைத் தயாரித்து வழங்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கோரியுள்ளது. உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட சாலைகளை அதற்குரிய நீளம், அகலம், அதற்குத் தேவையான நிதி, கிராம அலுவலர் பிரிவு மற்றும் விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. (வ-5-50)

## தொடருந்துடன் மோதி குடும்பத்தலைவர் சாவு

யாழ்ப்பாணம்,மார்ச்27

தொடருந்துடன் மோதுண்டு குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்தார் என்று திடீர் இறப்புவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், நாவற்குழி தொடருந்து நிலையத்துக்கும், புங்கன்குளம்தொடருந்துநிலையத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், அரியாலை கிழக்கைச் சேர்ந்தவரும்கிளிநொச்சியில் நீர்ப்பாசனத் திணைக்களத்தில்பணியாற்றுபவருமான தவநாயகம் திரேந்திரா (வயது 27) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தொடருந்தில் மோதியதிலேயே குடும்பத்தலைவர் படுகாயமடைந்தார். அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார் என்றுதெரிவிக்கப்பட்டது.

'நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வீட்டில் இருந்து அவருக்கு சொந்தமான மோட்டார்சைக்கிளில் வெளியே சென்றுள்ளார். இடையில்மனைவியின் தம்பியைப் பார்த்து அவரிடம் மோட்டார் சைக்கிளைக் கொடுத்து விட்டுச் சென்றுள்ளார். அதே நேரம் அவரது தந்தையைத் தொலைபேசியில்அழைத்துநாளைக்கு என்னைப்பார்க்க வீட்டுக்கு வாருங்கள் என்று கூறியுள்ளார். தாயாரையும் தொலைபேசியில் அழைத்து இன்னும் மூன்று நாளைக்குள் நான் இறந்து விடுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்" என்று இறப்பு விசாரணையின்போது உறவினர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நவசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (வ-106-ரி)

## மக்களின் போராட்டத்தில் ஆசிரியர் சங்கம் பங்கேற்பு

கேப்பாபிலவு மக்கள் தங்கள் பூர்வீக நிலங்களை விடுவிக்கக் கோரி முன்னெடுத்து வரும் தொடர் அமைதிவழிப் போராட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தலைமையில் தென்பகுதியில் இருந்து 12 பேர் அடங்கிய குழுவினர் நேற்று நேரில் சென்று தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

"உங்கள் போராட்டத்தின் நியாயத்தன்மையை அறிந்து அதனை தென்பகுதிக்கு எடுத்துச் செல்லவேண்டும் என்பதற்காக நாங்கள் இங்கு வந்தோம். போருக்குப் பின் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றால் முதலில் பொதுமக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும். இதுவரைக்கும் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு தகுந்த பதில் இல்லை, அரசியல் கைதிகளை விடுவிக்கவில்லை, நாங்கள் தென்பகுதியில் இருந்து இதனை வலியுறுத்தி வருகின்றோம்" என்று செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தனர். (வ -7)

# இந்திய ராணுவத்தின் கொடுமைகளே ராஜீவைக் கொலை செய்யத் தோன்றியது

### இப்படிப் புதுக்கதை கூறுகிறார் கருணா

கொழும்பு, மார்ச் 27

"இந்தியப் படையினர் வடக்கு மாகாணத்தில், பெண்களை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய காரணத்தால், இந்தியத் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தியை கொலை செய்ய வேண்டுமென விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்னிடம் கூறினார்"

இவ்வாறு முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தியாக தீபம் திலீபனின் சாவுக்குப் பின்னர் நாம் போருக்கு ஆய்த்தமாகியிருந்தோம். வல்வெட்டித்துறையில் இராணுவ ஜீப் வண்டியொன்றின் மீது திடீர் தாக்குதல் நடத்தினோம். இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் இந்திய இராணுவத்தினர் தொடர் தாக்குதல்களை நடத்தத் தொடங்கினர். வடக்கில் மட்டுமன்றி தெற்கிலும் அவர்கள் தாக்குதல் நடத்தத் தொடங்கியிருந்தனர். அந்தக் காலத்தில் பெரிதாக போர் இல்லை என்பதனால், நான் வடக்கில் பிரபாகரனுடன் இருந்தேன். அப்போது பிரபாகரன் என்னை அழைத்து, நீ கிழக்குக்குப் போக வேண்டும் என்று உத்தரவிட்டார்.

நான் கிழக்குக்குச் செல்ல சில மணித்தியாலங்களுக்கு முன்னதாக பிரபாகரன், ராஜீவை கொலை செய்ய வேண்டுமெனக் கூறினார். இந்திய இராணுவம் மிகவும் பெரியது. அவர்கள் தாக்குதல் நடத்தி முன்னேறி வந்தனர். அவர்கள் பிடிக்கும் கிராமங்களில் வசித்து வந்த பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டனர். இது குறித்துபிரபாகரன் கடும் கோபத்துடன் இருந்தார். இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்ட ஒன்பது பெண்களை இந்திய இராணுவத்தினர் கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியிருந்தனர். இந்த பெண்கள் கடுமையாக நோய் வாய்ப்பட்டனர். அவர்கள் யாழ்ப்பாண வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இதனை அறிந்து கொண்ட பிரபாகரன், நாம் ராஜீவ் காந்தியை கொலை செய்ய வேண்டும், என்று என்னிடம் கூறினார் என்றார். (வ-5)

# தெற்கு பொது அமைப்புகளின் பிரதிநிகள் வடக்குக்கு வருகை

## போராட்டத்தில் ஈடுபடும் மக்களுடன் கலந்துரையாடினர்

வவுனியா, மாரச் 27
தென்பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய தேசிய சகோதரத்துவ அமைப்பினர் வடக்கில் மக்கள் நடத்தும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்தனர். அவர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபடும் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.



வடக்கு மக்களின் போராட்டங்களை நாடு முழுவதும் சரியான வகையில் தெரியப்படுத்தவே இந்த அமைப்பினர் வடக்குக்கு வந்தனர் என்று அந்த அமைப்புக்கு தலைமை வகித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அந்த அமைப்பினர் முதலில் வவுனியாவில் இடம்பெறும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்துக்குச் சென்று கலந்துரையாடினர். அதன் பின்னர் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கும் சென்று மக்களுடன் கலந்துரையாடினர்.

வடக்கு மாகாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தக் கோரியும், தமது பூர்வீக நிலங்களை விடுவிக்கக் கோரியும் மக்கள் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். (ந-21)

# போராட்டத்தின் நியாயத்தை தெற்குக்கு புரிய வைப்போம்

## *இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் தெரிவிப்பு*

வவுனியா, மார்ச் 27
சிங்கள மக்கள் மத்தியில் இந்த போராட்டத்தை பற்றிய உண்மைகள் முறையாக தெளிவுபடுத்தப்படவில்லை, மக்களுடைய நியாயமான போராட்டத்தை முழு இலங்கைக்கும் எடுத்துக் கூறுவோம்.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப்ஸ்டாலின் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஜெனீவாவில் அரசு இரண்டு வருட கால அவகாசத்தை கோருகின்றது. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அரசு இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. பிரகீத் எக்னலியகொட கொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட பாதுகாப்பு தரப்பைச் சேர்ந்தவர்களை 15 நாள்கள் வழக்கு இல்லாமல் வைத்திருப்பது தவறு என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறுகின்றார்.

இங்கு 19 வருடங்களுக்கு மேலாக எந்த வித வழக்குகளுமின்றி தமிழ் அரசியல் கைதிகள் பலர் சிறையில் உள்ளனர். அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் இல்லை. 2009ஆம் ஆண்டு போர் முடிந்து விட்டது. இன்று வரை இந்த மக்கள் தொடர்பில் எந்தத் தீர்வும் இல்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள், காணி சம்பந்தமான விடயங்கள் தொடர்பில் எந்தத் தீர்வும் இல்லை. பின்னர் எதற்கு ஐ.நாவில் இலங்கை அரசுக்கு கால அவகாசம். அதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். வடக்கில் இடம்பெறும் போராட்டங்களுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கும் நோக்கில் நாம் இங்கு வந்துள்ளோம். இலங்கை அரசுக்கு நாங்கள் அழுத்தம் கொடுக்கவுள்ளோம். இந்தத் தாய்மார்களின் உறவுகள் பல வருடமாக காணாமற்போயுள்ளார்கள். இப்படியான ஒரு சூழ்நிலையில் இரண்டு வருடகாலம் அவசியமில்லை.

இவர்களின் கோரிக்கையில் முதற் கோரிக்கை சிறைக்கைதிகளை விடுவிக்கச் சொல்லி அதைக்கூட அரசால் செய்ய முடியாவிட்டால் என்னகாரணம்? சிறைக் கைதிகளைவெளியே விடுவதற்குஇரண்டு வருடம்தேவையில்லை.தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவாக இருக்கலாம், மங்கள சமரவீரவாக இருக்கலாம் சந்திரிகா குமாரதுங்கவாக இருக்கலாம் நல்லிணக்கம் என்று கூறி யாழ்ப்பாணம் வந்து மாலைகளைப் போட்டுக் கொண்டால் நல்லிணக்கம் வராது. உண்மையான நல்லிணக்கம் ஏற்படவேண்டுமாயின் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை விடுவிக்க வேண்டும். மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் - என்றார். (ந-21)



# போராட்ட வடிவம் விரைவில் மாறும்

## *காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவிப்பு*



கிளிநொச்சி, மார்ச் 27
போராட்டத்துக்கு ஆதரவு வழங்கிய அனைத்துத் தரப்பினருடனும் கலந்தாலோசித்த பின்னர் எமது போராட்ட வடிவத்தை மாற்றுவதற்குத் தீர்மானித்துள்ளோம். மிக விரைவாக போராட்ட வடிவத்தை மாற்றி அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லவுள்ளோம்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

"ஐ.நா. மீண்டும் கால அவகாசம் வழங்கியுள்ளது. ஐ.நா. மூலம் தீர்வு கிடைக்கும் என்பது கேள்விக்குறியாக மாறியுள்ளது. நாங்கள் எமது பிரச்சினையைப் பாதுகாப்புச் சபைக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஐ.நா. அரசின் கருத்துக்கே முக்கியத்துவம் வழங்குகின்றது. போர் முடிந்த 8 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் தொடர்ந்தும் இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது." என்று அவர்கள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 5 மாவட்டங்களில் மேற்கொண்டுவரும் தொடர் போராட்டங்கள் நேற்றும் தொடர்ந்தன. வடக்கின் 4 மாவட்டங்களிலும், கிழக்கில் திருகோணமலை மாவட்டத்திலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும், விடுதலையையும் வலியுறுத்திப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. தமக்கு உறுதியான தீர்வு கிடைக்கும்வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை. எம்மை வீதியில் விட்டு வேடிக்கை பார்ப்பதை விடுத்து எமக்குத் தீர்வு பெற்றுத் தர வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

வடக்கில், கிளிநொச்சி, வவுனியா, முல்லைதீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. போராட்டங்களுக்கு நாளுக்கு நாள் பொது அமைப்புகள், பல்கலைகழக மாணவர்கள், அரசியல் தலைவர்கள், இளைஞர் அணியினர் ஆகியோர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் 35 ஆவது நாளாகவும், வவுனியா மாவட்டத்தில் 31 ஆவது நாளாகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 19 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணத்தில் 12 ஆவது நாளாகவும், கிழக்கில் திருகோணமலையில் 22ஆவது நாளாகவும் போராட்டங்கள் தொடர்ந்தன.

முல்லைத்தீவுக்கு நேற்றுச் சென்ற மக்கள் பிரதிநிதிகளான சிவசக்தி ஆனந்தன், வடமாகாண அமைச்சர் ப. டெனீஸ்வரன், உறுப்பினர் து. ரவிகரன் இது தொடர்பான விரைவான முடிவுகளை பெறுவதற்கு அரச தலைவரை சந்திக்க உள்ளனர் என்றும் அதற்கு வடக்கு முதலமைச்சரின் உதவியை நாட உள்ளனர் என்றும் தெரிவித்தனர். (ந-21-7-35-26-6)

# புன்னைநீராவி கிராமத்துக்கு முதற் கட்டமாக 700 வீடுகள்

கிளிநொச்சி, மார்ச் 27
கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் இன்றுவரை எந்த வீட்டுத் திட்டமும் வழங்கப்படாதிருந்த புன்னைநீராவிக் கிராமத்துக்கு முதற் கட்டமாக 700 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பிரதேச செயலாளர் முகுந்தன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

புன்னைநீராவிக் கிராம மக்கள் தமக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்க வேண்டும் என்று தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வந்தனர். அவர்களிடம் சொந்தக் காணியோ, அரச காணியோ இருக்கவில்லை. மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணிகளே இருந்தன. அதனால் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவில்லை.

அவர்களுக்கு உதவ நாம் பல முயற்சிகளை எடுத்தோம். தற்போது அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துள்ளது. அவர்களின் காணிகள் மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழிருந்து ரத்துச் செய்யப்பட்டு அவர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அவர்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஐரோப்பிய ஒன்றியம் வழங்கவுள்ள 700 வீடுகள் அந்தக் கிராமத்துக்கு வழங்கப்படவுள்ளன.

அதற்கான அனுமதி கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்குக் கிடைத்துள்ளது. பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு வீட்டுத் திட்டத்துக்காக 6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. வாழ்வாதாரத்துக்காக ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

ஏனைய குடும்பங்களுக்கான வீடுகள் அடுத்த வீட்டுத் திட்டங்களின் ஊடாக வழங்கப்படும்- என்றார். (ந-101)

# நெத்தலியாற்றில் குண்டுகள் மீட்பு

கிளிநொச்சி, மார்ச் 27
கிளிநொச்சி நெத்தலியாற்றில் மிதந்து வந்த மோட்டார் குண்டுகள்மீட்கப்பட்டுள்ளன என தர்மபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்குக் கிடைத்த இரகசியத்தகவலுக்கு அமைய மூத்த பொலிஸ் அத்தியட்சகர், கிளிநொச்சி பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அத்தியட்சகர், தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிளிநொச்சிகுற்றத்தடகவியல் பொலிஸார் கொண்ட குழுவினர் நெத்தலியாறு பகுதிக்குச் சென்று தேடுதல் நடத்தினர்.

ஆற்றின் நடுவே மிதந்த நிலையில் காணப்பட்ட பை ஒன்று மீட்கப்பட்டது. அந்த பையை சோதனையிட்ட போது அதில் வாழைத் தண்டுக்குள் வைத்து மேல் பொலித்தீனால் சுற்றப்பட்ட நிலையில் வெடிபொருள் இருப்பது கண்டறியப்பட்டது. அந்தப் பகுதி புதுக்குடியிருப்பு பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளதால் புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. அவர்கள் வெடிகுண்டுகளை மீட்டனர். வெடிபொருள் என்ன என்பது தொடர்பில்ஆராயவும்அதனை மீட்கவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவி கோரப்பட்டுள்ளது.



பையுக்குள் மூன்று அல்லது நான்கு மோட்டார் வகைக் குண்டுகள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-21-35)

# ஈழத் தமிழருக்கு இதுவரை தமிழக அரசியல்வாதிகள் ஒன்றுமே செய்யவில்லை

## லைக்கா கடும் சாடல்

சென்னை, மார்ச் 27

இலங்கையில் அல்லலுறும் தமிழர்களுக்காக தமிழக அரசியல்வாதிகள் ஒன்றும் செய்யவில்லை என்று லைக்கா நிறுவனத்தின் துணைத் தலைவர் பிரேம் சிவசாமி சாடியுள்ளார்.

லைக்கா நிறுவனத்தின் ஞானம் அறக்கட்டளை சார்பில் வவுனியாவில் கட்டப்பட்டுள்ள 150 புதிய வீடுகளை தமிழர்களுக்கு வழங்கும் நிகழ்ச்சியில் தென்னிந்திய நடிகர் ரஜினிகாந்த் கலந்து கொள்வதாக இருந்தது. ரஜினிகாந்த் கலந்துகொள்ளக் கூடாது என்று திருமாவளவன், வைகோ, வேல் முருகன் உள்ளிட்ட தலைவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். அவர்களின் வேண்டுகோளை ஏற்று, இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று ரஜினிகாந்த் அறிவித்தார்.

மேலும், இனிவரும் காலங்களில் இலங்கை செல்வதை அரசியலாக்கி அங்கு என்னை போகவிடாமல் செய்துவிடாதீர்கள் என்று நடிகர் ரஜினிகாந்த் வேண்டுகோள் விடுத்தார்.

ரஜினியின் பயணம் கைவிடப்பட்டதால் வரும் ஏப்ரல் 9ஆம் திகதி நடைபெறவிருந்த வீடு வழங்கும் விழா கைவிடப்பட்டதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. எனினும் கட்டப்பட்ட 150 வீடுகளும் அவர்களிடமே ஒப்படைக்கப்படும் என்றும் லைக்கா கூறியுள்ளது.

இது தொடர்பாக லைக்கா நிறுவனத்தின் துணைத்தலைவர் பிரேம் சிவசாமி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ரஜினியின் இலங்கைப் பயணம் குறித்து, சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில், அறக்கட்டளையின் உதவித்திட்ட செயற்பாடுகளை, தமது அரசியல் சுய லாபத்துக்காக பயன்படுத்துகின்ற ஒரு அநாகரிக சூழல் உருவாகியிருக்கிறது. அது மட்டும் அல்லாமல் ரஜினியைத் தர்மசங்கடமான நிலைக்கு உட்படுத்தும் நிலை வலிந்து உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அசௌகரியங்களைத் தவிர்க்கும் முகமாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவித் திட்டங்கள், இவற்றின் ஊடாக தடைப்படக் கூடாது என்பதற்காகவும், யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி இடம்பெற இருந்த அனைத்து நிகழ்வுகளும் கைவிடப்படுவதோடு, ரஜினிகாந்தின் இலங்கைப் பயணமும் இடம்பெறாது என்பதனை மிகவும் மனவேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது வர்த்தக செயற்பாடுகளோடும், சமூகம் சார்ந்த முன்னுதாரண திட்டங்களோடும் ஆரோக்கியமான போட்டிகளை உருவாக்க முடியாத வர்கள் முதுகில் குத்தும் நடவடிக்கைகளை தொடர்கின்றனர்.

இப்படியான வதந்திகளை பரப்புவதன் ஊடாக லாபத்தை பெற முனைபவர்களுக்கு சார்பாக, சில தமிழக அரசியல்வாதிகள் திரும்பத் திரும்ப பேசுவது கண்டிக்கப்பட வேண்டியது. எமது போட்டி வியாபாரிகளிடம் ஏதாவதொரு வகையில் கடமைப்பட்ட காரணத்தால்தான் இப்படியான ஆதாரமற்ற, உண்மையற்ற வதந்திகளை இவர்கள் முன்வைக்கிறார்கள் என்பதனை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இத்தகைய அரசியல்வாதிகள் இன்று இலங்கையில் அல்லலுறும் தமிழ் மக்களின் வாழ்வுக்கும் அவர்களின் எதிர்கால நன்மைக்கும் எதுவும் செய்ததில்லை. ஆயினும் லைக்கா ஞானம் அறக்கட்டளையின் நோக்கம் எல்லாம் அரசியல் தவிர்த்து அவர்களுடைய வாழ்வாதாரத்துக்கும் நிரந்தர உறைவிடத்துக்கும் உதவி செய்வதே ஆகும்.

இலங்கை தமிழ் மக்களுக்கு நீண்டகால அரசியல் தீர்வை உருவாக்கி கொடுப்பதற்கு பல அரசியல் தலைவர்கள் கடுமையான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதனை நாம் மனதார வரவேற்கிறோம். இன்றைய நிலையில், அனைத்தையும் இழந்து அல்லலுறும் மக்களுக்கு உதவுகின்ற எம்முடைய முயற்சிகளை நிம்மதியாக செய்ய விடுங்கள் எனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# மகிந்தவின் தோல்விக்கு கோத்தபாய புது விளக்கம்

## சிறுபான்மையினர் காரணமில்லையாம்

கொழும்பு, மார்ச் 27



"சிறுபான்மை மக்களின் வாக்குகள் கிடைக்காத காரணத்தால் அரசதலைவர் தேர்தலில் மகிந்த தோற்றதாகக் கூறப்படும் கருத்தை நான் ஏற்கவில்லை. தேர்தல் முடிவுகளை நன்றாக ஆய்வு செய்தால் இந்த விடயத்தைப் புரிந்து கொள்ள முடியும். சிங்கள மக்கள் வாக்களிக்காத காரணத்தாலேயே மகிந்த தோல்வியடைந்தார்"

இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுபான்மை மக்களின் வாக்குகள் கிடைக்காத காரணத்தால் மகிந்த தோற்றதாக கூறப்படும் கருத்தை நான் ஏற்கவில்லை. தேர்தல் முடிவுகளை நன்றாக ஆய்வு செய்தால் இந்த விடயத்தை புரிந்து கொள்ள முடியும். பெரும்பான்மை மக்கள் வாக்களிக்காத காரணத்தாலேயே மகிந்த தோல்வியடைந்தார். குறிப்பாக கொழும்பு மற்றும் மக்கள் செறிவான பகுதிகளில் சிங்கள மக்கள் அதிகளவில் மகிந்தவை நிராகரித்தனர்.

முஸ்லிம் மக்கள் அன்று மகிந்தவை வெறுப்பதற்கு ஒரு காரணம் இருந்தது. பொதுபல சேனாவின் நடவடிக்கைகளால் அவர்கள் மகிந்தவை நிராகரித்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தோற்கடிக்கப்பட்ட காரணத்தால் தமிழ் மக்கள் மகிந்த மீது குரோதம் கொண்டிருந்தனர்.

பொய்ப் பரப்புரைகளைக் கண்டு ஏமாந்து மக்கள் தமக்கு கிடைத்திருக்கும் சுதந்திரத்தை மறந்து விட்டார்கள். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய அனைவரும் தற்போது மனம் வருந்துகின்றார்கள். லசந்த கொலை விசாரணைகளை தடுக்க வேண்டுமென நான் ஒரு போதும் முயற்சிக்கவில்லை என்றார். (வ-5)

# வாள்வெட்டுக் கும்பல் வல்வையில் அடாவடி

யாழ்ப்பாணம், மார்ச் 27

வல்வெட்டித்துறை தொண்டமானாறில் வாள்வெட்டுக் கும்பல் நேற்றிரவு அடாவடியில் ஈடுபட்டது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

"3 மோட்டார் சைக்கிள்களில் சுமார் 7 பேர் கொண்ட கும்பலே இவ்வாறு அடாவடியில் ஈடுபட்டது.

அவர்களில் பின் இருக்கையில் இருந்தவர்கள் வாள்களைச் சுழற்றியவாறு சாலையில் சென்ற பலருக்கும் பகிரங்கமாகவே அச்சுறுத்தல் விடுத்தனர். அவர்களது அந்த நடமாட்டம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது" என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். (வ-4-26)

# ரஜினி உதவ முன்வந்தாலும் தமிழகத்திலுள்ளோர் விடமாட்டார்கள்

## நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 27

இலங்கைத் தமிழர்களுக்கு ரஜினியே உதவ முன் வந்தாலும் தமிழக அரசியல்வாதிகள் விடமாட்டார்கள். அவர்களின் உண்மையான இயல்பு மீண்டும் வெளிப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தனது கீச்சகப் பதிவில் (ருவிற்றரில்) குறிப்பிட்டார்.

தமிழக சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த் எதிர்வரும் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வீடு கையளிப்பு நிகழ்வில் பங்கேற்பதாக இருந்தது. இதற்கு தமிழக அரசியல் தலைவர்களிடமிருந்து கடும் எதிர்ப்பு எழுந்தது. இதனையடுத்து தனது பயணத்தை கைவிடுவதாக ரஜினி அறிவித்தார்.

இந்த விடயம் தமிழகத்தில் பேசு பொருளாகியுள்ள நிலையிலேயே, நாமல் ராஜபக்ச தனது கீச்சகப் பதிவில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். "தமிழக அரசியல்வாதிகள் இலங்கைத் தமிழர்களுக்கு எதையும் செய்ய மாட்டார்கள். கடந்த காலங்களிலும், தமிழகத் தலைவர்கள் தங்கள் நலனுக்காகவே இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைப் பயன்படுத்தினர்" என்றும் நாமல் தெரிவித்துள்ளார். (வ-5)

# விக்னேஸ்வரா வித்தி. கட்டடத் திறப்பு நாளை

யாழ்ப்பாணம், புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய புதிய வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை மு.பகல் 10மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் ஏ.தவநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த. குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ந. தெய்வேந்திரராஜாவும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

# மடத்துக்கரை முத்துமாரிக்கு 55 அடி உயரத்தில் கோபுரம்

காரைநகர், மார்ச் 27



காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்பாள் ஆலய பஞ்சதள இராஜ கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா நூற்றுக்கணக்கான பத்தர்களின் அரோகராக் கோசம் முழங்கப் பத்திப் பரவசமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அதிகாலை இடம்பெற்ற சிறப்பு முழுக்கு வழிபாடுகளை அடுத்து காலை 7.50 மணியளவில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது. இராஜகோபுரத் திருப்பணிக்கான முதலாவது அடிக்கல்லை மருத்துவர் எஸ். சுவாமிநாதன் நட்டு வைத்தார். சுமார் 18 மில்லியன் ரூபா செலவில் 55 அடி உயரமான கோபுரம் அமைக்கப்பட உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-250)





காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத் தேர்த் திருவிழா நேற்று ஞாயிற்றுக் கிழமை பெரும் தொகையான பத்தர்களின் அரோகராக் கோசம் முழங்கப் பத்திப் பரவசமாக இடம்பெற்றது. (வ-250)

# வடக்கு மாகாண சபைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் நெருக்கடி

## அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

தன்னால் கொண்டு வரப்பட்ட பனை வள அபிவிருத்தி ஆண்டாகப் பிரகடனப்படுத்தும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கடந்த ஜனவரி மாதம் பனை வள அபிவிருத்தி ஆண்டாக நடப்பாண்டை அறிவிக்குமாறு வடக்கு மாகாண சபையில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தார். அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2 மாதங்கள் கடந்த போதிலும் அது தொடர்பில் எந்தப் பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இதுதொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பதவி பல மாதங்களாக நிரப்பப்படாமல் உள்ளது. ஆணையாளர் இல்லாத நிலையில் நாங்கள் திட்டங்களை எப்படி முன்னெடுப்பது. ஆகவே இது தொடர்பாக முதலமைச்சருடன் கலந்துரையாடினேன். முதலமைச்சரும் வடக்கு மாகாண ஆளுநருடன் இந்த விடயம் தொடர்பாகக் கதைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் பிரேரணை கொண்டுவரப்பட்டு பனை வள ஆண்டாகப் பிரகடனப்படுத்துவதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நானும் எனது அமைச்சும் பல திட்டங்களை வகுத்து வைத்துள்ளோம். அவற்றில் ஒரு சிலவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். நடப்பாண்டை பனை வள அபிவிருத்தி ஆண்டாக நடைமுறைபடுத்தி விட்டோம் என்பதற்காக வருடத்தின் முதலாம் திகதியிலிருந்தே வேலைத்திட்டங்களைச் செய்ய வேண்டும் என்ற நியதியில்லை. அத்துடன் வருடம் முழுக்க பனை வள அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டிய தேவையும் இல்லை. அடுத்த மாதத்திலிருந்து திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான வருட நிதி தற்பொழுது அதிகரிக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவயோகன் வடமராட்சி கிழக்குப் பகுதியில் வெல்ல ஆலையை அமைப்பதற்கு என்னுடன் கதைத்திருந்தார். அந்த வெல்ல உற்பத்தித் தொழிற்சாலை அமைப்பது தொடர்பான அனுமதி நேற்றுமுன்தினம் எமக்குக் கிடைக்கப்பெற்றது. ஏனைய சில உறுப்பினர்களுடனும் கலந்து சில வேலைத்திட்டங்கள் செய்வதற்கு உத்தேசித்துள்ளோம்- என்றார். (வ-8)



CAMBRIDGE ENGLISH
Language Assessment
Authorised Centre

Improve your English Skills
@ ICBT Jaffna Campus

Apply now for New Intake 2017

Accredited by
EQAA
European Quality Assurance Agency

DIPLOMA IN ENGLISH
Level 01 & Level 02
(2- 4 Months)
A General English course designed to cover and improve the four main language skills of Reading, Writing, Listening & Speaking.

IELTS
PREPARATION COURSE
IELTS Registration & Exam Preparation Classes

Weekdays Evening/ Weekend Morning/ Weekend Evening Classes

- All material used are updated and directly from UK.
- Conducted by experienced and qualified lecturers.
- Free Gift Pack with a CD for listening.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/Recreation Area/ Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence
2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk

# ஓய்வு பெற்ற அதிபரின் மணிவிழா மட்டுவிலில்

தென்மராட்சி, மார்ச் 27

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலய அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற வேலுப்பிள்ளை சுந்தரலிங்கத்துக்கு பாடசாலைச் சமூகத்தினரால் நேற்று மணிவிழா நிகழ்வு பாடசாலை அரங்கில் நடத்தப்பட்டது.

ஓய்வுநிலை கிராம அலுவலர் க.வாமதேவன் மேடைக்கு அழைத்து வந்தனர். சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையான சாலையின் இருமருங்கிலும் பூரண கும்பங்கள் வைத்து ஊர்மக்கள் மலர்தூவி வரவேற்றனர்.

விழாவின் ஆசியுரையை தென்னிந்திய திருச்சபையின் நுணாவில் ஆலய போதகர் நிகழ்த்தினார். வாழ்த்துரைகளை ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப் பாளர்



தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தலைமை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொண்டார்.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன், நடுவண் கல்வி அமைச்சின் இந்து சமயம் மற்றும் விழுமியக் கல்விப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.இதயராஜா, பண்டாரவளை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராஜா, சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், சாவகச்சேரி சீதா நகையக உரிமையாளர் சி.சதீஸ்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மட்டுவில் தெற்கு வேரக்கேணி கந்தசுவாமி ஆலயத்திலிருந்து விழா நாயகன் அவரது மனைவி மற்றும் விருந்தினர்களை பாடசாலை சமூகத்தினர் ஊர்வலமாக விழா

பி.முத்துலிங் கம், ஓய்வுநிலை உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி, வித்தியாலயத்தின் ஓய்வுநிலை அதிபர் க.துரைரத்தினம், மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய அதிபர் க. எழிலழகன், வித்தியாலய ஆசிரியர் திருமதி கோ. திருநாவுக்கரசு பழைய மாணவி மு.பவித்திரா ஆகியோர் நிகழ்த்தினர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த9)

# வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 27

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 10ஆம் திகதி திங்கட்கிழமை பித்தர்கேணியில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## இலங்கைத்திறந்த பல்கலைக்கழகம்
## யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்
## கல்வியாண்டு 2017/18

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

| கற்கை நெறிகள் | அனுமதித்தகைமைகள் | மொழி | கற்கை நெறிக்கான காலம் | விண்ணப்பிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி (Certificate Programme in Social Sciences) | • 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும் | தமிழ் / ஆங்கிலம் | 2 வருடம் | 05.03.2017 20.04.2017 |
| இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா (Diploma in Youth Development Work) (DYD) | • 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும் அத்துடன்<br>• க.பொ.த உயர்தரத்தில் ஏதாவது ஒரு துறையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது<br>• இ.தி.ப.கழகத்தினால் வழங்கப்படும் ஏதாவது ஒரு கற்கை நெறியில் இரண்டாம் மட்டத்தினை (Level 2) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது<br>• இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இவற்றுக்குச் சமமான அல்லது மேற்பட்ட வேறு தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இளைஞர் அபிவிருத்தியில் துறைசார் அனுபவமும் இதில் கருத்தில் கொள்ளப்படும். | தமிழ் / ஆங்கிலம் | 2 வருடம் | 05.03.2017 20.04.2017 |
| சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி (BA Degree in Social Sciences) | • 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்<br>• இ.தி.ப.கழகத்தினால் வழங்கப்படும் ஏதாவது ஒரு கற்கை நெறியில் இரண்டாம் மட்டத்தினை (Level 2) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது<br>• க.பொ.த உயர்தரத்தில் ஏதாவது ஒரு துறையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது<br>• இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இவற்றுக்குச் சமமான அல்லது மேற்பட்ட வேறு தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். | ஆங்கிலம் | 3 வருடம் | 05.03.2017 20.04.2017 |

www.ou.ac.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு

| நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் | பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் | 021 - 2223374 |
| வவுனியா கற்கை நிலையம் | இல 366, கண்டி வீதி, தேக்கவத்தை, வவுனிய | 024 - 2222995 |
| கிளிநொச்சி கற்கை நிலையம் | 155 ஆம் மைல்கல், கண்டிவீதி, கிளிநொச்சி | 021 - 2283970 |
| முல்லைத்தீவு கற்கை நிலையம் | ஒட்டுசுட்டான்வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | 071 - 3522367 |
| மன்னார் கற்கை நிலையம் | 363, தலைமன்னார் வீதி, மன்னார். | 023 - 2251999 |

இணைய வருவழி
மூலமே
விண்ணப்பிக்க முடியும்

பதிவாளர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.




இலங்கையில் இந்துசமய அறநெறிக் கல்விக்கு உன்னதமான பங்களிப்பைச் செய்தவர்களை தெரிவு செய்து, வருடந்தோறும் வழங்கப்பட்டு வரும் தேசிய சேவை மேன்மை விருது—2016, கிளிநொச்சி மாவட்டத்தில் ஓய்வு நிலை சைவசமய ஆசிரிய ஆலோசகரான திருமதி .சோமசேகரம் செல்வராணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்து சமய அலுவலகள் அமைச்சால், கொழும்பு பம்பலபிட்டி கதிரேசன் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வின் போதே, கிளிநொச்சியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சோ. செல்வராணி அவர்களுக்கு அவரின் அறநெறிக் கல்விச் சேவையைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்திட்டம் தென்மராட்சியில் புதனன்று ஆரம்பம்

தென்மராட்சி , மார்ச் 27

தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டம் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏழு வலயங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கமைவாக நாளை மறுதினம் புதன்கிழமை மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு பிரிவுகளிலும் , எதிர்வரும் 30 ஆம் திகதி மட்டுவில் வடக்கு, மட்டுவில் தெற்கு, சரசாலை தெற்கு ஆகிய பிரிவுகளிலும், எதிர்வரும் 31 ஆம் திகதி கொடிகாமம் மத்தி , கொடிகாமம் வடக்கு , கச்சாய் ஆகிய பிரிவுகளிலும், எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி சாவகச்சேரி நகரம், கோயிற்குடியிருப்பு, சங்கத்தானை பிரிவுகளிலும் , இரண்டாம் திகதி நாவற்குளி பிரிவிலும், மூன்றாம் திகதி நாவற்காடு, கரம்பைக்குறிச்சி, இடைக்குறிச்சி பிரிவுகளிலும் , நான்காம் திகதி மந்துவில் கிழக்கு, மீசாலை வடக்கு, இராமாவில் ஆகிய பிரிவுகளிலும் டெங்குக் கட்டுப்பாட்டு பரிசோதனைகள் இடம்பெறும் என்று சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

2017 ஜனவரி தொடக்கம் மார்ச் மாதம் 23 ஆம் திகதி வரை தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்டோர் டெங்குத் தொற்றினால் பீடிக்கப்பட்டுள்ளனர் . தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர், உள்ளூராட்சி சபையினர், சாவகச்சேரி, கொடிகாமம் பொலிஸார் மற்றும் பொது அமைப்புகளின் பங்களிப்புடன் நான்கு தடவைகள் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு தரிசிப்புகளை மேற்கொண்டனர். மார்ச் மாதத்தின் முதல் இரு வாரத்தில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்டோர் டெங்குத் தொற்றினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். தற்போது டெங்குத் தொற்றினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளொன்றுக்குச் சராசரியாக இருவர் வீதம் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவருகிறது. (ஐ-9)

# முன்னாள் போராளியின் குடும்பத்துக்கு வாழ்வாதர உதவி

வவுனியா.மார்ச் 27

வவுனியா பாலமோட்டையில் முன்னாள் போராளியின் குடும்பத்துக்கு மொன்றியல்



துர்கை அம்மன் ஆலய 6ஆம் திருவிழா உபயகாரர்களால் நேற்று ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிப்பண்ணையொன்று கையளிக்கப்பட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டு வன்னியில் இடம்பெற்ற போரின் பின்னர் பல இன்னல்களுக்கு உள்ளாகியுள்ள இந்தக் குடும்பத்தில், ஐந்து பெண் பிள்ளைகள். இவர்களின் வாழ்வாதாரம் விவசாயம். இதனடிப்படையில் இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு கனடா கியுபைக் மொன்றியல் நகரைச் சேர்ந்த பாராவூர்தி சாரதிகளின் ஒழுங்கமைப்பில் மொன்றியில் துர்க்கை அம்மன் ஆலயத்தின் 6 ஆம் திருவிழா உபகாரர்களால் இந்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டது. (ஐ)

அம்புலன்ஸ் சாரதி வெற்றிடம்

**யாழ் மாவட்ட சென்ஜோன் அம்புலன்ஸ் இல் அம்புலன்ஸ் சாரதிப் பதவிக்கு ஆட்சேர்ப்பு**

1. Aதர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 05 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அவசியம்.
2. 30 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தகுதியானோர் உரிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் 01.04.2017 சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு இல. 161, 1ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். எனும் முகவரியில் அமைந்துள்ள சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ்மாவட்ட காரியாலயத்திற்குச் சமுகம் தரவும்.

**உடனடித் தொடர்புக்கு இல- 075 761 0010**

**மேலதிக விவரங்களுக்கு அவசர அம்புலன்ஸ் சேவை இல: 021 321 4444**

**செ.செல்வரஞ்சன்
மாவட்ட ஆணையாளர்
சென்ஜோன் அம்புலன்ஸ்,
யாழ் மாவட்டம்.**

Accounts/விற்பனையாளர்கள் தேவை

எமது டிஸ் அன்ரனா மற்றும் கேபிள் ரீவி உதிரிப்பாக(யாழ்ப்பாண கிளை) விற்பனை நிலையத்திற்கு பொறுப்புடன் விற்பனை மற்றும் Accounts செய்யக்கூடிய பெண் ஒருவரும் உதவியாளர் ஒருவரும் உடன் தேவை. நிரந்தரமாக வேலை செய்யக்கூடியவர்களுக்கு EPF/ETF உட்பட திறமைக்கேற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும்.

**ÓSATSTECH ENGINEER'S Pvt Ltd.
298, K.K.S. ROAD, JAFFNA.**
**தொடர்பு 077 7710785**

சிறப்பு விலையில்

Desktop Pc & Laptop

Laptop
HP AMD Quad-core 1.8Ghz , 500GB , 4GB Ram , 15.6" - 43,000/=
HP 15-ay 119TU 7thG,i3,4GB,1TB,15.6" - 66,500/=
HP 15-ay 119TX 7thG,i3,4GB,1TB,2GB,15.6" - 68,000/=
Branded pc
HP Pro400G3TWR G3 I3,4GB,500GB,Dos - 73,500/=
HP Pro400G3TWR G3 i5,4GB,500GB,Dos - 85,000/=

Printers
Inject Printer
Hp 1112 Printer - 3600/=
Canon pixma ip2870s - 3500/=
Hp 2135 (Print/ Copy/ Scan) Printer - 10000/=
Hp 3835 (Print/ Copy/ Scan/Wireless) Printer - [illegible]
Brother DCP-300 (Print/ Copy/ Scan) Printer - 28,000/=
Laser 3 in 1 Printer
Samsung Xpress M2070 Printer - 20,500/=
Hp Laserjet M225dn Printer - 59,000/=
Laser Printer
Hp 1102 Printer - 15,300/=
Hp 1102w Printer - 17,900/=
Brother 1210w Printer - 12,500/=
Hp 201dw Wireless Printer - 36,000/=
Hp m402dn Printer - 46,000/=
Colour Laserjet Printer
HP CP1025 Printer - 41,000/=
Dotmatrix Printer
Epson LQ310 Dotmatrix Printer - 33,500/=

CCTV Security Camera
1 Mega pixel Camera - 3750/=
2 Mega pixel Camera - 4850/=
4CH DVR - 9500/=
8CH DVR - 14500/=
VR Camera - 14,950/=
Baby Monitering Camera 9,500/=
Wireless ip Camera KIT 64,500/=

Home Theatre Speakers
MiPAQ
280v2 - 3,350/=
M100v2 - 3,600/=
BT-600- 5,600/=
Zumba 2945 - 7,750/=
Conga2485 - 6,250/=
Karokke 17,000/=
USB FM micro SD
Condition apply
free Headphone (April 20 ம் திகதி வரை மட்டும்)

MICRO PC SYSTEMS
No - 218, Hospital Road , Jaffna.
E-mail - accountsjaffna@micropcsystems.com
Web : www.micropcsystems.com
071 035 6065 / 077 396 3280 / 021 222 5893
Jaffna : 218, Hospital Road, Jaffna - 021 222 5893
Nelliyadi : Pointpedro Road, Nelliyadi - 021 226 2929
Vavuniya : 66b, 2nd Cross Street - 024 222 1969

Short-term Consultancy Assignment for a Legal Consultant
Chief Secretary's Secretariat, Northern Province

Chief Secretary's Secretariat, Northern Province is intended to recruit a "Legal Consultant" on short term consultancy assignment mainly to assist the legal matters handled by the Chief Secretarys' Secretariat on behalf of Northern Provincial Council. The duration of this assignment will be six months but subject to extension depending on performance and availability of funds. The Legal Consultant will be stationed in the Chief Secretary's Secretariat to carry out his/her services. Key qualifications required for this position are;

- Attorney - at - law, any post graduate qualification will be treated as an additional qualification.
- At least o6 years of relevant and proven professional experience in the delivery of legal services
- Ability to write and speak in Tamil as a native and should have excellent written and spoken ability in English. Having decent speaking and written ability in Sinhala will be considered as a merit.
- Good knowledge with the provisions of the Constitution, the 13 th Amendment in particular and the Provincial Councils Act and be fluent with all matters pertaining to the devolved functions, and powers of the provincial Councils
- Any Previous experience with the provincial Councils, in Sri Lanka will be considered as additional qualification.

Interested applicants will have to share their Curriculum Vitae along with a cover letter addressed to " Chief Secretary, Chief Secretary's Secretariat, No.63, Nallur Cross Street, Nallur, Jaffna by post or through chiefsecnpc@gmail.com by email,on or before 11 th April 2017 Qualified applicants will be shared with the detail Terms of Reference and the final selection will be done after an interview with the panel to be nominated by the Chief Secretary.

**Mr. A.Pathinathan,
Chief Secretary
Chief Secretary's Secretariat, Northern Province.**

வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வில் 1½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

077 614 6434

வேலையாள்கள் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் வர்த்தக நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை.

021 227 0202, 077 722 2025

தவறிவிட்டது

இராஜகுமார் கிருஷ்ணா ஆகிய எனது தே.அ.அட்டை (900674066V) லைசன்ஸ், இன்சுரன்ஸ், ரைக்ஸ் ஆகியன அடங்கிய கறுப்பு நிற பேர்ஸ் முனியப்பர் கோயிலை அண்டிய பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தந்து தவவும்.

077 869 0897

தேவை

கொழும்பில் அமைந்துள்ள வீட்டில் தங்கியிருந்து சேவை செய்வதற்கு பெண் தாதியர் தேவை. (உணவு தங்குமிட வசதியுடன் 25000/=)

077 678 6312

# பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மட்டக்களப்பில்தான் அதிகம்

## வியாழேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச் 27
இலங்கையில் அதிகளவான பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களைக் கொண்ட மாவட்டமாக, மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகின்ற போதிலும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், கூட்டு அரசு எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.



இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பால்ச்சேனை தமிழ் மகா வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வு பாடசாலை அதிபர் பொ.இராமச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இந்தநிகழ்வில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர்மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

விடுதலைப் போராட்டத்தில் அதிக பங்களிப்பை கிழக்கு மாகாணம் வழங்கியுள்ளது அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் கூடுதலான பங்களிப்பை வழங்கியுள்ளது. அதனால் பல இழப்புக்கள் ஏற்பட்டிருந்தன. வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கட்டியெழுப்ப, தனி அமைச்சு உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

அல்லது கூட்டு அரசு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகளவான அதிகாரங்களை வழங்கி அபிவிருத்தி செய்ய வேண்டும். நல்லிணக்கம் என்பது செயற்பாட்டில் இருக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முன்னாள் பேராளிகள் உள்ளனர். இவர்களில் பலர் அங்கவீனமுற்ற நிலையில் உள்ளனர். அவர்களுக்கு வாழ்வாதர வசதிகள், தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தும் வகையில் எந்தவிதத் திட்டங்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இலங்கையில் எந்தவொரு மாவட்டத்திலும் இல்லாதவாறு வடக்கு கிழக்கு மாகாணத்தில் 1 இலட்சத்து 26 ஆயிரத்து 950 விதவைகள் உள்ளனர். இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் திட்டங்களை வகுக்க வேண்டும். என்றார். (ஐ-46)

## யாழ்ப்பாணச் சாலைக்கு புதிய முகாமையாளர்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணச் சாலைக்கு புதிய முகாமையாளராக அபுல் குதா மூஸீம் இலங்கைப் போக்குவரத்துச் சபையால் நியமிக்கப்பட்டார். அவர் இன்று காலை 9 மணிக்கு கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

## உள்ளூராட்சித் தேர்தல்; புதனன்று சந்திப்பு

பெரும் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில், , அரசியல் கட்சிகளுக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை தேர்தல்கள் ஆணையகக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.
உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்கள், தற்போதைய தேர்தல் முறையில் செய்யப்படவுள்ள மாற்றங்கள் ஆகியவை தொடர்பில் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ளதாகத் தேர்தல் ஆணையகத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ஐ)

## அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் அமைச்சர்களின் குழுவுக்குள் குழறுபடி

கொழும்பு,மார்ச் 27
அம்பாந்தோட்டை பன்னாட்டுத் துறைமுகத்தை சைனா மேர்ச்சண்ட் நிறுவனத்துக்கு வழங்குவதற்கான ஒப்பந்தம் தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக , அரசால் நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் உபகுழுவிலிருந்து மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க விலகவுள்ளார் என்று தெரியவருகிறது.
இந்தக் குழுவிலிருந்து தான் விலகிக் கொள்வதாக அவர் அரச தலைவருக்குக் கடிதமூலம் அறிவித்துள்ளார் எனவும் தெரியவருகிறது.
இந்தத் துறைமுக ஒப்பந்தம் தொடர்பில் சம்பிக்க முன்வைத்த சில ஆலோசனைகள் கவனத்தில் கொள்ளப்படாமலே ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருப்பதைக் காரணங்காட்டியே , அவர் உபகுழுவிலிருந்து விலகவுள்ளார்.
அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் கடந்த செவ்வாய்க்கிழமை இம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கையளவில் அங்கீகரிக்கப்பட்டதையடுத்து, சம்பிக்க தனது பதவிவிலகல் கடிதத்தை அரச தலைவருக்கு அனுப்பியுள்ளார் எனவும் தெரியவருகிறது.
அதேவேளை அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் உபகுழுவில் மலிக் சமரவிக்கிரம, அர்ஜுன ரணதுங்க, சுசில் பிரேமஜயந்த, பாட்டலி சம்பிக்க ரணவக்க, மகிந்த அமரவீர, சாகல ரத்னாயக்க ஆகியோர் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரச பெருந்தோட்டக் காணிகள் தொழிலாளர்களுக்கே பகிரப்படும்

### அமைச்சர் மனோ கணேசன் அறிக்கை

கொழும்பு,மார்ச் 27
அரச பெருந்தோட்டக் காணிகள் கண்டி, மாத்தளை மாவட்டங்களில், அந்தந்தப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களுக்கும்,தோட்டங்களை அண்மித்து வாழும் சிங்கள மக்களுக்கும் பிரித்து வழங்கப்படும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க என்னிடம் உறுதியளித்துள்ளார். இவ்வாறு தமிழ் முற்போக்குக்கூட்டணித்தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும், அரச பெருந்தோட்ட துறைசார்ந்த அமைச்சர் கபீர் காசிமுக்கும் இடையில் கடந்தவாரம் நடைபெற்ற பேச்சுக்களையடுத்து. கண்டி,மாத்தளை மாவட்டங்களைப் பெரும்பாலும் உள்ளடக்கிய அரசுக்குச் சொந்தமான மூன்றுபெருந்தோட்ட நிறுவனங்களின் காணிகள் வெளியாருக்கும், அரசின் ஏனைய அபிவிருத்தி நோக்கங்களுக்கும் பிரித்து வழங்கப்படுவது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில் தலைமை அமைச்சருடன் இடம்பெற்ற சந்திப்பில், இந்தத் தோட்டங்களில் வாழும் மலையகத் தமிழ் குடும்பங்களுக்கு வாழ்வாதார நோக்கில் காணிகள் பிரித்துக் கொடுக்கப்படும் எனவும், தோட்டங்களை அண்மித்து வாழும் கிராமத்தவர்களுக்கும் இதேபோல் காணிகள் தேவைப்படுவதாக குறிப்பிட்ட மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருப்பதாக தலைமை அமைச்சர் தெரிவித்தார்.
இந்தத் தோட்டங்களில் வாழும், இந்நாள், முன்னாள் மலையக தமிழ் தொழிலாளர் குடும்பங்களின் எண்ணிக்கைகள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய காணிகளின் பரப்பளவுதொடர்பான விவரங்களைக் கண்டறிந்து, வாழ்வாதாரக் காணிகள் அதே தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும். இவை வீட்டுத் திட்டங்களுக்காக வழங்கப்படுகின்ற ஏழு பேர்ச் காணியுடன் தொடர்பில்லாத வாழ்வாதாரக் காணிகளாக கருதப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டையும் தலைமை அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார்.
கண்டி, மாத்தளை மாவட்ட தோட்ட மற்றும் கிராமத்து மக்களுக்கு காணிகள் வழங்கப்படும் செயற்பாடுகள் எந்தவித முரண்பாடுகளும் இல்லாத விதத்தில், கவனமாக முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் தலைமை அமைச்சருக்குத் தெரியப்படுத்தினோம். என்றுள்ளது. (ஐ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு

28.02.2017 இறைபதம் அடைந்த எம் குலவிளக்கு
பாடகர் S.G. சாந்தன் அவர்களின்
31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி நிகழ்வும்
நாளை (28.03.2017) செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில்
எமது இல்லத்தில் இடம்பெற உள்ளதால் உறவுகள்.
நண்பர்கள். கலைஞர்கள் அனைவரையும் இந் நிகழ்வில்
கலந்துகொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்குமாறு வேண்டி நிற்கின்றோம்.

விவேகானந்த நகர்,
கிளிநொச்சி.
குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1935.11.04

மறைவு
2014.03.22

அமரர் தம்பு நடேசு

(Retired Senior Tax officer, Department of Inland Revenue)

திதி - அபரபக்க சஷ்டி

எத்தனை ஆண்டுகள் நகர்ந்தாலும்
எம் ஈரவிழிகள் உங்கள் நினைவில்
நீளும் காலப் பெரு வெளியில்
எம்முடன் நீழுகின்றன உங்கள் நினைவுகள்......

381, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தெய்வத்திரு. முத்தையா மலராசா
(முருகன் கோயிலடி, பேசாலை மன்னார்)

பிறப்பு
13.10.1947

இறப்பு
27.03.2015

கனிவாகப் பேசி இதமாகச் சிரித்து
என்றும் புன்னகை மாறாமல்
இருக்கும் அன்பு ஐயாவே
கரைந்தோடி விட்டதே இரண்டு
ஆண்டுகள்

கண்மணி போல் காத்தவரே
எங்கள் அன்பு அப்பாவே
மண்ணில் இருக்கும் வரை
மறப்போமா உங்கள் நினைவை

உயிர் பிரியும் வலியை
உங்கள் பிரிவில் உணர்கின்றேன்
என் அன்புக் கணவரே
காவியமாய் எம் மனதில்
என்றென்றும் வாழ்ந்திடுவீர்

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்.

# ‘சிங்ஹலே’ இனவாதம் மனிதாபிமானத்தால் முறியடிப்பு

## தேசிய சமாதானப் பேரவை பெருமிதம்

மட்டக்களப்பு,மார்ச் 27
“அரச தலைவரின் சொந்தப் பிரதேசமான பொலன்றுவையில் உருவாக்கப்பட்ட ‘சிங்ஹலே’ இனவாதம் ‘மனிதாபிமானத்தால்’ முறியடிக்கப்பட்டுள்ளது.” இவ்வாறு தேசிய சமாதானப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய சமாதானப் பேரவையின் ‘மாவட்டக் குழுக்கள் அடைந்த வெற்றிகள்’ என்ற அறிக்கை நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவை அங்கத்தவர்களுக்கு விநியோ கிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“இன்று நாம் பொலன்னறுவை என அழைக்கப்படும் பிரதேசம் புராதன காலத்தில் புலதிசிபுர எனும் பெயரால் அழைக்கப்பட்டு புகழ்பெற்று விளங்கியது. வடக்கு கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களை எல்லையாகக் கொண்டிருக்கும் பொலன்னறுவைப் பூமி அன்றைய அரசர்களின் முக்கிய கவனத்தை ஈர்த்த பிரதேசமாகும். அவ்வாறே தற்போதைய அரச தலைவரையும் உருவாக்கிய பெருமை பொலன்னறுவைக்கு உண்டு. எனினும், கடந்த 30 வருட போர்க்கால வரலாற்றை உற்றுநோக்குகின்ற போது, எல்லையில் உள்ள அந்த மக்களுக்கு, அவர்களது வாழ்க்கை ஒரு சுகமான அனுபவமாகஇருந்திருக்கவில்லை. அது அவர்களுக்கு பல நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்களை ஏற்படுத்தி இருந்திருக்கின்றது. பொலன்னறுவையில் வாழ்கின்ற பெரும்பான்மையினரான பௌத்த மத சிங்கள மக்கள் தென்னிலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்டு, குடியேற்றத் திட்டங்கள் மூலம் குடியமர்த்தப்பட்டவர்களாவர். அப்படிப்பட்ட சமூகத்துக்குள்ளேயே வாழ்கின்ற மக்களுக்குள் பல குழுக்கள் உருவாகி நேர்ச்சிந்தனைக்குப் பதிலாக, பாதக சிந்தனைகளை உருவாக்கி அதை இனவாதமாகஉருவேற்றிக்கொண்டனர். அதன் விளைவாக ‘சிங்ஹலே’ எனும் பெயரில் இனவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. ‘சிங்ஹலே’ ஸ்ரிக்கர்கள் பொலன்னறுவைப் பிரதேசத்தில் பரவலாக வாகனங்களில் ஒட்டப்பட்டதால் விரும்பியோ, விரும்பாமலோ பலரை இனவாத சதிவலைக்குள் சிக்க வைக்க இனவாதிகள் முனைந்தனர். இதனை முளையிலேயே கிள்ளி எறியும் விதமாக தேசிய சமாதானப் பேரவையின் பொலன்னறுவை மாவட்ட மதங்களுக்கிடையிலான நல்லிணக்கக் குழு பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு ‘சிங்ஹலே’க்குப் பதிலாக ‘மனிதத்துவத்தை மதிப்போம்’ எனும் மாவட்டம் தழுவிய செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் உண்மையான வீரம் என்பது இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்துகின்ற மகோன்னத முயற்சிதான் என்பது ‘மனிதாபிமானத்தை மதிப்போம்’ எனும் ஸ்ரிக்கர் மூலம் பிரபல்யப்படுத்தப்பட்டது. எமது பரப்புரையை முழு மனதோடு விளங்கிக் கொண்ட நல்லிணக்கத்தை நேசிக்கும் நல்ல மனம் கொண்ட மக்கள் தாங்களாகவே முன்வந்து எமது ஸ்ரிக்கர்களையும், துண்டுப் பிரசுரங்களையும் தமது வாகனங்கள், வீடுகள், காரியாலங்கள், வியாபார நிலையங்களில் அறிவித்தலாக வைத்திருந்தனர். அதன் மூலம் அடிப்படைவாத சக்திகளுக்கு அடிபணிய மாட்டோம் என்பதையும் பொலன்னறுவை மக்கள் புலப்படுத்தி நின்றனர். அடிமட்ட விவசாயிகள், அரச ஊழியர்கள், அதிகாரிகள், பொலிஸார், பொதுமக்கள், இளைஞர் யுவதிகளோடு அரச தலைவரின் பொலன்னறுவை மாவட்ட அலுவலகத்தில் இருந்த அதிகாரிகளும் எம்மோடு இந்த தேசத்தைக் காக்கும் ‘மனிதாபிமானத்தை மதிப்போம்’ பரப்புரைக்கு ஆதரவு தெரிவித்து இணைந்து கொண்டனர். இது எமக்கு ‘சிங்ஹலே’ இனவாதத்தை முறியடிப்பதில் பெரும் வெற்றியாக அமைந்து விட்டிருந்தது. என்றுள்ளது. (ஜ46)

# உலக நாணய நிதியத்துடன் இலங்கை இணக்கப்பாடு

கொழும்பு,மார்ச் 27
இலங்கை, உலக நாணய நிதியத்துடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் இணக்கப்பாட்டுடன் செயற்பட தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முக்கிய சில விடயங்கள் தொடர்பாக அதிகாரிகள் மட்டத்தில் இணக்கப்பாடு காண்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கையில் நிதி முகாமைத்துவம் தொடர்பான சில தீர்மா னங்கள் எடுக்கப்பட்டுள்ளன. புதிய வருமான வரிகள் சிலவற்றை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, நிதியமைச்சு மற்றும் வேறு அமைச்சுக்கள் சிலவற்றுக்கிடையில் பொருளாதார நடவடிக்கை தொடர்பாக அண்மையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜீன் மாதமளவில் உலக நாணய நிதியத்தால் இலங்கைக்கு மேலும் கடனுதவி வழங்கப்படவுள்ளது. இலங்கை தனது வெளிநாட்டு இருப்பை 1.5 பில்லியனாக உயர்த்திக் கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளது எனவும் தெரிய வருகிறது. (ஐ)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் அவசியம்

*கல்வி இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து*

கொழும்பு,மார்ச் 27
பெண்கள் தொடர்பான குற்றங்களை விசாரிப்பதற்கு சிறப்பு நீதிமன்றங்கள் இலங்கையில் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கான வேலைத்திட்டம் ஒன்றை அரசு ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செயற்படுத்தினால் மட்டுமே பெண்கள் தொடர்பான குற்றங்களையும், வழக்குகளையும் விரைவாக நிவர்த்தி செய்ய முடியும். இதன் மூலம் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்”

இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு மலையக மக்கள் முன்னனியின் மகளிர் அணியால் ஏற்பாடு செய்யப்பட்ட பெண்கள் தினம் மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாதன் ஆலய மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பெண்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு அவர்களின் தனிப்பட்ட சுய கௌரவத்தைக் கருத்தில் கொண்டு தனியான நீதிமன்றங்கள் தேவைப்படுகின்றது. இன்று இலங்கையில் பெண்கள் தொடர்பான பாலியல் வழக்குகள் நீண்ட காலம் எடுக்கின்றது.வழக்கு நடைபெறுகின்ற பொழுது சாட்சிகள் பலர் உயிரிழந்துவிடுகின்றனர். அதன் காரணமாக பல வழக்குகளில் பெண்களுக்கு கிடைக்க வேண்டிய நீதி கிடைப்பதில்லை.’ எனவே இவ்வாறான வழக்குகளை விசாரிப்பதற்கு சிறப்பு நீதிமன்றங்களை நீதி அமைச்சு ஏற்படுத்த வேண்டும். என்றார்.

# கடற்படை சிப்பாய்க்கு விளக்கமறியல்

திருகோணமலையிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த பேருந்தில் போலி பிஸ்ரல் துப்பாக்கி மற்றும் கத்தியைக் காட்டி பயமுறுத்திய கடற்படைச் சிப்பாயை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றப் பதில் நீதிவான் எம்.பீ. அன்பார் நேற்று உத்தரவிட்டார். பேருந்தில் பயணித்த போது இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தால், விடுமுறையில் சென்ற கடற்படைச் சிப் பாய் மற்றைய நபருக்கு போலி பிஸ்ரல் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியுள்ளார். குறித்த பயணி மொறவெவபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இதனடிப்படையில் கைது செய்யப்பட்ட சிப்பாய் நீதிமன் றில் நேற்று முன்னிலைப்படுத் தப்பட்டார். (ஐ)

## மரண அறிவித்தல்



### நல்லையா நாகேஸ்வரி

சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், நாவலடி லேன், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா நாகேஸ்வரி 24.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லையா அவர்களின் அன்பு மனைவியும், பாலேஸ்வரி, திருக்கேதீஸ்வரி, காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், சுந்தரலிங்கம், விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராகினிதேவி (நெதர்லாந்து), காலஞ்சென்ற சுகந்தி ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயபாஸ்கரனின் (நெதர்லாந்து) அன்பு மாமியும், மதுஷனா (நெதர்லாந்து), பானுமதி (நெதர்லாந்து), பகிரதன் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இல்லத்தில் வைக்கப்பட்டு 28.03.2017 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் தகனக்கிரியைக்காக குடும்ப மயானமான கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

பிறப்பு
22 . 06 . 1948



இறப்பு
26 . 03 . 2017

### சோமசுந்தரம் நடராசா

வல்வெட்டி வன்னிச்சி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கு ( பழைய தபாற்கந்தோர்) வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் நடராசா 26.03.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் (உபதபாலதிபர்) - சிவபாக்கியவதியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜினியின் பாசமிகு கணவரும், நடனசபேசன் (நிரோசன் -யாழ். அத்தியடி இந்துக்கல்லூரி A/L 2016) அன்புத் தந்தையும், கணேசலிங்கம் (சுவிஸ்), அன்னலட்சுமி (புளியம் பொக்கணை)ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசேந்திரன் (ராசன்), பிரபாகரன் (பிரபா - Quest net - Global life Style Lanka), இந்துமதி, ரமேந்திரன், சந்திரமதி (லங்கா சித்த மருத்துவக் கல்லூரி மாணவி), வளர்மதி (யாழ். அத்தியார் இந்துக்கல்லூரிA/L 2017 மாணவி ), குமார், யுகந்தன் (நில அளவைத் திணைக்களம்), சயந்தன் (பொறியியலாளர்), தர்சிகா (தபால் அதிபர்), மலர்மகள் (வெளிக்கள உத்தியோகத்தர்), காலஞ்சென்ற சுதாஜினி, காண்டீபன், சுதர்சினி, சிவாஜினி, சுதர்சன், ஹரன் (மலிபன்) பௌசிகா (ஜேர்மனி), மயூரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், புவனேந்திரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மயில்வாகனம் (ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர்), தெய்வேந்திரன் (ஆயுர்வேத வைத்தியர்), சிவசுப்பிரமணியம் (லண்டன்), குலேந்திரன் (ஓய்வுபெற்ற மின்சார சபை வெளிக்கள உத்தியோகத்தர்), அருந்ததி, சகுந்தலா (குடும்ப நல உத்தியோகத்தர்), இராசாத்தி, முத்துலட்சுமி, பத்மாதேவி (காலஞ்சென்ற), கண்மலர் ஆகியோரின் மைத்துனரும்,கவிதா (இ.போ.ச.(வ), லிகிதர்), கண்ணதாசன் (ஜேர்மனி), விஜிதா (பிரான்ஸ்), சாங்கர், சியாயினி, சுஜாஜினி, லக்சன், யுரேன், சுரேந்தர், குமார் ஆகியோரின் சித்தப்பாவும்,மிதுன், தர்வின், ஷாதனா, கிருத்திக்ஷன், கிஷாணி, கரிஸ், கருண், (ஜேர்மனி), அதர்வா (பிரான்ஸ்), லக்ஷ, அக்ஷயன், ரம்யசிறி, நிருஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (27.03.2017) திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் நடைபெற்று மு.ப 9.30 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக சீயக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## இருட்டுமடு மக்களுக்காக புதிய வாய்க்கால்

முல்லைத்தீவு, மார்ச் 27
உடையார்கட்டு, இருட்டுமடு மக்களின் விவசாய நடவடிக்கைக்காகப் புதிய வாய்க்கால் அமைக்கப்படவுள்ளது. இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.
அவர் அனுப்பியுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அதில் உள்ளதாவது:
இருட்டுமடு மக்களின் குறைகேள் சந்திப்பு அண்மையில் நடைபெற்றது. அதில் இந்த வாய்க்கால் அமைப்பது முக்கியமானது என்று மக்கள் சுட்டிக்காட்டினர். அவர்களின் கோரிக்கையை மாகாண விவசாய நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் பணியாளர்களின் கவனத்துக்குக் கொண்டு சென்றேன்.
உடையார்கட்டுக் குளத்தின் கீழ் இந்தப் பகுதி வரையுள்ள வாய்க்காலின் தொடர்ச்சியாக இருட்டுமடு மக்களின் விவசாயத் தேவைக்காக 2 மில்லியன் ரூபா செலவில் வாய்க்கால் அமைக்கப்படவுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் அல்லது மே மாதமளவில் இந்தப் பணிகளின் ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்படலாம்." என்றுள்ளது. (ற-21)

### மீன்பிடி அமைச்சர் உத்தரவை நடைமுறைப்படுத்துவதில்

# அதிகாரிகள் அசமந்தம்

### முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, மார்ச் 27
நாயாறு களப்பில் தொழில் செய்யும் 23 படகுகளின் அனுமதியைத் தடை செய்யுமாறு பணிப்பாளர் நாயகத்தால் மாவட்டப் பிரதிப் பணிப்பாளருக்கு எழுத்தில் அறிவிக்கப்பட்டது. இருந்தும் அந்தப் பகுதியில் இயந்திரப் படகு மூலமான தொழில் தற்போதுவரை நடக்கின்றது.
இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா குற்றஞ் சாட்டினார்.
அவர் தெரிவித்ததாவது:
இந்த ஆண்டு மாவட்ட நீர்வாகங்களுக்குத் தெரியாது திணைக்களத்தால் நாயாறு களப்பில் தொழில் செய்ய தென்னிலங்கை மீனவர்கள் 23 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டது.
அவற்றை உடனடியாக நிறுத்துங்கள் என்று மீன்பிடி அமைச்சர் அமரவீர கடந்த புதன்கிழமை உத்தரவிட்டார். அதற்கமைய அனுமதிகளை உடன் இரத்துச் செய்யுங்கள் என்று பணிப்பாளர் நாயகம் மாவட்ட பிரதிப் பணிப்பாளருக்குக் கடந்த வியாழக்கிழமை எழுத்தில் உத்தரவிட்டார்.
அது நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் 23 படகுகளும் இன்றுவரை அந்தப் பகுதியில் தொழில் செய்கின்றன. செம்மலை, அளம்பில், நாயாறு பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 800 மீனவ குடும்பங்கள் இதனால் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர்.
இந்தப் பிரச்சினைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் உதவியுடன் மீனவ பிரதிநிதிகள் கொழும்பு சென்று மேற்படி தீர்வைப் பெற்றோம். அமைச்சர் மூலம் பணிப்பாளர் நாயகத்தின் உத்தரவுகளை நடைமுறைப்படுத்த மாவட்ட திணைக்களம் முன்வர வேண்டும். என்றார்.
"கடந்த வியாழக்கிழமை இந்த உத்தரவு எமக்குக் கிடைத்தது. உடனடியாக நாயாறு களப்புக்குச் சென்றோம். அங்கு 23 படகுகளின் உரிமையாளர்களும் இருக்கவில்லை. தொழிலுக்குச் சென்றிருந்தனர். எனினும் அவர்களுக்கு உத்தரவு தொடர்பாகத் தெரியப்படுத்தித் திரும்பினோம். தற்போதும் அங்கு தொழில் செய்யப்படுகின்றது என்று கூறப்படுவது தொடர்பாக இன்று நேரில் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்." என்று நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-101)



## தட்டுவன்கொட்டியில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு

### நீர்த்தாங்கியை சீரமைக்க கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 27
கிளிநொச்சி, தட்டுவன்கொட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர் தாங்கி போரால் சேதமடைந்துள்ளது. குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. நீர் தாங்கியைச் சீரமைத்து குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
"தட்டுவன்கொட்டி கிராமம் கிளிநொச்சி மாவட்டத்தின் கரையோரக் கிராமம். இங்கு ஆரம்பம் முதலே குடி தண்ணீர் பிரச்சினை இருந்தது. கிணறுகள் உள்ளபோதும் அவற்றில் உள்ள நீர் உவர் தன்மையுடன் உள்ளது.
இயக்கச்சியில் உள்ள பொதுக் கிணறு ஒன்றில் இருந்து நீர் பெறப்பட்டு தட்டுவன்கொட்டி கிராமத்தில் நீர் சுத்திகரிப்புத் தொட்டி மூலம் சுத்திகரிக்கப்பட்டு நீர் தாங்கியில் சேமிக்கப்பட்டு குழாய்கள் மூலம் குடி தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.
போரின்போது குடி தண்ணீர் தாங்கி சேதமடைந்தது. குடிதண்ணீர் சுத்திகரிப்புத் தொட்டி பாதுகாப்பாக உள்ளது. குடி தண்ணீர் தாங்கியைச் சீரமைத்து குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.
"போருக்கு முன்னர் இந்த நீர் தாங்கியைப் பயன்படுத்தி குடி தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. போரில் நீர்த் தாங்கி சேதமடைந்தது. நீர்த் தாங்கியைச் சீரமைப்பதற்காக அதிகாரிகள் வந்து பார்வையிட்டுள்ளனர். எதிர்வரும் ஒகஸ்ட் மாதமளவில் சீரமைப்புப் பணிகள் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது." என்று தட்டுவன்கொட்டி கிராம அலுவலர் தெரிவித்தார். (ற-6)


## காணி சிறப்பு நடுவர் சபை ஜூன் மாதம்

யாழ்ப்பாணம், மார்ச் 27
காணி சம்பந்தமான சிறப்பு நடுவர் சபையை நிர்வகிக்கும் சிறப்பு நடுவர் குழு நியமிக்கப்பட்டதை அடுத்து ஜூன் மாதம் காணிக்கான சிறப்பு நடுவர் சபை ஆரம்பிக்கும். அதற்கான நடவடிக்கையை நடுவர் ஆணைக் குழு மேற்கொண்டுள்ளது.
காணி சம்பந்தமான சட்டம், நிர்வாகம் தொடர்பில் விரிவான விளக்கத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் காணி சம்பந்தமான சிறப்பு நடுவர் சபை ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-50)

## போசாக்கு உணவுப் பொதியில் அதிக விலைகளில் பொருள்கள்

### கிளி. மாவட்ட கர்ப்பிணிகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி மார்ச் 27
கிளிநொச்சி மாவட்டத்தில் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படும் ரூபா 2 ஆயிரம் பெறுமதியான போசாக்கு உணவுப் பொதியிலுள்ள பொருள்கள் கட்டுப்பாட்டு விலைகளில் வழங்கப்படுவதில்லை என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது.
கர்ப்பிணிகளுக்கு அரசினால் மாதம் தோறும் 2 ஆயிரம் ரூபா பெறுமதியான போசாக்குப் பொதி வழங்கப்படுகின்றது. கிளிநொச்சியில் அந்தப் பொதிகள் பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமே வழங்கப்படுகிறன. பலநோக்கு சங்கங்கள் பொருள்களின் கட்டுப்பாட்டு விலைகளை விட அதிக விலையில் பொருள்களைத் தருகின்றன என்று பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் குற்றஞ் சாட்டுகின்றனர்.



"முன்னர் கடைகள் மூலம் பெற்றுக்கொள்கின்ற போது நிறையப் பொருள்களை பெற்றுக்கொள்ள கூடியதாகவும் இருந்தது. பலநோக்கு கூட்டுறவு சங்கள் பொருள்களுக்கு அதிக விலைகளை இட்டு பொருள்களைக் குறைவாகத் தருகின்றனர். பொதியும் காலம் தாழ்த்தியே கிடைக்கின்றது. அனைத்துப் பலநோக்கு சங்கங்களிலும் பொதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையுள்ளது." என்று அவர்கள் கூறு கின்றனர்.
"மாவட்ட செயலகத்தால் வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டில் பொருள்களின் விலைகள் குறிப்பிடப்பட்டிருக்கும். அதன்படியே வழங்கப்படுகின்றன. கர்ப்பிணிகளே பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் காட்டுகின்றனர்."என்று கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் தெரிவித்தார். (ற-6)

## விவசாயக்காணிகளின் பாதைகளை விடுவிக்குக

### ஒட்டுசுட்டான் விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 27
ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் நிலையத்தின் கீழுள்ள விவசாய நிலங்களுக்குச் செல்லும் வீதிகளை மீளத் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.
முன்னைய காலங்களில் பாவனையில் இருந்த விவசாய நிலங்களுக்குச் செல்லும் வீதிகள் தற்போது பாவனையில் இல்லை. விவசாயிகள் பல இடர்களுக்கு மத்தியிலேயே விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.
முன்னர் இந்தப் பாதைகள் குடியிருப்பு நிலத்துக்கும் விவசாய நிலத்துக்கும் ஊடாக இருந்தன. தற்போது வேலிகள் அகற்றப்பட்டு குடியிருப்புக் காணிகளுடன் பாதைகளும் இணைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் உரம் கொண்டு செல்லவோ, உழவு இயந்திரங்களைக் கொண்டு செல்லவோ முடியாது திண்டாடுகின்றனர். கமப் பாதைகள் மீண்டும் திறக்கப்பட வேண்டும். வயல் வேலிகளை குடியிருப்பு வேலிகளுடன் இணைப்பதால் கால்நடைகளின் தொல்லையும் கட்டுப்படுத்தப்படும்." என்று அவர்கள் தெரிவித்தனர்.
"எமது ஆளுகைக்கு உட்பட்ட வயல்நிலங்களுக்குச் செல்லும் பாதைகளை வயலாக்கி உள்ளனர் என விவசாயிகள் எவராலும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படவில்லை. உரியவர்களிடம் இருந்து முறைப்பாடு கிடைக்கும் போது நடவடிக்கை எடுப்பதற்கு பின்னிற்பதில்லை. அலைகரைப் பகுதியில் பிரச்சினை ஒன்று விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட போது பிரதேச செயகத்துடன் இணைந்து பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது." என ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர் தெரிவித்தார். (ற-7-500)

## கிளிநொச்சி மாவட்டத்துக்கு 500 கல் வீடுகள்

கிளிநொச்சி, மார்ச் 27
கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சு 8 லட்சம் ரூபா பெறுமதியான 500 கல் வீடுகளை வழங்கியுள்ளது என்று மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன.
இந்த ஆண்டு 500 கல் வீடுகளை மீள்குடியேற்ற அமைச்சு வழங்கியுள்ளது. அவை மாவட்டத்தின் 4 பிரதேச செயலர் பிரிவுகளுக்கு பகிரப்பட்டுள்ளன. வீடுகளுக்கான அனுமதியும் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு 210 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 10 வீடுகள் இந்தியாவில் இருந்து திரும்பி மீள்குடியமர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டன. கண்டாவளை, பூநகரி பிரதேச செயலர் பிரிவுகளுக்கு 100 வீடுகளும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு 90 வீடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.
அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்துக்கு இந்த ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் 700 வீடுகளும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101)

# சிறப்புத் தேவையுடையோருக்கு இயன்றளவு உதவி வழங்கப்படும்

## மீள்குடியேற்ற அமைச்சின் இணைப்புச் செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 27

சிறப்புத் தேவையுடைய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான உதவிகள் இயன்ற அளவு வழங்கப்படும்.

இவ்வாறு மீள்குடி யேற்றம், சிறைச்சாலை இந்து கலாசார அமைச்சின் இணைப்புச்செயலாளர் ஜே.பி.கொஸ்தா தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லத்தைச் சேர்ந்த சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்குப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லத்தலைவர் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விபணிப்பாளர் எஸ். நாகரட்ணம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மீள்குடியேற்றம் சிறைச்சாலை இந்து கலாசார அமைச்சின் இணைப்புச்செயலாளர் சிறப்பு தேவையுடைய, பார்வையிழந்த மாணவர்களின் கல்வியை வளப்படுத்துவதற்காக 12 ஒலிப்பதிவு கருவிகள் வழங்கினார்.

நிகழ்வில் செவிப்புலன் மற்றும் பார்வையிழந்த மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

(ற21)





# காணிகளை விடுவிக்க வேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்து

மன்னார், மார்ச் 27

முள்ளிக்குளம் கிராம மக்களின் வாழ்வாதாரமான விவசாயமும், மீன்பிடியும் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அந்த மக்களின் நிலங்களை விடுவிக்க அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு வன்னி நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

முள்ளிக்குளம் மக்கள் நடத்தி வரும் தொடர் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற மக்களுக்குச் சொந்தமான காணிகளை அரசு எவ்வளவு விரைவாக கையளிக்க முடியுமோ அதற்கான துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை - என்றார்.

(ற-21.56)

# தீர்வு இல்லையேல் உணவை ஒறுப்போம்

## நிலம் மீட்கும் வரை ஓயோம் என முள்ளிக்குளம் மக்கள் திட்டவட்டம்

மன்னார், மார்ச் 27

எமது நிலத்தை மீட்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை. உரிய தீர்வு கிடைக்காதுபோனால் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் இறங்கவும் தயங்க மாட்டோம். இவ்வாறு மன்னார், முள்ளிக்குளம் மக்கள் உறுதியுடன் தெரிவித்தனர்.

தமது பூர்வீகக் காணிகளைக் கையகப்படுத்தி வைத்துள்ள கடற்படையினர் அவற்றில் இருந்து வெளியேற வேண்டும் என்று வற்புறுத்தி முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்கள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் போராட்டம் நேற்று 4ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

அவர்களின் போராட்டத்துக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். பொது அமைப்புகள், சிவில் அமைப்புகள், அருட் தந்தையர்கள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், தொண்டு அமைப்புகளின் பிரதிநிதிகள், மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பல தரப்பினரும் போராடும் மக்களைச் சந்தித்துத் தமது ஆதரவைத் தெரிவிக்கின்றனர். அந்தப் பகுதி முஸ்லிம் மக்களும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

முசலி பிரதேச செயலரும், பிரதேச உதவிச் செயலரும் மக்களைச் சந்தித்துச் சென்றுள்ளனர். எனினும் எந்த முன்னேற்றகரமான நடவடிக்கையும் இதுவரை நடக்கவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

"போராடியே எமது உரிமையைப் பெற வேண்டியுள்ளது. வடக்கில் நடத்தப்பட்ட போராட்டங்களால் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. எமது நிலங்களும்





விடுவிக்கப்படும் வரை போராட்டத்தைக் கைவிட மாட்டோம். இந்தப் போராட்டத்துக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் இறங்கவுள்ளோம்." என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தெரிவித்தனர்.

(ற21,56)

# அன்பு செய்பவரே இறைவனின் மக்கள்

அன்பினால் இயங்குவதே உலகம்,அன்புக்காக ஏங்குவதே உள்ளம் ஒவ்வொருவரும் தம்மை மற்றவர்கள் அன்பு செய்யவேண்டும் என்றே விரும்புவார்கள். அந்த அன்பு ஒருவருக்கு எவ்வளவு கிடைக்கின்றதோ அதனைப் பொறுத்தே அவரது மகிழ்ச்சியும் இருக்கும். ஒரு குடும்பத்திலே தாய் தன் பிள்ளைகள் எல்லோரையும் ஒரே விதமாகவே அன்பு செய்வாள். ஆனால் அந்த அன்பு பாகுபாடு உள்ளதாக மாறும்போது அந்த அன்பு கிடைக்காத பிள்ளை வம்பு செய்ய வெளிக்கிடுகின்றது. கிடைக்காத அன்பை வேறு எங்காவது பெறவேண்டும் என்று முனையும்போது அங்கேயும் கிடைக்காத போதே கோபம், வெறுப்பு, பகைமை, கொடூரமான செயற்பாடுகள் வெளிப்படுகின்றன. அன்பே உலகை ஆளும். அன்பில்லாமை அழிவையும் உண்டாக்கும்.

இயேசு ஆண்டவர் அன்பின் மகத்துவத்தை உணர்ந்தே "உங்கள் பகைவரையும் அன்பு செய்யுங்கள் உங்களைத் துன்புறுத்து வோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள் (மத்5:44,45) என்று கூறியுள்ளார் பகைவரை வெறுப்பவர்களே இருக்கின்றார்கள். பகைவரை அன்பு செய்பவன் கோளை என்று பரிகசிப்பார்கள். முற்காலத்தில் கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல் என்று பழிக்குப் பழிவாங்கும் சமூகமே யூத பரம்பரையில் இருந்து வந்தது. ஆனால் இயேசு இதை மாற்றவே பகைவரை மன்னிக்க வேண்டும். அதனாலே தீமைகள் நிகழாது தடுக்கலாம் என்பதை பாவிப் பெண்ணை மன்னிப்பதன் மூலமும் தனது காதைத் துண்டித்தவனை மன்னித்தவன் மூலமும், எல்லாவற்றுக்கும் மேலாக தம்மைச் சித்திரவதை செய்து சிலுவையில் அறைந்தவர்களையே "இவர்கள் அறியாது செய்கின்றார்கள் பிதாவே இவர்களை மன்னித்தருளும் என்று கூறியதன் மூலமும் மன்னித்து அன்பு செய்த மாபரனானார் இயேசுகிறிஸ்து.




பகைமை கொள்வதினாலே எமது மனத்திலே நிம்மதி ஏற்படுவதில்லை மகிழ்ச்சி நிலைப்பதில்லை. கோபம், பகைமை உணர்வுகள் தலதூக்கி உளத்தாக்கம் ஏற்பட்டு நோய்வாய்ப்பட்டு மற்றவரால் விரும்பப்படாதவர்களாக எமது செயல்கள் அமையும். பகைவரோடு ஒப்புரவாகும்போது இருவரிலும் மனமாற்றம் ஏற்படும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதிலும் அக்கறை செலுத்துவதிலும் அன்பாக வாழவும் முன்னையதிலும்பார்க்கக் கூடிய அன்பு ஏற்படும். மகிழ்ச்சி, உறவு, பகிர்தல் என்பன உருவாகும். இயேசு மன்னித்தவர்கள் எல்லாம் அவருக்காக வாழ்ந்தார்கள். மன்னிப்பைக் கொடுத்துப்பாருங்கள் அதன் மகத்துவம் விளங்கும். மன்னிக்காமையே சகல தீமைகளையும் உருவாக்ககாரணியாகின்றது.மன்னிக்காமை தொடரும்போது மானிட சமுதாயம் பல தீமைகளை எதிர்கொள்ளவேநேரிடும். இறைவார்த்தை சொல்லும் உண்மைகளை எம்வாழ்வில் கடைப்பிடிப்போம். இறைவனின் அருளைப் பெற்றுக் கொள்வோம்.

அன்ரனி பீற்றர்
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்

### கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள

# சமுர்த்தி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 27

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்ப ஆவன செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 95 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. 95 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் பலர் தற்போது பணியில் இல்லாததால் சமுர்த்திப் பணிகளை முன்னெடுப்பதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

தற்போது 24 பிரிவுகளுக்கு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இல்லை. இந்த 24 பேரில் 7 பேர் நியமனத்தின்போது போலிச் சான்றிதழ் சமர்ப்பித்தனர் என்ற குற்றச்சாட்டில் பணி நீக்கப்பட்டுள்ளனர். 6 பேர் நிதி சார் விடயங்கள் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளனர். 11 பேர் பணி மாறிச் சென்றுள்ளனர்.

காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப அதிகாரிகள் ஆவன செய்யவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

(ற-101)

## வானூர்தி பராமரிப்புச்சேவை நிலையத்தை இலங்கையில் அமைக்க ரஷ்யா யோசனை

இலங்கையில் பயன்படுத்தப்படும் ரஷ்யத் தயாரிப்பு உலங்கு வானூர்திகளின், பராமரிப்பு சேவை நிலையம் ஒன்றை இலங்கையில் அமைப்பதற்கான யோசனையை ரஷ்யா முன்மொழிந்துள்ளது.

இராணுவத் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ரஷ்யாவின் சமஷ்டி சேவைப் பிரதித் தலைவர் மிகெய்ல் பெருக்கோவ் இந்த முன்மொழிவை முன்வைத் துள்ளார் என்று ரஷ்யாவின் ஸ்புட்னிக் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட் டுள்ளதாவது,

மலேசியாவில் இடம்பெறும் லிமா 2017 இராணுவக் கண்காட்சியில் பங்கேற்றுள்ள, இராணுவத் தொழில் நுட்ப ஒத்துழைப்புக்கான ரஷ்யாவின் சமஷ்டி சேவை பிரதித் தலைவர் மிகெய்ல் பெருக்கோவ் தெரிவித்ததாவது, உலங்குவானூர்திப் பராமரிப்புச் சேவை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தையும், கவசவாகனங்களுக்கான உதிரிப்பாகங்களை வழங்குவதற்கானத் திட்டம் ஒன்றையும் இலங்கையிடம் சமர்ப்பித்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார் என்றுள்ளது. (ஐ)

# மதுபான உற்பத்திக்கு பெருந்தொகையான நெல் தாரை வார்ப்பு

கொழும்பு,மார்ச் 27

களஞ்சியசாலைகளிலிருந்த பெருந்தொகை நெல், மதுபான உற்பத்திக்காக மெண்டிஸ் நிறுவனத்துக்கு வழங்கப் பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது. அதனால் அரிசி விலை குறைவடைவதற்கான வாய்ப்பு அற்றுப்போயுள்ளதாக விவசாயிகளும், விவசாய அமைப்புக்களும் குற்றஞ்சாட்டியுள்ளன.

மாத்தளை களஞ்சியசாலையிலிருந்த பெருந்தொகை நெல், மதுபான உற்பத்திக்காக மெண்டிஸ்நிறுவனத்துக்குப் பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளதாக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுத் தொடர்பில், நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் வினவிய போது, "அமைச்சரவையில் பெறப்பட்ட அனுமதிக்கமைய, மூன்று சந்தர்ப்பங்களில் 4 ஆயிரம் மெற்றிக்தொன் நெல்லை மெண்டிஸ் நிறுவனத்துக்கு வழங்கியதாக நெல் சந்தைப் படுத்தல் சபை தெரிவித்தது.

வறட்சியால் நெற்செய்கை பாதிக்கப்பட்டு, நாட்டில் அரிசித் தட்டுப்பாடு நிலவும் நிலையில், மதுபான உற்பத்திக்காக நெல் வழங்கப்பட்டுள்ளமையால், நிலைமை மேலும் மோசமடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இந்த நிலையில், மதுபான உற்பத்தி நிலையம் கல்குடாவில் நிர்மா ணிக்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் நெல் அதிகளவில் உற்பத்தி செய்யப் படும் கிழக்கு மாகாணத்தில், மதுபான உற்பத்தியை ஆரம்பிப்பது தொடர்பில் பெரும் சந்தேகம் நிலவுவதாக விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினர். (ஐ)

## ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்; சித்தாண்டியில் நேற்றுப் போராட்டம்




மட்டக்களப்பு,மார்ச் 27

மட்டக்களப்பு கல்குடாப் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் மதுபான உற்பத்திச்சாலை ஊழியர்களால் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இரு ஊடகவியலாளர்கள் தாக்கப் பட்டமையைக் கண்டித்து மட்டக்களப்பு சித்தாண்டி கிராமத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

"ஊடகவியலாளர்களைத் தாக்கிய நபர்கள் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்தி குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும், மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்ட விரோதமான முறையில் முன்னெடுக்கப்படும் மதுபான உற்பத்தி தொழிற்சாலையின் நிர்மாண வேலைகளை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும், சுதந்திர ஊடகச் செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் வண்ணம் கூட்டு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" உள்ளிட்ட பிரதான கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தக் கண்டன எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஊடகவியலாளர்கள், கிராம மக்களால் முன்னெடுக்கப் பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன், "ஊடகவியலாளர்கள் மீது மதுபான உற்பத்திச் சாலையைச் சேர்ந்தவர்கள் தாக்குதல் நடத்தியமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.

குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதோடு, ஊடக சுதந்திரம் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும்" எனக் குறிப்பிட்டார். (ஐ)

## காரை மதுரகவிக்கு 'கலைமாமணி' சிறப்பு விருது வழங்கி கௌரவித்தல்



யாழ். மாவட்ட சர்வோதயமும் தேசோதயமும் இணைந்து நடத்திய மக்கள் திலகம் புரட்சித் தலைவர் M.G.R அவர்களின் நூறாவது ஜனன தின விழாவில், ஆன்மீக, நன்னெறி கலாசார சமய, சமூக மேம்பாட்டு துறைகளில் தம்மை இணைத்து முற்போக்கான அபிவிருத்தி எழுச்சி நோக்கிய தெய்வீகப் பேருரைகள், வானொலி, தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பு நேர்முக தெய்வீக வர்ணனைகள், கவியரங்கம், பட்டி மன்றம், கட்டுரை எழுத்துத்துறை, கவிதைத்துறைகளில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அளப்பரிய பணிகளை நிறைவேற்றிவரும்.

**தெய்வீக ஞானத்தமிழருவி, கவிமாமணி, ஆன்மீகச் சுடர், செஞ்சொல்ஞான வாரிதி, மகாகவி சாகரம், செந்தமிழ் கலைஞானி பிரசங்கமணி, சிவநெறித்தொண்டர், கலாரத்னா,சமூகதில கம், தேசோதயதீபம்.**

**வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை.**

**எம். பி. அருளானந்தன்**

(ஆசிரியர், டான், ஓம் (T.V) நேர்முக வர்ணனையாளர்,பணிப்பாளர், சைவத்தமிழ் பாண்பாட்டுப் பேரவை) அவர்களுக்கு பிரதம விருத்தினராக கலந்துகொண்ட

**ஸ்ரீமான் ஏ.நடராஜன்** அவர்கள்

(இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர்)

"**கலைமாமணி**" எனும் சிறப்பு பட்ட விருதை வழங்கி கௌரவிக்கின்றார்கள்

**கலைமாமணி விருதுபெற்ற மதுரகவியை வாழ்த்பவர்:**

**மாரிமைந்தன் கலாநிதி வைத்திலிங்கம் - சிவராஜா**

**சிவாரேடிங்கம்பனி (S.T.C) கொழும்பு - யாழ்ப்பாணம்.**



Reg.No.P/OR/07/20 (Constitution Amended)

*An Independent Organization to the nation to protect Mother Sri Lanka*

Dr.V.Sivarasa

Governor Board Director

Director of Social Welfare and Social Service

## கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தின் அபிவிருத்திகள் இறுதிக்கட்டத்தில்

கொழும்பு,மார்ச் 27

கட்டுநாயக்க பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

வானூர்தி நிலையத்தின் பிரதான கட்டுமானப் பொறியியலாளர் காரியாலயத்தின் தகவல் படி, வானூர்தி ஓடு பாதையின் பணிகளும், நவீன தொழிநுட்ப ரீதியான சமிஞ்சை கட்டமைப்பும் தற்போது பொருத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, திட்டமிட்டதன் அடிப்படையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி அளவில் வானூர்தி நிலையத்தின் அபிவிருத்திப் பணிகள் முழுமையாக நிறைவு பெறும் எனவும், மறுதினத்திலிருந்து வானூர்திச் சேவைகள் வழமைபோல இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



### சட்டவிரோத மதுபான உற்பத்திச்சாலை விவகாரம்

# கல்குடா பொலிஸில் அதிகாரிமுறைப்பாடு

மட்டக்களப்பு,மார்ச் 27

மட்டக்களப்பு மாவட்டம் கல்குடாவெம்பு எனும் பிரதேசத்தில் நிறுவுவதற்கு முயற்சிக்கப்படும் சர்ச்சைக்குரிய மதுபான உற்பத்தி நிலையத்துக்கு எதிரான முறைப்பாடொன்றை கடந்த சனிக்கிழமை கல்குடா பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ளதாக கோறளைப்பற்றுப் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.எம். ஷிஹாப்தீன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

டபிள்யூ.எம். மெண்டிஸ் மதுசார நிறுவனம் கும்புறுமூலை கிராமஅலுவலர் பிரிவில் உள்ள கல்குடாவெம்பு பகுதியில், விலைக்கு வாங்கிய 25 ஏக்கர் காணியில் எதனோல் மதுசார மூலப்பொருள் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான அனுமதி கேட்டு திட்ட முன்மொழிவொன்றை கடந்த வருடம் மார்ச் மாதத்தில் கோறளைப்பற்று பிரதேச சபையிடம் சமர்ப்பித்திருந்தது.

உத்தேச மதுபான உற்பத்தி நிலையத்தை எமது பிரதேச சபைப் பிரிவுக்குட்பட்ட எந்த இடத்திலும் அமைப்பதற்கு பிரதேச சபை ஒருபோதும் அனுமதியை வழங்கியிருக்கவில்லை. ஆயினும், பிரதேச சபை அனுமதி வழங்காதது குறித்து அந்த நிறுவனம் நினைவூட்டல் கடிதமொன்றை கடந்த வருடம் ஏப்ரல் மாதம் பிரதேச சபைக்கு அனுப்பியிருந்தது.

அதேவேளை, கடந்த வருடம் 2016.09.22 அன்று கிழக்கு மாகாண சபையும் உத்தேச மதுபான உற்பத்தி நிலைய நிர்மாணப் பணிகளைத் தடை செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி யிருந்தது.

அந்தத் தீர்மானத்தையும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்கள் பிரதி நிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் குறித்த மதுபான உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு அனுமதியளிப்பதில்லை என்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தையும் மெண்டிஸ் நிறுவனத்துக்கு அனுப்பியிருந்தோம்.

மேலும், சர்ச்சைக்குரிய மதுபான உற்பத்திச்சாலை நிர்மாணப் பணிகள் எதிர்காலத்தில் எந்தவொரு சூழ்நிலையிலும் இடம்பெறாவண்ணம் நீதிமன்றத் தடையுத்தரவைப் பெறுமாறு கிழக்கு மாகாண முதலமைச்சரால் நான் பணிக்கப்பட்டதற்கு அமைவாக, கல்குடா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது' என்றார். (ஐ-46)

# படையினர் மீதான போர்க்குற்றங்கள் போலியாகத் தயாரிக்கப்பட்டவை

## இப்படிச் சொல்கிறார் முன்னாள் இராணுவ அதிகாரி தயா ரட்நாயக்க

கொழும்பு,மார்ச் 27
"பாதுகாப்புப் படையினருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்கள் போலியாகத் தயாரிக்கப்பட்டவை. இறுதிப் போரில் படையினர் மனிதாபிமான மீட்புப் பணிகளிலேயே ஈடுபட்டனர். அவர்கள் போர்க்குற்றங்கள் புரிந்தார்கள் என்பதற்குச் சாட்சிகளும் கிடையாது. எனவே அரச தலைவர் படையினரை இந்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து மீட்பார் என்ற நம்பிக்கையுண்டு."
இவ்வாறு முன்னாள் இராணுவ அதிகாரி தயா ரட்நாயக்க தெரிவித்தார்.
கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது
போர்க்குற்றச் செயல்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள் போலியாகத் தயாரிக்கப்பட்டவை. உலகின் மிகவும் மோசமான, பயங்கரவாத அமைப்பாக அடையாளப் படுத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளை நாம் அழித்தோம். பொதுமக்களை மிகவும் நுட்பமான பாதுகாப்பு வழிமுறைகளைப் பயன்படுத்தி, இறுதிப் போரின்போது மீட்டோம். புலித் தலைவர்கள் போரில் கொல்லப்பட்டனர். அந்த அமைப்பின் உறுப்பினர்கள் எங்களிடம் சரணடைந்தனர். எனவே போர்க்குற்றச் செயல்கள் போலியாக உருவாக்கப்பட்டுள்ளன.
அயலுறவுத்துறை அமைச்சர் படைவீரர்களை காட்டிக் கொடுக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றார். மேற்குலக நாடுகளுடன் இணைந்து இவ்வாறு அவர் செயற்படுகிறார். படைவீரர்களைக் காட்டிக் கொடுக்கப் போவதில்லை என்று அரச தலைவரும், தலைமை அமைச்சரும் உறுதியளித்துள்ளனர். அரசியல்வாதிகளின் கருத்துக்கள் தொடர்பில் எமக்கு நம்பிக்கையில்லை. எனினும் அரச தலைவர் எமது படையினரைப் பாதுகாப்பார் என்ற நம்பிக்கையுண்டு.



படையினர் மீதான போர்க்குற்றச் செயல்களை அரசு நிராகரித்து, படையினர் எவ்வாறான மனிதாபிமான மீட்புப் பணிகளை மேற்கொண்டார்கள் என்பது பற்றித் தெளிவுபடுத்த வேண்டும். நாம் அப்பாவி மக்களைக் கொலை செய்யவில்லை. எனவே நீதி விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு நாம் குற்றச் செயலில் ஈடுபட்டதாக எவ்வித சாட்சியங்களும் கிடையாது.
ஊடகவியலாளர்களைத் தாக்குவதற்கு குழுக்கள் உருவாக்கப்பட்டதாகச் சுமத்தப்படும்குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை. இராணுவத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்கள் இருக்கவுமில்லை. நாட்டுக்குப் பெருமளவில் சேவையாற்றிய புலனாய்வுப் பிரிவினரை அழுத்தங்களுக்கு உட்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவது வருத்தமளிக்கின்றது-என்றார். (ஐ)

## ரஷ்யா வழங்கிய வாளால் ராஜபக்சாக்களுக்குக் கலக்கம்

கொழும்பு,மார்ச் 27
ரஷ்யாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்கவாள்தொடர்பில், ராஜபக்சாக்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதாகக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.
கடந்த ஆட்சியின்போது துட்டகைமுனு அரசனுக்கு சொந்தமான வாளைப் பெற்றுக்கொள்ள ராஜபக்சாக்கள் கடும் பிரயத்தனம் மேற்கொண்டிருந்தனர். அதற்காக அவர்கள் செய்த பல மோசடி நடவடிக்கைகள் அம்பலமாகியுள்ளதாகக் குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.
கடந்த சில தினங்களுக்கு முன்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ரஷ்யாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இதன் போது ரஷ்ய அரச தலைவரால் மிக பழைமையான வாள் ஒன்று நினைவுச் சின்னமாக வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ராஜ பக்சாக்களின் வாள் தேடுதல் தொடர்பான தகவல் தற்போது வெளியாகியுள்ளது.
ரஷ்ய அரசதலைவர் விளாடிமிர் புடினால் வழங்கப்பட்ட நினைவுச் சின்னத்தால்மகிந்தஅதிர்ச்சிஅடைந்துள்ளார்.
இந்த வாளின் ஒளிப் படத்தைத் தற்போது மகிந்த தீவிரமாக சோதித்து வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது. இது தான் தேடிய வாளா என்ற சந்தேகம் மகிந்தவுக்கு எழுந்துள்ளது.
இந்த நிலையில் ரஷ்யாவில் இருந்து கிடைத்த வாள் துட்டகைமுனு அரசருக்கு சொந்தமானது என்றால், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இலங்கையின் அரசராகி விடுவார் என்ற அச்சம் மகிந்தவுக்கு ஏற்பட்டுள்ளதாக குறித்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.
கடந்த காலங்களில் கொழும்பு அருங்காட்சியகத்திலிருந்து சூட்சுமமான முறையில் சில வரலாற்றுச் சிறப்புமிக்க வாள்கள் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கையில் துணிச்சலான பெண்; சந்தியா எக்னெலிகொடவுக்கு விருது



கொழும்பு,மார்ச் 27
கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவுக்கு அமெரிக்கா, துணிச்சலான பெண் என்ற உலக விருதை வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.
உலகளவில் துணிச்சலான பெண்களுக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வருடாந்தம் விருது வழங்குகிறது. இந்த விருதைப் பெற்றுக் கொள்வதற்காக சந்தியா எக்னெலிகொட அடுத்த வாரம் வொசிங்டனுக்குப் பயணமாகவுள்ளார்.
தனது கணவனின் வழக்கில் மாத்திரமன்றி, சிங்கள, தமிழ் சமூகங்களில் காணாமற் போனவர்களின் குடும்பங்களின் சார்பாகவும் நீதிக்காக இவர் போராடுகிறார். இலங்கை நீதி, நல்லிணக்கத்துக்கான ஓர் ஆழமான சின்னமாக, விளங்குகிறார் என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## இலங்கை நட்பு நாடுகளுக்காக பிரதிநிதியை நியமிக்கத் திட்டம்

கொழும்பு,மார்ச் 27
இலங்கையின் நட்பு நாடுகளுக்காக, சிறப்புப் பிரதிநிதியை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இலங்கைக்கு அடிக்கடி ஆதரவு வழங்கி நட்புறவுடன் செயற்பட்டுவரும் நாடுகளுக்காக, அரச தலைவருக்கு நேரடியாகப் பொறுப்புச் சொல்லக்கூடிய சிறப்பு ராஜதந்திரியை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
உரிய ராஜதந்திரச் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையானபின்னணியை உருவாக்குவதற்கு இவ்வாறான ஒரு ராஜதந்திரியை நியமிப்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். ஒவ்வொரு நட்பு நாட்டுக்கும், தனித் தனியாக இவ்வாறு ராஜதந்திரி நியமிக்கப்படவுள்ளார்.
சில நட்பு நாடுகளின் தூதுவர் மட்ட உறவுகள் பலவீனமாகக் காணப்படுவதால், இவ்வாறு புதிதாகச் சிறப்புப் பிரதிநிதிகள் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
அண்மையில் ரஷ்யாவில் வைத்து இலங்கை ஊடகவியலாளர்களிடம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார். (ஐ)

## விமல் வீரவன்ச சிறைச்சாலை மருத்துவமனையில்



கொழும்பு,மார்ச் 27
நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.
உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வீரவன்சவின் உடல் நலம் பாதிப்படைந்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத் தரப்புகள் தகவல் தெரிவிக்கின்றன.
"எந்தவொரு சிறைக் கைதியாவது உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தால், அவரைப் பலவந்தமாக மருத்து வமனையில் சேர்ப்பதற்கு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு சட்ட ரீதியான அதிகாரம் உள்ளது.
இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மேற்கொள்வது அரசுக்கு எதிரான போராட்டமே அன்றி, நீதிமன்றுக்கு எதிரான போராட்டம் அல்ல" என்று தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது. (ஐ)

## பாதாள உலகக் குழுக்களால் சிறைச்சாலைக்குள் நெருக்கடி

*அவற்றுக்கு இடையே மோதல் ஏற்படும் அபாயம்*

கொழும்பு.மார்ச் 27
மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு இடையில் மோதல் நிலை ஏற்படகூடிய அபாயம் உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.
தற்போது வரையில் மகசின் சிறைச்சாலையில் 10 குழுவைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான பாதாள உலகக் குழுவினர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கும், அவர்களின் அவசியத்துக்காகவும், சிறைச்சாலையில் இருந்து வெளியே அழைத்து வரப்படுவார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் பாதாளக் குழுக்களுக்கு இடையில் மோதல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கக்கூடிய சிறைக் கைதிகளின் எண்ணிக்கை ஆயிரம் என்றபோதிலும், தற்போது ஆயிரத்து 400 பேரைக் கடந்துள்ளது.
பாதாள உலகக் குழுத் தலைவர்களாகக் கருதப்படும் கெனட், ஆமி சங்க, சூட்டி உக்கு மற்றும் கழு துஷார ஆகியோர் அவர்களுக்குள் உள்ளடங்குகின்றனர்.
கொலை செய்யப்பட்ட பாதாள உலகக் குழுத் தலைவர்கள் சமயங் என்பவரின் ஆதரவாளர்கள் சிலரும் குறித்த சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். உரிய எண்ணிக்கையை விட அதிகமானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையால் இவ்வாறு மோதல் ஏற்பட கூடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## அமைச்சரவை மாற்றத்தால் அரசுக்கு நெருக்கடி ஏற்படும்

*மூத்த அமைச்சர்கள் அறிவுரை*

கொழும்பு,மார்ச் 27
அண்மைய சில நாள்களாகப் பேசப்பட்ட அமைச்சரவை மாற்றத்தை இந்த வருடத்துக்குள் மேற்கொள்ளாதிருக்க, அரசு தீர்மானித்துள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டால், அரசுக்குள் பெரும் நெருக்கடி நிலைமை உருவாகலாம் என்று மூத்த அமைச்சர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது, சில அமைச்சர்கள், தற்போது பதவி வகிக்கின்ற அமைச்சுக்களில் இருந்து விலகுவதற்கு விருப்பமின்மை காரணமாக இந்த அமைச்சரவை மாற்றம் தொடர்பான யோசனையை கைவிடப்பட்டுள்ளனர்.
அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுத்தப் போவதாக வெளியான செய்திகளையடுத்து, சில அமைச்சர்கள் தற்போதிருக்கும் அமைச்சுக்களுக்கு மேலதிகமான சில அமைச்சுக்களையும் கேட்டுள்ளனர். இந்த நிலைமை காரணமாகக் குறித்த அமைச்சரவை மாற்றம் இந்த வருடத்துக்குள் இடம்பெற மாட்டாது என்றும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# மக்களின் ஒத்துழைப்புடனே டெங்கை கட்டுப்படுத்தலாம்

## டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில் இணைந்து செயற்பட அழைப்பு

கிளிநொச்சி, மார்ச் 27

பருவப் பெயர்ச்சிக் காற்று ஆரம்பிப்பதற்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை இனங்கண்டு கட்டுப்படுத்தாவிட்டால் பெரும் அவல நிலைமை ஏற்படும். எதிர்வரும் 29ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் 4ஆம் திகதி வரையான நுளம்பு கட்டுபாட்டுவாரத்தில் மக்கள் ஒத்துழைப்பு வழுங்கி நுளம்பு பெருக்கும் இடங்களைப் துப்புரவு செய்ய வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி பொதுச் சுகாதாரப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

"வரலாற்றில் இல்லாத டெங்குத் தொற்று அதிகரிப்பு நாடு முழுவதும் ஏற்பட்டுள்ளது. நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் டெங்குத் தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த சில ஆண்டுகளில் நாட்டில் சராசரியாக வாராந்தம் 300 தொடக்கம் 400 டெங்குத் தொற்றுக்குள்ளானவர்கள் இன்ங்காணப்பட்டனர். 2017ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. வாரத்தில் 2 ஆயிரம் டெங்குத் தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணும் நிலை ஏற்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் கால நிலை ஆரம்பிப்பதற்கு முன்னதாக டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளமை மிக ஆபத்தானது. இந்த நிலை தொடர்ந்து பருவப் பெயர்ச்சிக் கால நிலை ஆரம்பித்தால் டெங்குத் தொற்று மேலும் அதிகரிக்கும். அவ்வாறு அதிகரிக்கும்போது வைத்தியசாலைகளிலும் சிகிச்சை அளிப்பதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். கிளிநொச்சி மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு டெங்குத் தொற்றுக்குள்ளான 86 பேர் இனங்காணப்பட்டனர். 2017ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 304 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். டெங்குக் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் தேவை.

நாம் ஒவ்வொருவரும் எமது வசிப்பிடங்கள், அயல் பிரதேசங்கள், வேலைத் தளங்கள், கல்விக் கூடங்களை துப்புரவாக வைத்திருந்து நுளம்புகள் பெருகுவதைத் தடுக்க வேண்டும்.

சுகாதாரத் துறையினர் எதிர்வரும் 29 இலிருந்து ஏப்ரல் 4 வரை நடைக்குழுவாக வீடுவீடாக நடந்து வந்து டெங்கு நோய்காவும் நுளம்புகள் உள்ளனவா, அந்த நுளம்புகள் வளரக்கூடிய வாழ்விடங்கள் உள்ளனவா எனப் பார்வையிட்டு மக்களுக்கு ஆலோசனைவழங்கவுள்ளனர் . மாவட்டத்தில் பராமரிப்பற்ற நிலையில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படும் காணிகளை இனங்கண்டு அந்தந்தப் பகுதிகளுக்குரிய பிரதேசசபைகள் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளன. காணி உரிமையாளர்களோ அல்லது உரிமையாளர்களுக்குப் பதிலாக அந்தக் காணிகளைப் பராமரிப்பவர்களோ விரைந்து அவற்றைச் சுத்தப்படுத்துவதன் மூலம் தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்என்று தெரிவிக்கப்பட்டது.(ற-21.35)





# ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட பிரச்சினைகளைத் தீர்க்குமாறு கோரி கவனவீர்ப்பு போராட்டம்

வவுனியா, மார்ச் 27

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில் அரச ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கடந்த சனிக்கிழமை காலை அங்கு கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஓமந்தையில் அரச ஊழியர்கள் 600 பேருக்கு 2011ஆம் ஆண்டு காணிகள் வழங்கப்பட்டன. காணிகள் வழங்கப்பட்டு 5 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் தற்போது 60 அரச ஊழியர்கள் மட்டுமே அங்கு வீடுகள் அமைத்துக் குடியமர்ந்துள்ளனர். பல காணிகள் எந்த வித பராமரிப்பும் இன்றில் பற்றைக் காடுகளாக மாறியுள்ளன. அதனால் அந்தப் பகுதியில் திருடர்களின் தொல்லையும், நுளம்புத் தொல்லையும் அதிகரித்துள்ளது.

இது தொடர்பாக மாவட்ட செயலர், வீடமைப்பு அதிகார சபை உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். வீதி விளக்குகள் பொருத்தப்பட வேண்டும்.

இதுவரை வீடுகள் கட்டிக் குடியமராத அரச ஊழியர்களை குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வசதியற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு வீடு கட்ட உதவி வழங்க வேண்டும்.

இல்லாவிடில் காணிகளற்று உள்ள காணிகளுக்கு விண்ணப்பித்துள்ள அரச ஊழியர்களுக்கு இந்தக் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வெண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே அங்கு குடிய மர்ந்துள்ள அரச ஊழியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனும், சிவசக்தி ஆனந்தனும் கலந்து கொண்டனர். (ற-402)



# உள்ளூராட்சி சபைகளுக்கான குடிமக்கள் சாசனம் பிரகடனம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

பொதுநலவாய உள்ளூராட்சி மன்றங்களின் இணையத்தால் வடக்கில் 3 உள்ளூராட்சிச் சபைகளுக்கான குடிமக்கள் சாசனம் பிரகடனம் செய்யப்படவுள்ளது.

வடக்கில் வலி.கிழக்கு, வலி.தெற்கு, வலி.மேற்கு ஆகிய மூன்று பிரதேச சபைகளில் முதற்கட்டமாக பிரசைகள் சாசனம் பிரகடனம் செய்யப்படவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 31ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு வடக்கு மாகாண சபை உள்ளூராட்சி ஆணையாளர் பொ.முகுந்தன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் பொதுநலவாய உள்ளூராட்சி மன்றங்களின் இணையத்தள அதிகாரிகள் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொள்வர். (ற-50)

# கூட்டரசின் தலைவர்கள் தமிழரை ஏமாற்றுகின்றனர்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா, மார்ச் 27

கூட்டரசின் நட்சத்திரத் தலைவர்கள் மூவரும் மக்களை ஏமாற்றி விட்டனர். அவர்களை நம்பி வாக்களித்த மக்கள் இன்று தமது உரிமைக்காகப் போராடுகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்ட மக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

இந்தப் பகுதியில் காணிகள் வழங்கப்பட்டு 6 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் அடிப்படை உரிமைகள் இன்னமும் வழங்கப்படவில்லை. இவர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் எனப் பலரிடம் தமது பிரச்சினைகள் தொடர்பாகக் கூறி வருகின்றனர். நாங்கள் இந்த விடயங்கள் தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இங்குள்ள அரச ஊழியர்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளோம். தற்போதும் வவுனியா பிரதேச செயலரிடம் இது தொடர்பாகப் பேசியுள்ளேன். தேசிய வீடமைப்பு அதிகார சபையிடமும் பேசியுள்ளேன்.

காணிகள் வழங்கப்பட்டு இது வரை வீடுகள் கட்டாதவர்களுக்கு 5 லட்சம் ரூபா வீட்டுத் திட்டத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும். இங்குள்ள அரச ஊழியர்களுக்குக் காணி உரிமைப் பத்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் தெரிவித்தார்.

வடக்கு முதலமைச்சர் கேட்டுக் கொண்டமைக்கு அமைய இந்த அரச ஊழியர்களுக்கான சகல திட்டங்கள் தொடர்பான ஆவணங்களையும் வீடமைப்பு அதிகார சபையிடம் கையளித்துள்ளேன் என்று பிரதேச செயலர் கூறினார்.

இவர்களைப் போன்று இந்த மாவட்டத்தில் பலர் மீள்குடியமர்வுகள், வாழ்வாதாரத்துக்காகப் போராடியவண்ணம் உள்ளனர்.

வரவு செலவுத் திட்டத்தில் மீள்குடியமர்வுக்கும், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நிதி ஒதுக்கப்படவில்லை என்பதைத் தொர்ச்சியாக நாம் சுட்டிக்காட்டி வருகின்றோம்.

இவை தொடர்பாக அரசு கவனம் செலுத்தவில்லை. மாறாக வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை அரைவாசியாகக் குறைத்துள்ளது.

போர் முடிந்து 8 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையில் மக்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்காகபோது அவர்கள் வீதிக்கு வந்து போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அபிவிருத்தி மட்டுமல்லாது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயம், அரசியல் கைதிகள் விடுவிப்பு போன்ற விடயங்களிலும் மக்கள் வீதிக்கு வந்து போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆட்சி மாற்றத்துக்காக எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மூன்று அரசியல் தலைவர்களை நம்பியுள்ளார். அரச தலைவர், தலைமை அமைச்சர், அரச முன்னாள் தலைவர் சந்திரிகா ஆகியோர் மீது நம்பிக்கை கொண்டே நாம் வாக்களித்தோம்.

ஆனால் அவர்கள் தமிழ் மக்களுக்கு அநீதியிழைத்த இராணுவத்துக்குப் பாதுகாப்பு வழங்குவது, இராணுவத்தின் நலன்களைப் பேசிக் கொண்டிருப்பது. இராணுவத்துக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என்று இராணுவத்தைப் பாதுகாக்கும் நிலையில் உள்ளனர்.

இந்த அரசைக் கொண்டுவந்த மக்கள் வீதியில் இறங்கிப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த அரசு விரைவில் நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை வழங்க வேண்டும். என்றார். (ற-21.202)



பிரான்ஸ் தலைநகர் பரிஸில் அமைந்துள்ள டிஸ்னிப் பூங்காவின் 25 ஆவது வருட நிறைவு அண்மையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பல்லாயிரக்கணக்கான ஒளி விளக்குகளால் பூங்கா அழகூட்டப்பட்டிருந்தது. பெருந்தொகையான மக்கள் அதை நேரில் சென்று பார்த்தனர். (ம)

# சிறைச்சாலை மீது குண்டுவீச்சு 16 பேர் பரிதாபச் சாவு

## சிரியாவின் இட்லிப் நகரில் அவலம்



டமஸ்கஸ், மார்ச் 27
சிரியாவின் இட்லிப் நகரச் சிறைச் சாலை மீது போர் வானூர்திகள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் 16 பேர் சம்பவ இடத்தில் சாவடைந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சிரிய அரசு, அரசுக்கு எதிரான ஆயுதக் குழு, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் என்று இருமுனைப் போரில் சிக்கித் தவிக்கிறது. சிரியாவின் இட்லிப் நகர் கிளர்ச்சிக் குழுவின் பிடியில் இருந்தது. ரஷ்யாவின் உதவியுடன் வான் தாக்குதல்களை நடத்தி வருகிறது சிரியா. அவ்வாறு நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் இட்லிப் நகரில் உள்ள சிறைச்சாலை மீது குண்டு வீழ்ந்ததில் 16 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். ஏனைய பலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. (ம)

## அணுகுண்டு சோதனைக்கு தயாராகிறது வடகொரியா

அணுகுண்டு ஒன்றை ஏவுவதற்கு வடகொரியா தயாராகி வருகிறது என்று சி.என்.என். ஊடகம் செய்தி வெளியிட்டது. பன்னாட்டு சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறி வடகொரியா பல ஆயுத மற்றும் அணுவாயுத சோதனைகளை நடத்திவந்தன. இதனால் ஐக்கிய நாடுகள் சபை அந்த நாட்டின் முக்கிய வருவாயான நிலக்கரி ஏற்றுமதியை முடக்கியுள்ளது. அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகள் தனித் தனியாக தடை விதித்துள்ள போதிலும் வடகொரியா அவற்றைக் கண்டுகொள்ளாமல் தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. இந்த நிலையில் வடகொரியா அடுத்ததாக அணுகுண்டுச் சோதனையொன்றை நடத்தவுள்ளது என்று சி.என்.என். தெரிவித்துள்ளது. அந்த ஏவுகணை நிலத்துக்கு அடியில் மேற்கொள்ளப்படலாம் என்றும் அந்த ஊடகத்தின் செய்திக் குறிப்பில் உள்ளது. வட கொரியா அண்மையில் நடத்திய ஏவுகணைச் சோதனையொன்று தோல்வியில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## டெல்லியில் தமிழ

புதுடெல்லி, மார்ச் 27
இந்தியத்தலைநகர் டெல்லியில் தமிழக விவசாயிகள் நூற்றுக்கணக்கானவர்கள் இணைந்து சாவுச் சடங்கு வீடு நடத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர். விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும், விவசாயிகளின் தற்கொலையைத் தடுக்க வேண்டும், ஓய்வூதியம் வழங்க வேண்டும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என பல கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள்

## இரட்டை வி

## முதலாவது
## மற்றொன்று

### ஆர்.கே. நகரத் தேர்த
### ஓ.பி.எஸ்ஸின் வியூக

சென்னை, மார்ச் 27
சென்னை - ஆர்.கே. நகர இடைத்
ஆரம்பித்தார் ஓ.பன்னீர்செல்வம். தன
சின்னமான இரட்டை விளக்குகள் செ
ஜெயலலிதா என்றும் மற்றொரு வி
குறிப்பிட்டார். அவரது இந்த அணுகுமு
கவரப்படும் என்று இந்திய ஊடகங்கள்
முன்னாள் முதல்வர் ஜெயலலிதா சாவ
வெற்றிபெற்ற ஆர்.கே. நகரில் அடுத்த
நடைபெறவுள்ளது. தி.மு. கழகத்தின் சா
களமிறங்கியுள்ளார். அ.தி.மு. கழக
மதுசூதனன், தீபா ஆகியோர் களத்
ஆதரவான தனது பரப்புரைகளை நே
முதல் பரப்புரையை "எமது சின்னமா
மின்கம்பத்தில் ஒன்று அம்மா ஜெயலலி
ஓ.பி.எஸ். ஆரம்பித்தார். அவர் இவ்வ
மிகையாக இருந்தன என்று இந்திய ஊ
இன்னும் ஆறு மாதங்களின் தமிழகத்
செல்வம் மீண்டும், தமிழக முதல்வரா
ஜல்லிக்கட்டுக்கு தீர்வு கண்டதைப்போ
தீர்வு காணுவார் என்று மதுசூதனன்
மதுசூதனன், மீன்சந்தை, பேருந்துத் தரி
ஏராளமான இடங்களுக்குச் சென்று வா
இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்ட





# ஏமன் போரால் 3 லட்சம் சிறுவர்களின்

ஏமனில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போர்ச் சூழல் காரணமாக லட்சக் கணக்கான சிறுவர்கள் தமது கல்வியைப் பாதியில் நிறுத்தியுள்ளனர் என்று யூனிசெப் கவலை தெரிவித்தது.

ஏமனில் ஹௌதி ஆயுதக் குழு ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அந்த அமைப்புக்கு எதிராகவும் ஏமன் அரசுக்கு ஆதரவாகவும் சவூதி வான் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

கடந்த இரு வருடங்களாக உக்கிரமடைந்துள்ள போரால் பல்லாயிரக்காணக்கான மக்கள் சாவடைந்துள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இத்தகைய பின்னணியில் ஏமன் சிறுவர்களின் கல்வி தொடர்பாகவும்



# மிழக விவசாயிகள் சாவுச் சடங்கு நடத்திப் போராட்டம்

மிழக கான வீடு னர். ணம் ளின் டும், டும், யம் ாரிக் ர்கள்

கடந்த பல நாள்களாக தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று, சாலையில் விவசாயி ஒருவரை படுக்கவைத்து, மாலையிட்டு, மலர்களைப் போட்டு அலங்கரித்து, வாயில் துணியை மூடி, அருகில் மண்டை ஓடுகளை வைத்து சடலம் போல சித்திரித்து சுற்றிலும் அமர்ந்து கொண்டு ஒப்பாரி வைத்து



சாவுச் சடங்கு நடத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயிகளின் போராட்டத்துக்கு நாளுக்குநாள் ஆதரவு பெருகி வருகிறது.

அரசியல் பிரமுகர்கள் பலரும் நேரடியாகச் சென்று அவர்களுக்கு தமது ஆதரவை வழங்கி வருகின்றனர். (ம)



# வெளியேறக்கூடாது பிரிட்டன்; வலியுறுத்திப் போராட்டங்கள்

லண்டன், மார்ச் 27

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறக்கூடாது என்று வலியுறுத்தி பல்லாயிரக்கணக்கான மக்கள் இணைந்து லண்டனில் பேரணிகளை நடத்தினர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகவேண்டும் என்ற முடிவுக்கு அந்த நாட்டு நாடாளுமன்றம் அண்மையில் அனுமதி வழங்கியது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகுவது குறித்த பொது வாக்கெடுப்பு கடந்தாண்டு நடைபெற்றது. 52 சதவீத மக்கள் பிரிட்டன் வெளியேறவேண்டும் என்று வாக்களித்தனர். இந்த முடிவை ஏற்றுக்கொள்ளாத அப்போதைய பிரதமர் டேவிட் கமரூன் தனது பதவியில் இருந்து விலகினார். புதிய பிரதமராக திரேசாமே தெரிவானார். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவது தொடர்பில் பிரிட்டன் நாடா[illegible] மன்றத்தின் பிரபுக்க[illegible] சபையில் வாக்கெடு[illegible] நடைபெற்று பிரி[illegible] செல்வது என்று மு[illegible] வானது.

பிரிட்டன் ராணி[illegible] பெத்தும் இதற்கு[illegible] மையில் அ[illegible] வழங்கினார்[illegible] பிரிந்து செல்லக்[illegible] என்று வலியுறு[illegible] லாயிரக்கண[illegible] மக்கள் இ[illegible] நேற்றுமுன்தி[illegible] ணிகளை நடத்[illegible]

# நாற்பது பொலிஸ் அதிகாரிகள் தலை துண்டித்துப் படுகொலை

ஆபிரிக்க நாடான கொங்கோவில் 40 பொலிஸ் அதிகாரிகளை ஆயுததாரிகள் தலை துண்டித்துப் படுகொலை செய்த சம்பவம் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொங்கோவில் கசாய் மாகாணத்தில் காம்பினா சாபு என்ற ஆயுதக் குழு ஆதிக்கம் செலுத்துகிறது. கடந்த ஆண்டு ஜூன் மாதம் அந்த அமைப்பின் தலைவர் ஜீன்பியரே பன்டி என்பவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதை தொடர்ந்து அங்கு காம்பினா சாபு ஆயுதக் குழுவினர் கடும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடந்த ஆண்டு ஓகஸ்ட் முதல் கசாய் மாகாணத்தில் இதுவரை 400 பேர் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். எனவே அங்கிருந்து 2 லட்சம் பேர் வெளியேறி வேறு இடங்களில் குடியேறியுள்ளனர். அங்கு நிலைமையை சீரமைக்க பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அவ்வாறு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட பொலிஸாரே கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

விளக்குகளில்

# து ஜெயலலிதா று எம்.ஜி.ஆர்.

## தேர்தலில் பியூகம்

இடைத்தேர்தலில் பரப்புரையை நேற்று ம். தனது முதலாவது பரப்புரையில், தமது கள் கொண்ட மின்கம்பத்தில் ஓர் விளக்கு ாரு விளக்கு எம்.ஜி.ஆர். என்றும் அவர் றுகுமுறை மக்கள் மத்தியில் மிக விரைவில் கங்கள் செய்தி வெளியிட்டன.

ா சாவடைந்ததை அடுத்து அவர் போட்டியிட்டு அடுத்த மாதம் 12 ஆம் திகதி இடைத்தேர்தல் தின் சார்பில் மருதுகணேஸ் வேட்பாளராகக் . கழகம் மூன்றாக உடைந்து தினகரன், ர் களத்தில் உள்ளனர். மதுசூதனனுக்கு ளை நேற்று ஆரம்பித்தார் ஓ.பி.எஸ். தனது ன்னமான இரட்டை இலையைக் கொண்ட ஜயலலிதா, மற்றொன்று எம்.ஜி.ஆர்." என்று இவ்வாறு தெரிவித்தபோது கரகோசங்கள் ந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

மிழகத்தில் ஆட்சி மாற்றம் நடக்கும். பன்னீர் ல்வராவார். அவர் தமிழக முதல்வரானதும் துப்போல் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தனன் தனது பரப்புரையில் தெரிவித்தார். ந்துத் தரிப்பிடம், கடைத்தொகுதிகள் உள்ளிட்ட ன்று வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார் என்றும் ளியிட்டன. (ம)





# அல்கொய்தா முக்கிய தலைவர் அமெரிக்க தாக்குதலில் உயிரிழப்பு

வொஷிங்டன், மார்ச் 27

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்திய வான் தாக்குதலில் அல்கொய்தா அமைப்பின் முக்கிய தலைவர் குவாரி யாசீன் சாவடைந்தார்.

ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் எல்லை மாகாணமான பத்திகாவில் யாசீன் பதுங்கியுள்ளார் என்று கிடைத்த தகவலை அடுத்து அமெரிக்கா ஆளில்லா விமானங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலிலேயே யாசின் கொல்லப்பட்டார் என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்தது. (ம)


## மாவட்டச்செயலகம், கிளிநொச்சி
## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்.

கிளிநொச்சி மாவட்டச்செயலாளரினால் பின்வரும் விவரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தபெயர் நிர்மாணம் | ஒப்பந்த தொகை | வேண்டப்படும் ஆகக்குறைந்த ICTAD தரம்/பதிவு | கேள்விப் பிணைப்பணம் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/II/ Con/Kac/ bou/713/ vol.2 | மாவட்டச் செயலக பின் பக்க சுற்று மதில் நிர்மாணம் | 2.59 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Building | ரூபா 26.000.00 வங்கி பிணை 19.07.2017 வரை (91 நாள்) |
| 2 | KN/EB/II/ Con/Kar/ Can/750 | கரைச்சி பிரதேச செயலக சிற்றூண்டிச்சாலை நிர்மாணம் | 4.33 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 or above Building | ரூபா 43.000.00 வங்கி பிணை 19.07.2017 வரை (91 நாள்) |
| 3 | KN/EB/II/ Con/Poo. Qua/698 | பூநகரி பிரதேச செயலர் விடுதி நிர்மாணம் | 8.86 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 or above Building | ரூபா 87.000.00 வங்கி பிணை 02.08.2017 வரை (105 நாள்) |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவார்.
    1. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
    2. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
    3. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக் கூடாது.
2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச்செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல- 021 228 5357, பக்ஸ்.இல- 021 228 3966)
3. கேள்வி ஆவணங்களை 29.03.2017 ஆம் திகதியிலிருந்து 18.04.2017 ஆம் திகதி வரை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாள்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக் கிளையில் மீளளிக்கப்படாத ரூபா 2000.00 கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஒப்படைத்தல் வேண்டும்.
5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, மாவட்டச்செயலகம் கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 19.04.2017 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
7. தாமதமாகக்கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட நிதிச்சுற்றறிக்கை 04.2016 க்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்தவர்களுக்கே முன்னுரிமையளிக்கப்படும்.

சுந்தரம் அருமைநாயகம்.
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்.
கிளிநொச்சி மாவட்டம்.



# ன் கல்வி பாதிப்பு



தற்போது கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏமனின் இந்த தலைமுறைகளுக்கு மறுக்கப்படும் கல்வி மிக ஆபத்தான எதிர்காலத்தை உருவாக்கி வருகிறது. வான்வழித் தாக்குதல் காரணமாக ஏராளமான பள்ளிக்கூடங்கள் இடிந்த நிலையில் உள்ளன.

ஆபத்தான நிலையில் உள்ள பள்ளிக்கூடங்களில்தான் ஏமன் நாட்டின் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் கல்வி பயின்று வருகின்றனர் என ஏமன் அகதிகள் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் சாபியா மோண்டோ தெரிவித்தார். (ம)



# இலங்கை - ரஷ்யா இடையே பொருளாதார அபிவிருத்தி சார் நான்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

### "மீன்பிடி, தொழில்நுட்ப, கலாசார மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பில் நடவடிக்கை"

இலங்கை-ரஷ்யாஇடையேபொருளாதார அபிவிருத்திச் சார்புடையதான நான்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் ரஷ்யாவிற்கும் இலங்கைக்கும் இடையே மீன்பிடி, தொழில்நுட்ப, கலாசார மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பிலானஒப்பந்தங்களேகைச்சாத்திடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இலங்கை ரஷ்யா இடையேயான உறவின் 60 வருட காலப் பூர்த்தியை முன்னிட்டு அண்மையில் இடம்பெற்றிருந்ததான நிகழ்வில்பிரதமஅதிதியாக கலந்துகொள்வதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ரஷ்யாவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த போதே மேற்படி ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பயணத்தின்போது இருநாட்டு பொருளாதார வர்த்தக மற்றும் அரசியல் உறவினை வலுப்படுத்தி, முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான உதவிகளை வழங்குவதற்கு உறுதிப்பாடான பரிந்துரைகள் ரஷ்ய அரச தலைவரால் வழங்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

மேலும்இந்தசந்திப்புக்குறித்துகருத்துரைத்துள்ளரஷ்யஅரசதலைவர்விளாடிமிர்புட்டின்,

``நாட்டின் சமூக மாற்றத்துக்கு முன்மாதிரியானஅர்ப்பணிப்புகளைச்செய்துகொண்ட தலைவர் என்ற வகையிலே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எமது நாட்டுக்கான பயணத்தைமேற்கொள்ளவேண்டுமென இந்தியாவில்இடம்பெற்றிருந்தகோவா மாநாட்டின்போது அழைப்புவிடுத்திருந்தோம். அதன்படியே இலங்கைக்கும் ரஷ்யாவிற்கும்இடையிலானநட்புறவு ஆரம்பித்து60வருடங்கள்கடந்துள்ள நிலையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வருகையானது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது." என்றார்.

தவிர, 1906 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு கொண்டு செல்லப்பட்டு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த போது ரஷ்யாவினால் கொள்வனவு செய்யப்பட்ட நான்காம் நூற்றாண்டுக்கு சொந்தமானதான கண்டி இராச்சியத்தின் வாள் ஒன்றினை ரஷ்ய அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேனவுக்கு பரிசளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுகளில் ரஷ்யாவினை பிரதிநிதித்துவப்படுத்தி அந்நாட்டு பிரதி வெளிவிவகார அமைச்சர் இகோர் மொகியுலோச், விசேட பிரதிநிதியாக விண்வெளியில் முதன் முதலில் கால் பதித்த பெண்ணான வலன்ரினா டெரஸ்கோவாமற்றும்விண்வெளிவீரரான விட்மிர்லெனாஜ்ஆகியோரும்கலந்துகொண்டிருந்தமை நோக்கத்தக்கது.

அதேவேளைரஷ்யாவின்உத்தியோகபூர்வ அழைப்பிற்கமைவாக முன்னாள்தலைமைஅமைச்சர் சிறிமாவோ பண்டாரநாயக்க 43 வருடங்களுக்கு முன்பதாக அங்கு பயணம் செய்திருந்தமை நினைவுகூரத்தக்கது.



## ரூபாவின் பெறுமதியை மத்தியவங்கி நிர்வகிப்பதில்லை

### ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவிப்பு

டொலருக்குஎதிரானரூபாவின்பெறுமதியை நிர்வகிப்பது தொடர்பிலான நடவடிக்கைகள் எவையும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதான கருத்து மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித்குமாரசுவாமியால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள அவர்,

"மத்திய வங்கி இந்த விடயங்களை நிர்வகிக்கும் போது அந்நியச் செலாவணி வீணாகசெலவிடப்படும். தவிர செலாவணிக்கையிருப்புவீழ்ச்சியடைவது நாட்டின் பொருளாதாரத்தில் பாதகமான நெருக்கடி நிலைமைகளை ஏற்படுத்திகொள்வதற்கு காரணமாகஅமைந்துவிடும்"-என்றார்.

## குறைந்த விலை நிர்ணயத்தில் ஐபாட் சாதனங்கள் அறிமுகம்

### அப்பிள் நிறுவனத்தின் தயாரிப்பாக வெளிவந்துள்ளது



உலகின் முன்னணி கைபேசித் தொழில்நுட்பசாதனங்களின்தயாரிப்புநிறுவனமான அப்பிள் தனது புதியதான ஐபாட் சாதனங்களை குறைந்த விலை நிர்ணயத்தில் அறிமுகம் செய்து கொண்டுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி அப்பிள் நிறுவனம் ஐபாட் மினி 4, இரண்டு ஐபாட் புரோ சாதனங்கள் மற்றும் புதிய ஐபாட் என்பவற்றை அறிமுகம் செய்துள்ளது.

அப்பிள்அறிமுகம்செய்துள்ளதானபுதிய ஐபாட் 9.7 இன்ச் அளவுடையதான திரை கொண்ட வகைப்பாடு 329 டொலர்களாக விற்பனை செய்யப்படுகிறது. அதாவது இலங்கை மதிப்பில் அண்ணளவாக 50 ஆயிரம் ரூபா என்ற விலை நிர்ணயத்தை இது கொண்டுள்ளது.

இவை32ஜிபிசேமிப்பான்மற்றும்வைபைவசதிகளைக் கொண்டுள்ளதுடன் வெள்ளி, தங்கம் மற்றும் சாம்பல் ஆகிய மூன்று வகை நிறங்களில் வெளிவருகின்றன.

அதேவேளை 128 ஜிபி சேமிப்பானை கொண்டுள்ள 7.9 அங்குல அளவுடைய திரை கொண்ட ஐபாட் மினி 4 இன் விலைநிர்ணயத்தை அப்பிள் நிறுவனம் குறைத்துள்ளது.

இந்தவகையானவை399டொலர்கள்அதாவதுஇலங்கை மதிப்பிலே இவற்றின் விலை நிர்ணயமானதுஅண்ணளவாக 60 ஆயிரத்து 528 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நுட்பம்

புதிய ஐபாட் சாதனங்களில் அதிவேக ஏ9 சிப் மற்றும் பிரகாசமானதிரை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஏற்கனவே வெளியிடப்பட்டதான ஐபாட் எயார் 2 இனை விடவும் சற்றுப் பெரியதாகவே இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.



முன்னதாக அப்பிள் ஐபோன் 7 மற்றும் ஐபோன் 7 பிளஸ் வடிவமைப்புகளில் சிவப்பு நிறமுடைய சிறப்புப் பதிப்பான அதிதிறன்பேசி ஒன்றும் வெளியிடப்பட்டது. இதேபோல ஐபோன் எஸ்.இ வகை 32 மற்றும் 128 ஜிபி சேமிப்பானுடன்வெளியிடப்படும்என அறிவிக்கப்பட்டிருந்தமைநோக்கத்தக்கது.

தவிர, புதியசாதனங்களுடன்காணொலிகளைஉருவாக்கி அதனை ஐ.ஓ.எஸ் சாதனங்களைப் பயன்படுத்தும் நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளும் வசதியை வழங்கும் செயலியையும் அப்பிள் அறிமுகம் செய்துள்ளது.

கிளிப்ஸ் (clips) என பெயரிடப்பட்டுள்ளதான புதிய செயலியில் காணொலிகளை அழகுபடுத்துவதற்கான பல்வேறு வசதிகளும் அவற்றை முகநூல், இன்ஸ்டாகிராம் அல்லது அப்பிளின் சொந்தக் குறுந்தகவல் செயலிகளில் பகிர்ந்துகொள்ளும் வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

## ஏற்றுமதியாளர்களை உருவாக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் யாழில் இடம்பெற்றது

வணிகம்



இரண்டாயிரம் ஏற்றுமதியாளர்களை இலக்காகக் கொண்ட தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்று யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

குறிப்பாக சர்வதேச தரத்தில் ஏற்றுமதியாளர்களை உருவாக்கும் விதமாக அரச செயற்திட்டத்தின் கீழான தேசிய ரீதியான முதலாவது விழிப்புணர்வு செயலமர்வாக யாழ். மாவட்ட செயலகத்தில் குறித்த தேசிய நிகழ்ச்சித்திட்டம் நிகழ்ந்துள்ளது.

இந்த செயற்த்திட்டத்தின் மூலமாக 2020 ஆம் ஆண்டில் ஏறத்தாழ இரண்டாயிரம் புதிய ஏற்றுமதியாளர்களை உருவக்குவதும் உலகில் இடம்பெறும் வர்த்தக மாற்றத்துக்கு அமைவாக புதிய தொழில்நுட்ப உத்திகளை கையாண்டு ஏற்றுமதிகளை மேம்படுத்துவதும் இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## இலங்கையின் 'பிரபல வர்த்தகநாமம்' என்ற விருதைப் பெற்றது சிங்கர் ஸ்ரீலங்கா

'இலங்கையின பிரபல வர்த்தகநாமம்' என்ற விருதை தொடர்ந்தும் 11ஆவது ஆண்டாக சிங்கர் ஸ்ரீ லங்கா நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வோட்டர்ஸ் எட்ஜில் அண்மையில் இடம்பெற்றிருந்ததான சிலிம் நெயில்சன் மக்கள் விருதுகள் வழங்கும் நிகழ்வி லேயே மேற்படி இலங்கையில் மிகவும் பிரபலமான வர்த்தகநாமம் என்ற கௌரவ விருதைப் சிங்கர் ஸ்ரீ லங்கா நிறுவனம் தனதாக்கிக்கொண்டுள்ளது.

தவிர, வருடத்தின் இளையோரின் அபிமானத்தைவென்ற வர்த்தகநாமம், நீடித்து உழைக்கும் நுகர்வோர் சாதனங்கள் - வருடத்தின் மிகச்சிறந்த வர்த்தகநாமம் ஆகியவற்றுடன்வருடத்தின்சிலிம்நெயில்சன்மக்களின்வர்த்தகநாமம் - 2017 போன்ற விருதுகளையும் சிங்கர் ஸ்ரீ லங்கா நிறுவனம் வெற்றிகொண்டுள்ளமை நோக்கத்தக்கது.



# ஆடல் அரங்கம்

## இன்று உலக நாடக தினம்

எஸ்.ரி.அருள்குமரன்

அரங்கு சமூக அக்கறை பொருந்திய வடிவமாகும். அரங்கு சமூகமாற்றத்தில் காத நாடகங்களுக்கான விழாவாக உலக நாடக தின விழா எனும் வகையில் பங்குனி மாதம் 27ஆம் திகதி வருடம் தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

பல்வேறு விடயங்களுக்காக தினங்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இத்தினங்கள்கொண்டாடப்படுவதன்நோக்கம்அவற்றின் முக்கியத்துவத்தை மக்கள் புரிந்துகொள்வதற்கும் அவற்றில் காணப்படுகின்ற பண்புகளை சமூகத்துக்குக் கொண்டு செல்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதற்குமாகும்.

இப்பின்னணியில்அரங்கின் கனதியினை வெளிப்படுத்திக் கொள்வதற்கு ஏதுவான வகையில் உலக நாடக தினவிழாவானது பங்குனிமாதம்27ஆம்திகதிகொண்டாடப்பட்டுவருகின்றது.

இத்தினத்திற்கான முன்னோடிச்செயற்பாடாக 1961 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சர்வதேசஅரங்ககூட்டமைப்பின்ஒன்பதாவது ஒன்றுகூடலாக ஹெல்சிங்கி , வியன்னா ஆகியஇடங்களில்சர்வதேசஅரங்கத்திட்டம் உருவாக்கப்பட்டது.

சர்வதேசஅரங்கதிட்டம்எனும்சொல்லுக்கு மாற்றீடாக 'அர்விகமா' என்பவரினால் உலகநாடகதினம்முன்மொழியப்பட்டது. எனினும்1962இல்பரிஸில்பங்குனிமாதம் 27ஆம் திகதி உலக நாடக தினம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன்தொடர்ச்சியாகஒவ்வொருவருடமும் நூற்றுக்குமேற்பட்டநாடுகளில்இத்தினம் கொண்டாடப்பட்டுவருகின்றது.

இவ்விழா மக்களிடையே சமாதானத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் ஆற்றுகைகலையின்சக்தியைமக்கள்முன்னிலையில் வெளிக்கொணர்வதற்கும் அரங்கவியலாளர்களால் கொண்டாடப்பட்டுவருகின்றது.

இவ்விழா தனது நோக்கமாக பின்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளது.

- ஆற்றுகைக் கலையின்முக்கியத்துவத்தையும் அதன் பயில்வையும் சர்வதேச ரீதியில் பரிமாறிகொள்ள ஊக்குவித்தல்
- அரங்ககலைஞர்களிடையேகூட்டுணர்வை உருவாக்குவதிலும்வளர்ப்பதிலும் ஆக்கத்திறன்மீதான அக்கறையை விருத்தி செய்தல்.
- இக்கலைப்படைப்பு மீதானஅபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் விழிப்புணர்வுடன் உருவாக்குதல்
- இந்நிகழ்வில் பங்கு கொள்வதன் மூலம் மக்களிடையே ஆழமான புரிந்துணர்வுக்கு பங்குகொள்ளலை வலுப்பெறச்செய்வதற்கும் முனைப்பூட்டல் மேலும்நடனம்போன்றபிரத்தியேக முறைமைகளுக்கும் முன்னுரிமை கொடுக்கவும் மற்றும் பன்னாட்டுச் செய்திப்பரிமாற்றம் பொது விடயங்களைக்கதைப்பதற்கானபேச்சு வழக்கமுறை வட்டமேசை மாநாடு போன்ற வேறுபட்ட முயற்சிகளுக்காகவும் பன்னாட்டு விழாவாக ஒருநாள் அல்லது ஒருவாரம் அல்லது ஒருமாதம் வரை இவ்விழா கொண்டாடப்பட்டு வருகின்றது.

விழாக்கள் கொண்டாடப்படுவதன் நோக்கம்நினைவுகூரலும் அவைபற்றிய தேடலுமாகும். இன்றையபொழுதுகளில்அரங்கின் ஊடாக கல்விப்புலத்தில் பல மாற்றங்களைக் கொண்டுவரமுடியும் எனும் வகையில்பல செயற்பாடுகளைமேற்கொண்டுவருகின்றன.

ஆயினும்அரங்கைத்தாக்கவன்மையான செயற்பாட்டுவடிவமாக ஏற்றுக்கொள்ளவதில் பலர் தயக்கம் காட்டுகின்றனர்.

அரங்கின் தாக்கவன்மையான செயற்பாடு சமூகத்தில்புரிந்துகொள்ளப்படுகின்றபோது சமூகம்விழிப்புநிலைஅடைந்து புதியபண்பாட்டுபிரவாகத்தினை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

நாடக செயற்பாடுகள் என்பது வெறுமனே மேடை வெளிகளுக்குள் மட்டுப்படுத்தப்படுகின்ற விடயம் அல்ல. நடிகர்கள் என்கின்ற உணர்வுள்ள மனிதர்கள் தமது ஆளுமைகளை வெளிப்படுத்துகின்ற களமாகும்.

அரங்க செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களிடையே உளமாற்றங்கள், தலைமைத்துவத்தை ஏற்றல், பிரச்சினைகளை இலகுவாகக் கையாள்தல், கற்பனைத்திறன் புத்தாக்க திறன், புதிது படைக்கின்ற ஆர்வம் போன்றபல விடயங்கள் வளர்த்தெடுக்கப்படுகின்றன. ஆனால் பெரும்பாலானவர்கள் நாடகக்கலையினை வெறுமனே மேடைக்குரிய வடிவமாக மட்டும் நோக்குகின்றமை வேதனைக்குரியதாகும்.

அரங்கசெயற்பாடுகள் ஆளுமையுள்ளசமூகத்தை உருவாக்கும். கற்றலுக்குத்துணை செய்யும்என்பதினால்கல்வியமைச்சினால் பல்வேறுநாடகப்போட்டிகள்நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

அரங்கதுறைதொழில்முறைசார்ந்த வகையில் ஈழத்து அரங்கப் புலத்தில்வளர்த்தெடுக்கப் படவேண்டியது காலத்தின் தேவையாகும். அத்தகையமுறையில் வளர்த்தெடுக்கப்படுகின்றபோது காத்திரமான அரங்கத்துறை சார்ந்த இயங்கியலாளர்களைப் பிரசவிக்க முடியும்.

இன்றைய பொழுதுகளில் அரங்க துறை சார்ந்துஇயங்குகின்றவர்களில்பெரும்பாலனவர்கள்பகுதிநேரமாகஅல்லதுவேறொரு துறையில் இருந்தவாறு நாடக செயற்பாடுகளை தமது ஆத்ம திருப்திக்காக மேற்கொண்டுவருகின்றமைகுறிப்பிடத்தக்கது.

முழுமையான தொழில் முறை சார்ந்த வகையில்வளர்த்தெடுக்கப்படுகின்றபோது அரங்கு மேலும் விகாசிப்பதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். இதன் சாத்தியங்கள் தொடர்பானவேலைத்திட்டங்கள்முன்னெடுக்கப்படவேண்டும்.

இல்லையேல்அரங்கதுறைசார்ந்தகற்றல்கள்வெறுமனேவிருத்தியடைந்துகொண்டு செல்லும் சூழ்நிலை உருவாவது தவிர்க்க இயலாததாகும்.

அரங்கின்தாக்கவன்மையானசெய்தியை உலகத்துக்கு வெளிப்படுத்தும் வகையில் அரங்கைக் கட்டியெழுப்பவேண்டியது அனைவரது தார்மீகக்கடமையாகும்.

**கட்டுரையாளர் : நாடகத்துறை ஆசிரியர் யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை).**

> நாடக செயற்பாடுகள் என்பது வெறுமனே மேடை வெளிகளுக்குள் மட்டுப்படுத்தப்படுகின்ற விடயம் அல்ல. நடிகர்கள் என்கின்ற உணர்வுள்ள மனிதர்கள் தமது ஆளுமைகளை வெளிப்படுத்துகின்ற களமாகும்.
> அரங்க செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களிடையே உளமாற்றங்கள், தலைமைத்துவத்தை ஏற்றல், பிரச்சினைகளை இலகுவாகக் கையாழ்தல், கற்பனைத்திறன் புத்தாக்க திறன், புதிது படைக்கின்ற ஆர்வம் போன்ற பலவிடயங்கள் வளர்த்தெடுக்கப்படுகின்றன. ஆனால் பெரும்பாலானவர்கள் நாடகக்கலையை வெறுமனே மேடைக்குரிய வடிவமாக மட்டும் நோக்குகின்றமை வேதனைக்குரியதாகும்.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பன்னாட்டு அழுத்தமின்றி தமிழர் பிரச்சினைக்கு தீர்வு எட்ட முடியாதா?

"வடக்கு கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிடிக்குள் சிக்கித் தம்மை விடுத்துக் கொள்ள முடியாமல் தமிழ்மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருந்த நிலைமையில் இருந்து அவர்களை விடுவித்து சுதந்திரம் வழங்கப் போகின்றோம்'' என்று கூறிக் கொண்டு தமிழ் மக்களின் தாயகப் பகுதிகளுக்குள் அப்போதைய மகிந்த ராஜபக்ச அரசால் கட்டவிழ்த்துவிடப்பட்ட படையணிகள் புரிந்துள்ள அட்டூழியங்கள் மற்றும் கொடுமைகளை இனம் கண்டு விசாரித்துக் குற்றம் புரிந்தவர்களையும் அதற்குத் தூண்டுகோளாய் இருந்தவர்களையும் தண்டிக்க வேண்டும் என்று கேட்பதானது உலகின் எந்தவொரு நீதிப் பொறிமுறைக்கும் மாறானது அல்ல. பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் மக்கள் கோருவதும் ஐ.நா.மனித உரிமைகள் சபை தீர்மானம் வலியுறுத்துவதும் இவைதான்.

இந்த விசாரணையானது எவ்வாறு அமைய வேண்டும் என்பதிலேயே சர்ச்சை தோன்றியுள்ளது. விசாரணை பொதுமுறையில் குறிப்பாக விசாரணை நீதிமன்றமானது பன்னாட்டு நீதிபதிகளையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும் என்று தீர்மானம் வலியுறுத்துகின்றது. உள்நாட்டு நீதிமன்றங்களின் கடந்த காலத் தீர்ப்புகள் நீதிபதிகளின் முன்னைய செயற்பாடுகளில் நம்பிக்கை இழந்தமையாலேயே பன்னாட்டு நீதிபதி களையும் இணைக்கும்படி கோரப்படுகின்றது. மனித உரிமைகள் ஆணையாளரும் அதனையே வலியுறுத்தி வருகின்றார்.

பத்து ஆண்டு காலம் இலங்கையின் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்த மகிந்த ராஜபக்சவால்; அவரது ஆட்சிமுறையால் சீரழிக்கப்பட்டுவிட்ட நீதித்துறையானது இப்பொழுது மிகவும் புனிதமானதாகி விட்டது என்பதாக இரண்டு வருடகாலமே பதவியில் இருந்து இன்னமும் தமது கட்சியின் தலைமைப்பதவியையே உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் அவதியுறுகின்ற இப்போதைய அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன கூறிவருவது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகத் தெரியவில்லை. முன்னைய ஆட்சியாளரால் தலைமை நீதியரசராக நியமிக்கப்பட்டிருந்தவரான பிரமுகர் புதிய அரச தலைவர் பதவி ஏற்றதும் 'நீங்கள் சொல்கிறபடியெல்லாம் தீர்ப்பு வழங்குகிறேன் என்னை மட்டும் பதவியிலிருந்து நீக்கிவிடாதீர்கள்' என்று கேட்டுக் கொண்டார் என சிறிசேனாவே சமீபத்தில் பகிரங்கமாகக் கூறியிருந்தார். இப்படியான பிரமுகர்கள் எத்தனை பேர் இன்னமும் இவ்வாறான முக்கிய பதவிகளில் இருக்கிறார்கள் என்பதை யார் அறிவார்கள்? எனவேதான் உள்ளக விசாரணை என்ற மாயமந்திரத்துக்குத் தமிழ் மக்கள் இணங்க மறுக்கிறார்கள்.

அதிகாரப் பீடங்களிலும் சரி, அரச உயர் மட்டத்தலைமைகளிலும் சரி அமர்ந்திருப்பவர்கள் பெரும்பாலும் பேரின மக்கள் சார்ந்தவர்களாய் இருப்பதுவும் அவர்கள் அவ்வப்போது வெளியிடும் ஒரு தலைபட்சமான கருத்துக்களும் தமிழ் பேசும் மக்களை நம்பிக்கை கொள்ளச் செய்யவில்லை. மாறாக அவர்களை நம்பிக்கை இழக்கும்படியே செய்கின்றன.

உண்மையாகவேதமிழ்மக்களின்நீண்டகாலப்பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வை வழங்கி, அவர்களையும் தேசிய நீரோட்டையில் இணைத்துக் கொண்டு நாட்டை முன்னேற்றும் அக்கறை கொண்டவர்களாய் இருப்பார்களானால் அவர்களுக்குள் இந்த விடயத்தில்ஒருதீர்க்கமானமுடிவுஎடுக்கப்பட்டுஅறிவிக்கப்படுவது அவசியம். இது தமிழ் பேசும் மக்கள் நியாயமான தீர்வு என்று ஏற்றுக் கொள்ளப்படுவதாக இருக்க வேண்டும். எழுந்தமானமாக தமிழ்த்தரப்பில் அங்கும் இங்குமாகக் கூறப்படும் கருத்துக்கள் ஏகோபித்த தமிழ் மக்களின் கருத்தாக இருக்க முடியாது. அவ்வாறான ஒருகருத்தை தமிழ் மக்கள் வெளிப்படுத்தும்படியான நிலை உருவாக வேண்டும் அதே போல் ஆட்சியில் இப்போது இரண்டு பெரிய கட்சிகள் அமர்ந்திருப்பதை வைத்துக் கொண்டு தேசிய பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியும் என்று கூறிக் கொள்வதில் பயன் இல்லை. இரண்டு பெரும் கட்சிகளும் இணைந்து தமிழர் பிரச்சினைக்கு அவர்களின் தீர்வு இன்னதுதான் என்பதை பகிரங்கப்படுத்துவார்களானால், தமிழர் கள் அது பற்றிய நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது சாத்தியமாகும்.

தமிழர்கள் எதைவிரும்புகிறார்கள் எவ்வாறு தீர்வு அமைய வேண்டும் என்பதை அவர்கள் பலதடவைகளிலும் வெளிப்படுத்தி விட்டார்கள், அவர்களிடம் தீர்வுபற்றிய ஒளிவு மறைவு கிடையாது. தென்னிலங்கை கட்சிகளும் தலைவர்களும்தான் தகிடுதத்தம் புரிந்துவருகிறார்கள். இந்தப் பிரச்சினை 60 வருடங்களுக்கு மேல் இழுத்தடிக்கப்பட்டு வருவது போல் தொடர்ந்தும் நீடிப்பது பதவியில்அமர்வது எந்தக்கட்சிஎன்பதைத்தீர்மானிப்பதற்கு உதவியாக இருக்கிறது. தமிழர் நிம்மதியாகவும் திருப்தியோடும் வாழ்வதை பேரின கட்சிகளும் தலைவர்களும் மனமாறவிரும்பாவிடில் அது சாத்தியமாகாது. இல்லையெனில் பன்னாட்டு அழுத்தமே அதற்கான மருந்து. அது எவ்வாறு அமையும் என்பதை எதிர்காலம் தான் எடுத்துக் கூறுவதாய் இருக்கும்.

# அகதி என்ற இழிநிலை இனியும் தொடர வேண்டுமா?

சேரலாதன்

இலங்கையில் தொடர்ந்து இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக ஏராளமானதமிழர்கள்புலம்பெயர்ந்து வேறுநாடுகளில்அகதிகள்என்ற பெயருடன் வாழத் தலைப்பட்டனர். ஆரம்பத்தில் இலங்கையின் அயல்நாடான இந்தியாவுக்கும் பின்னர் மேற்குலக நாடுகளுக்கும் இவர்கள் புலம்பெயர்ந்து செல்லத் தலைப்பட்டனர். இன்றையநிலையில்ஈழத் தமிழர்கள் வசிக்காத நாடே இல்லையென்று கூறும் அளவுக்கு ஏற்பட்டுள்ளது. நாட்டின் இரண்டாவது பெரிய இனம் என்ற கௌரவத்தைத் தமிழர்கள் விரைவில் இழந்துவிடுவார்களோ என எண்ணத் தோன்றுகின்றது. அத்துடன் இன ரீதியானசலுகைகளையும்இழந்துவிடக் கூடிய அபாய நிலையும் தோன்றியுள்ளது.

இலங்கையைப்போன்றுவேறு நாடுகளிலும் பலர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். சிரியாவில் அரசபடைகளுக்கும்அரசுக்குஎதிரான கிளர்ச்சிக் குழுக்களுக்கிடையில் இடம்பெறுகின்ற மோதல்களில் சாதாரண அப்பாவிப் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதுவரை இலட்சக்கணக்கானவர்கள்கொல்லப்பட்டுவிட்டனர்.

அரச தலைவராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் அமெரிக்காவில்வெளிநாட்டவர் குடியேறுவதில் தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அமெரிக்காவைத்தொடர்ந்துஏனைய நாடுகளும் அகதிகள் மீது இறுக்கமான கொள்கைகளைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துவிட்டால் அகதிகளின் நிலை மோசமாகவே மாறிவிடும்.

உலகளாவிய ரீதியில் ஆபிரிக்க நாடுகளைச்சேர்ந்தஅகதிகளின் நிலைதான் படுமோசமாகக் காணப்படுகின்றது. வறுமையும் பஞ்சமும் நிறைந்த அந்த நாடுகளில் பயங்கரவாதச் செயல்களும் குறைவின்றி இடம்பெற்று வருகின்றன. இதனால் தினமும் பலர் கொல்லப்படுகின்றனர். இங்குள்ள இனங்களுக்கு இடையிலான மோதல் சம்பவங்கள் இனரீதியில் பாதிப்பைஏற்படுத்துவதால் அந்த நாட்டு அரசுகள் இவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மக்கள் அகதிகளாக வெளியேறும்போது அவர்களுக்குப் போதிய ஆதரவு வழங்கப்படாதமைபெரும்பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.



நிலைமை மாறிவிட்டது. இந்தியாவுக்குச் சென்ற ஈழத்தமிழர்களில் வசதி படைத்தவர்கள் வாடகைக்குவீடுகளைப்பெற்று வாழத் தலைப்பட்டனர். வசதி குறைந்தவர்கள் அகதிகளுக்கென அமைக்கப்பட்ட முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். இவர்களில் பலர் இன்றுவரை அடிப்படை வசதிகள் எதுவுமற்ற அந்த முகாம்களிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றனர்.

## மேற்குலக நாடுகளுக்கு புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள்

ஆஸ்திரேலியா,அமெரிக்காமற்றும் மேற்குலக நாடுகளுக்கு அகதிகளாகச் சென்ற ஈழத்தமிழர்கள், அங்கு கடுமையாக உழைத்து அனுப்பி வைத்த பணம் இங்குள்ள அவர்களது உறவினர்களுக்குப் பேருதவியாகஅமைந்தது. கொடியபோர் நடந்தபோது இந்தப் பணமே இங்குள்ளபலகுடும்பங்களைக் காப்பாற்றியமையை எவருமே மறந்து விட முடியாது.

ஈழத்தமிழர்களில் பலர் புலம்பெயர்ந்து சென்றுவிட்டதால், உள்நாட்டில்தமிழர்களின்எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி இதில்பெருமளவுசிறுவர்களும் கொல்லப்பட்டமை பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. சிரியாவில்நிலவுகின்றமோசமான சூழ்நிலைகாரணமாகஇலட்சக்கணக்கான சிரியர்கள்புலம்பெயர்ந்துவேறுநாடுகளில்தஞ்சமடைந்து வருகின்றனர். ஜேர்மனி உள்ளிட்ட மேற்குலக நாடுகள்இந்தமக்களுக்குநேசக்கரம் நீட்டின. இதனால்சிரிய அகதி கள் அந்த நாடுகளில் பெருமளவில் தஞ்சமடைந்தனர். ஆனால் ஐ.எஸ்.பயங்கரவாதஅமைப்பினர் இந்த மக்களின் நிம்மதிக்கு வேட்டு வைத்து விட்டனர்.

## வெளிநாடுகளில் ஐ.எஸ். அமைப்பினரது தாக்குதல்கள் ஏற்படுத்திய பாதிப்பு

பிரான்ஸிலும் வேறு சில நாடுகளிலும் ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்டதாக்குதல்சம்பவங்கள், அந்த நாடுகளுக்கு வெளிநாட்டு அகதிகள் மீது வெறுப்பை வளர்த்துவிட்டது. இதனால்அகதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இதே வேளை அமெரிக்காவின் புதிய

இஸ்ரேல் என்ற நாடு யூத அகதிகளால் உருவாக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. இரண்டாவது உலக ப்போரின் போது சர்வாதிகாரி ஹிட்லரால் பல இலட்சக்கணக்கானயூதமக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். விசவாயுக் கூண்டுகளில் அடைத்து வைக்கப்பட்டுச் சுமார் 60 இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்டமை உலகையே அதிரவைத்தது. இவ்வாறு மோசமான பாதிப்புக்களை எதிர் கொண்ட யூத மக்களால் இனிமேல் அகதி என்ற பெயருடன்எங்குமேஅலைந்து திரிய முடியாது என்ற வைராக்கியத்துடன் உருவாக்கப்பட்டதுதான் இஸ்ரேல் என்ற அந்த நாடு.

இந்தஉலகில்அகதிஎன்றசொல் தொடர்ந்து புழக்கத்தில் இருந்து வருகின்றமை மனித குலத்துக்கே அவமானத்தை ஏற்படுத்திவருகின்றது. மனிதர்களில் ஒரு பிரிவினர் பிறரால் வஞ்சிக்கப்பட்டுத் தாம் வாழ்ந்த இடங்களிலிருந்து துரத்தப்பட்டு அகதி என்ற அவப்பெயருடன் வாழ்தல் இந்தவுலகில் இனியும் தொடர வேண்டுமா? நாகரிகமுள்ள மனித சமுதாயத்தில் இந்த இழிநிலை இல்லாமற் செய்யப்பட வேண்டும்.

மு.ஈழத்தமிழ்மணி

# ஆர்.கே. நகரில் வெல்லப்போவது யார்?



தமிழக மக்களின் முக்கிய கவனத்தையும், அ.தி.மு.கவின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கின்ற ராதாகிருஷ்ண நகர் சட்டசபைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது. தமிழ் நாட்டையும் தாண்டி உலகத் தமிழர்கள் மத்தியில் இந்தத் தேர்தல் ஓர் எதிர்பார்ப்பைத் தோற்றுவித்துள்ளது. தமிழக முதலமைச்சராகவிருந்த ஜெயலலிதா ஆர்.கே.நகர் என சுருக்கமாக அழைக்கப்படும் ராதாகிருஷ்ண நகர் தொகுதியில் கடந்த தேர்தலில் போட்டியிட்டு பெரு வெற்றியீட்டியிருந்தார். ஜெயலலிதாவின் மறைவையடுத்தே குறித்த தொகுதிக்கான இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது.

50 ஆண்டுகாலம் திராவிடக் கழக ஆட்சியை தமிழகம் நிறைவு செய்த பெருமையைப் பெற்றிருந்தாலும் தி.மு.க, அ.தி.மு.கவினது ஆட்சியைத் தவிர இந்திய தேசியக் கட்சிகளையோ அல்லது தமிழகத்தில் உருவாகிய பிற மாநிலக் கட்சிகளையோ தமிழக மக்கள் பெரிய அளவுக்கு ஆதரித்ததில்லை.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்குப்பின்னர் அ.தி.மு.க என்ற கோட்டைக்குள் பெரும்புயல் வீசத் தொடங்கியது. ஜெயலலிதாவின் இரும்புப் பிடியில் இருந்த அ.தி.மு.க இன்று இரண்டாகப் பிளவுபட்டுள்ளது.

கடந்த நான்கு மாதங்களில் அ.தி.மு.க, சசிகலா தலைமையில் ஓர் அணியாகவும் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் மற்றொரு அணியாகவும் பிரிந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்விதம் கட்சி பிளவுபட்டதால் அ.தி.மு.க தொண்டர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தி, குழப்பங்கள், சந்தேகங்கள் நீடித்துக் கொண்டிருக்கையில் ஆர்.கே.நகர் தொகுதிக்கான தமது கட்சி சார்பான வேட்பாளர்களைத் தமிழக அரசியல் கட்சிகள் அறிவித்துக் கொண்டிருக்கின்றன. வேட்பாளர்களின் மனுக்கள் தேர்தல் ஆணையத்தால் மார்ச் 23 ஆம் திகதி வரை ஏற்கப்பட்டன. சசிகலா தரப்பு அ.தி.மு.கவினர் தமது தரப்பு வேட்பாளராக சசிகலாவின் அக்காவின் மகனான டி.டி.வி தினகரனைத் தேர்ந்தெடுத்துள்ளனர். பன்னீர்செல்வம் அணி அ.தி.மு.கவின் சார்பில் ஆர்.கே.நகர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் மதுசூதனன் போட்டியிடுகின்றார்.

அ.தி.மு.கவில் ஏற்பட்ட பிளவுகள், தலைமைப்பதவிக்கான பிரச்சினை, அதிகாரப பிரச்சினைகள், உறுப்பினர்களின் வெளியேற்றங்கள் என பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் ஆ.கே.நகர் சட்டசபைத் தேர்தலில் இரண்டு அணியினரும் களம் இறங்கவுள்ளனர்.

### சசிகலா மீது வெறுப்பு

அ.தி.மு.க. தொண்டர்கள் மத்தியில் சசிகலா மீது கடும் வெறுப்பு இருந்து வரும் நிலையில் சசிகலா அணிசார்பில் போட்டியிடும் டி.டி.வி. தினகரன் முன்னர் ஜெயலலிதாவினால் துரோகி எனக் குற்றம் சாட்டப்பட்டு கட்சியிலிருந்தும் போயஸ்கார்டனிலிருந்தும் துரத்தியடிக்கப்பட்டவர் என்ற குற்றச்சாட்டு அவர் மேல் உள்ளது.

தி.மு.க. சார்பில் ஆர்.கே. நகர் தொகுதியைச் சேர்ந்தவரும், 40 வருடகால அரசியல் அனுபவம் கொண்டவருமான மருதுகணேஸ் என்பவர் போட்டியிடுகின்றார். பாரதிய ஜனாதாகட்சி சார்பில் இசையமைப்பாளரான கங்கை அமரனும், எம். ஜி.ஆர் அம்மா, தீபா பேரவையின் சார்பில் ஜெயலலிதாவின் மருமகளான தீபாவும், நாம் தமிழர் கட்சியின் சார்பில் ஒருவரும், நடிகர் விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.கவின் வேட்பாளர் ஒருவரும் போட்டியிடுகின்றனர். மற்றும் பல கட்சிகளும் சுயேச்சைகளும் போட்டியிடுவதாகத் தெரிய வருகின்றது. வழமைபோல் வாக்காளர்கள் மத்தியில் பணம் புரளும் வாக்குகளை விலைக்கு வாங்குவதற்காக அ.தி.மு.கவினரின் இரண்டு அணியினரும், தி.மு.க வினரும் போட்டிபோட்டுக் கொண்டு செயற்படுவார்கள். கடந்த காலத்தில் நடைபெற்ற சகல தேர்தல்களின்போதும் வாக்காளர்களுக்கு பணம் வாரி இறைக்கப்பட்டது. குறிப்பாக ஜெயலலிதாவின் ஆட்சிக்காலத்திலேயே தேர்தலில் வேட்பாளர்கள், நிர்வாகி களிடையே பெருமளவில் வாக்குக்காகப் பணம் கையாளப்பட்டது.

மார்ச் மாதம் 23 ஆம் திகதி வேட்பாளர்கள் தத்தமது கட்சிகள் சார்பில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். மார்ச் 22 ஆம் திகதி இந்தியத் தேர்தல் ஆணையத்தில் அ.தி.மு.கவின் இரு அணியினரும் தேர்தல் இலச்சினையாக இரட்டை இலைச்சின்னம் தங்களுக்கே ஒதுக்கப்பட வேண்டும் என வழக்கறிஞர்கள் மூலமாக தேர்தல் ஆணையத்தைக் கோரியிருந்தனர்.

### ஏமாற்றமே மிஞ்சியது

இரட்டை இலைச்சின்னம் தங்களுக்கே கிடைத்துவிடும் என்ற பெரும் நம்பிக்கையோடு இரு அணிகளும் காத்திருந்தனர். முடிவில் இரண்டு அணிகளுக்கும் ஏமாற்றமே மிஞ்சியது. தேர்தல் ஆணையத்தினரால் இரட்டை இலைச் சின்னம் முடக்கப்பட்டு அ.தி.மு.க. என்பதன் கீழ் போட்டியிட முடியாது எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதையடுத்து இரு அ.தி.மு.கவின் அணிகளுக்கும் சின்னம், கட்சி சம்பந்தமாக நெருக்கடிகள் தலைதூக்கின.


தேர்தலுக்கான வேட்பு மனுசமர்ப்பித்தலின் இறுதி நாளான மார்ச் 23 ஆம் திகதி அ.தி.மு.கவின் இரண்டு அணி சார்பில் போட்டியிடுகின்ற இரு வேட்பாளர்களுக்கும் தங்களுக்கு ஏதுவான மூன்று சின்னங்களை ஒதுக்கி அறிவிக்குமாறு தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது. பன்னீர்செல்வம் அணி தமது வேட்பாளராக மதுசூதனையும் சசிகலா தரப்பு டி.டி.வி. தினகரனையும் வேட்பாளர்களாக நிறுத்தியதன் மூலம் கட்சியின் பிளவு உறுதிப்படுத்தப்பட்டதை தேர்தல் ஆணையம் உறுதி செய்து கொண்டு சசிகலா தரப்பு அ.தி.மு.க அம்மா அணியினருக்கு தொப்பிச் சின்னமும் ஓ.பி.எஸ். தரப்பு அ.தி.மு.க புரட்சிதலைவி அம்மா அணியினருக்கு இரட்டை விளக்குமின்கம்பம் சின்னமும் தேர்தல் ஆணையத்தால் ஒதுக்கப்பட்டன. தேர்தல் ஆணையத்தால் ஜெயலலிதாவின் அண்ணன் மகளான தீபாவும் முக்கிய வேட்பாளராக இடைத்தேர்தலில் போட்டியிடுகிறார். எவ்வித அரசியல் பின்னணியும் இல்லாத தீபாவுக்கு ஜெயலலிதாவின் மருமகள் என்ற அடையாளம் மட்டும் ஒட்டியிருக்கின்றது.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்த நாளிலிருந்து தேர்தல் பரப்புரைகளும் கூடவே ஆரம்பமாகியுள்ளன. தொப்பி சின்னத்தில் போட்டியிடுகின்ற அ.தி.மு.க அம்மா தரப்பினர் தமது தரப்பு வேட்பாளரான டி.டி.வி. தினகரன் பல்லாயிரக்கணக்கான மேலதிக வாக்குகளால் வெற்றி பெறுவார் என்று கூறி வருவதுடன் தொப்பி சின்னத்துக்கான விளக்கத்தையும் கொடுத்திருக்கிறார்கள். மறைந்த முதலமைச்சரான எம்.ஜி.ஆர். தொடர்ச்சியாக அணிந்திருந்த தொப்பியானது தமிழக மக்களுக்கு நன்கு பரிச்சயமானது. தொப்பி சின்னம் வாக்காளர்களுக்கு எம்.ஜி.ஆரை நினைவூட்டும் எனவும் அந்தத் தரப்பினர் கூறி வருகின்றனர். இரட்டை விளக்கு மின்கம்ப சின்னத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளரான மதுசூதனன் ஆர்.கே. நகர் வாக்காளர்கள் தங்கள் பக்கமிருப்பதாக கூறினார். அத்துடன் இரட்டை விளக்குமின்கம்பச்சின்னம் எம்.ஜி ஆரினால் உருவாக்கப்பட்ட அ.தி.மு.கவின் சின்னமான இரட்டை இலையை இலகுவாக மக்களுக்கு நினைப்பூட்டக் கூடியதாக இருக்கும் என்ற கருத்தையும் முன்வைத்துள்ளனர். தி.மு.க.வில் கலைஞரின் மகனான மு.கா ஸ்டாலின் செயல் தலைவராக இருப்பதனாலும், அவருடன் மூத்த தலைவர்கள் பலர் பக்கபலமாக செயற்படுவதனாலும். ஆர்.கே.நகரில் தி.மு.க சார்பில் போட்டியிடுகின்ற வேட்பாளருக்கு வெற்றிவாய்ப்பு சாதகமானதாக அமையலாம்.

ஜெயலலிதா தமது ஆளுமையாலும். அபரிமிதமான மக்கள் ஆதரவாலும் தமிழகத்தை இரும்புப் பிடிக்குள் வைத்திருந்தார் "மக்களால் நான்... மக்களுக்காகவே நான்" என்ற தாரகமந்திரம் ஒன்றே அவருக்கு பலமான சக்தியாக அமைந்திருந்தது.

### வாக்காளர்களின் மனநிலை

தமிழக வாக்காளர்களின் மன நிலை எவ்வாறு அமையும் என்பதை நாடிபிடித்துப் பார்க்கின்ற இடைத்தேர்தலாக இது அமையும் என்பதை எதிர்பார்க்கலாம். நான்கு முனைப் போட்டிகளே கடுமையானதாக இருக்கும். ஸ்ராலின் தலைமையில் முதன் முதலாக தி.மு.க. சந்திக்கின்ற தேர்தலாக ஆர்.கே.நகர் தொகுதிக்கான இடைத்தேர்தல் அமைகின்றது.



## வாசகர் திருமுகம்

### அரச நியமனங்களில் பொருத்தமற்ற சேவை இணைப்பு பட்டதாரிகளுக்கு ஏன் இந்த அவல நிலை...?

முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு சாதாரணமாக உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு பொது உளச்சார்பு மற்றும் பொது அறிவு பரீட்சைகளை நடத்துவதன் மூலம் அவர்களுக்கிடையே சிறந்த பெறுபேறுகளைப் பெறுபவர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். அவர்களுக்கு இரண்டு அல்லது நான்கு வார கால பயிற்சியும் பூரண சம்பளத்துடன் கூடியதான நிரந்தர நியமனமும் வழங்கப்படுகின்றது.

ஆனால் உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகி நான்கு அல்லது ஐந்து வருடங்கள் படித்து பட்டம் பெற்ற பட்டதாரிகளோ பல வருடங்கள் வேலைக்காக காத்திருக்க வேண்டியுள்ளது. அப்படி காத்திருந்து அரச நியமனத்தை பெற்றுக்கொள்கின்ற போதும் பட்டதாரிப் பயிலுநர்கள் என்ற வகையறையினுள் அவர்களை உள்ளீர்த்து ஒரு வருட காலத்துக்கு பத்தாயிரம் ரூபாவுடனான பயிற்சிக்கான நியமனங்களையே அரசு வழங்குகிறது.

அவ்வாறாயின் பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சைக்கு ஈடில்லாத ஒரு வருடகால பயிலுனர் பயிற்சியின்றி சாதாரணமாக ஒரு அரச அலுவலகத்தில் வேலை செய்வதற்கும் உகந்ததல்லாத உயர்கல்வியையே அரசு பல்கலைக் கழகங்களில் பாடத்திட்டமாக வகுத்து கற்பித்து வருகின்றதோ என எண்ணத் தோன்றுகிறது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் (கல்விக் கல்லூரிகளில்) இருந்து வெளியேறுபவர்களுக்கு துரிதமாக ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுகின்ற போதும் பல்கலைக் கழகத்திலிருந்து பட்டதாரியாக வெளியேறுபவர்கள் உடனடித் தன்மையோடு அரச நியமனங்களில் உள்ளீர்க்கப்படுவதில்லை. நீண்ட காலம் காத்திருப்புப் பட்டியலினுள் சாய்ந்துகொண்டு முடங்கிக் கிடக்க வேண்டியுள்ளது. படிப்புரிமைக்காக தொடர்ந்து போராட வேண்டியுள்ளது.

அரசும் அதன் கீழாய் மக்கள் பணத்தை சுரண்டவென உட்கார்ந்துள்ள அரசியல் தலைமைகளும் இந்த விடயங்களைக் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. இவர்கள் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது பட்டதாரிகளைக் கேளிக்கையோடு வேடிக்கை பார்ப்பதென்பது பொருத்தமான காரியமல்ல. வெறுமனே வாக்குறுதிகளை வழங்கிவிட்டு கதிரைகளில் அமர்ந்து கொண்டு கொட்டாவி விடுவதென்பது மாணவர்களதும், அவர்களை ஊக்குவித்து உயர்நிலை பெறச் செய்த பெற்றோரினதும். அவர்களின் ஈடு இணையற்ற உன்னத உழைப்பினதும் உணர்வின் உய்வினை முற்றாக வெட்டிச் சாய்த்துவிடும் விசமத்தனம். ஆக, மாணவர்களது வளமான எதிர்காலம் ஒளிமயமாவது குறித்து திட்டமிட்டு வினைத்திறனோடு செயலாற்ற அரசு முன்வர வேண்டும். சிந்தியுங்கள்...! திறம்படச் செயலாற்றுங்கள்.....!!

*ஊரோடி*

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். மனம், செயலில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்து மூலம், வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பரின்நற்செயலைபாராட்டிமகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும். வருமானம் படிப்படியாக உயரும்.

**மிதுனம்:** மனதில் குழப்பமான சூழ்நிலை ஏற்படலாம். பெற்றோரின் ஆலோசனை நம்பிக்கை அளிக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கடகம்:** உறவினரில் சிலர் எதிர்பார்ப்பு எண்ணத்துடன் அணுகுவர். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**சிங்கம்:** கடந்த கால உழைப்புக்கான நற்பலன்தேடிவரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.



**கன்னி:** மற்றவருக்கு தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில்தாராளபண வரவு கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரிடம் பரிசு, பாராட்டு பெறுவர். ஆரோக்கியம் பலம் பெறும்.

**துலாம்:** திட்டமிட்ட பணியில் திடீர் மாற்றம் செய்யநேரிடலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், பணி விஷயமாகவெளியூர்செல்வர். வாகனத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும்.



**விருச்சிகம்:** குடும்பப்பிரச்சினையைபிறரிடம் சொல்லவேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

**தனுசு:** வாழ்வில்இனியஅனுபவம்கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் பரிசு, பாராட்டுப் பெற்று மகிழ்வர். நண்பரின் உதவி கிடைக்கும்.

**மகரம்:** பேச்சு, செயலில் நிதானத்தை கடைபிடிக்கவும். தொழிலில்லாபம்சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம். பெண்கள் குடும்ப ஒற்றுமையைப் பேணுவது நல்லது.

**கும்பம்:** பேச்சில் அன்பும், பண்பும் கலந்திருக்கும். நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சியால் ஆதாயம் உயரும். பெண்களுக்கு பண வசதி கிடைக்கும்.

**மீனம்:** செயலில் தடுமாற்றம் உருவாகலாம் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச்சந்தித்தாலும்வருமானம்காண்பர்.



இனிமேல் சாஜ் குறையவே குறையாது



குடத்துல தண்ணி புடிச்ச காலம் வரை பெண்கள் தான் தூக்குனாங்க... இந்த தண்ணி கான் வந்ததுல இருந்து ஆண்களைத்தான் தூக்க விடுறாங்க!

காதல் இல்லாமல்கூட வாழமுடியும் ஆனால்....



கறிக்குழம்பு இல்லாமல் வாழமுடியாது...

**ஆண்கள் மது அருந்திய பின் தேவையில்லாததை எல்லாம் பேசிக் கொண்டே இருப்பார்கள், அதிகமாக உணர்ச்சி வசப்படுவார்கள், மிக மோசமாக வண்டி ஓட்டுவார்கள், சிந்திப்பதையே நிறுத்தி விடுவார்கள் காரணம் இல்லாமல் சண்டைக்கு வருவார்கள்... ஆனால் பெண்களோ, மது அருந்தாமலேயே இவை அனைத்தையும் செய்யும் திறன் பெற்றவர்கள்...**




## புதிய படத்தில் நடிக்கிறார் ஸ்ரீதேவி



தன்னுடைய ஆழமான நடிப்பாலும், அழகாலும் தமிழ், இந்திப் படங்களில் முன்னணி இடம் பிடித்தவர் ஸ்ரீதேவி. பிரபல பொலிவூட் தயாரிப்பாளர் போனி கபூரை திருமணம் செய்து கொண்ட பின்னர், தனது திரையுலகப் பயணத்துக்கு அவர் சிறிது காலம் ஓய்வு கொடுத்தார். நீண்ட இடைவெளிக்கு பிறகு 'இங்கிலீஷ் விங்கிலீஷ்', 'புலி' படங்களில் நடித்தார். இப்போது ஸ்ரீதேவி 'மாம்' (அம்மா) என்ற படத்தில் முன்னணி கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

தமிழ், தெலுங்கு, ஹிந்தி என மூன்று மொழிகளில் தயாராகும் இந்தப் படத்தை ஸ்ரீதேவியின் கணவர் போனி கபூர் தயாரிக்கிறார். அறிமுக இயக்குநர் ரவி உதயவார் இயக்குகிறார். நடிகை ஸ்ரீதேவியுடன், அக்ஷய் கண்ணா, நவாஸுதீன், சித்திக் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர்.

ஏ.ஆர்.ரகுமான் இந்தப் படத்துக்கு இசையமைக்கிறார். படப்பிடிப்பு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. எதிர் வரும் ஜூலை மாதம் 14 ஆம் திகதி உலகமெங்கும் இந்தப் படத்தை ஜீஸ்டுடியோஸ் வெளியிடுகின்றது.


## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 5 | | 4 | | | 3 | |
| | | | | | 2 | 5 | 1 | 4 |
| | | 3 | 5 | | | | 8 | |
| | | | | | 5 | 8 | | 9 |
| | 5 | | | | | | 4 | |
| 9 | | 8 | 1 | | | | | |
| | | | | | 7 | 6 | | |
| 1 | 3 | 2 | 8 | | | | | |
| | 6 | | | 2 | | | | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 9 | 4 | 7 | 2 | 8 | 3 | 1 |
| 8 | 7 | 1 | 3 | 9 | 6 | 5 | 2 | 4 |
| 3 | 2 | 4 | 1 | 5 | 8 | 7 | 9 | 6 |
| 9 | 4 | 2 | 6 | 8 | 5 | 1 | 7 | 3 |
| 1 | 8 | 3 | 2 | 4 | 7 | 6 | 5 | 9 |
| 6 | 5 | 7 | 9 | 1 | 3 | 4 | 8 | 2 |
| 7 | 3 | 6 | 5 | 2 | 1 | 9 | 4 | 8 |
| 2 | 9 | 8 | 7 | 6 | 4 | 3 | 1 | 5 |
| 4 | 1 | 5 | 8 | 3 | 9 | 2 | 6 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவை கள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச்சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# மின்சாரம் தாக்கினால்...

மின்சாரம்நின்றுவருகின்றபிரச்சினை இருந்தாலும், மின்சாரம் இல்லாமல்எம்மால் இருக்க முடிவது இல்லை. எங்கேயும், எதிலும் மின்சாரத்தின் தேவை என்பது நீக்க மறக்கலந்துவிட்டது. மின்சாரத்தாக்கம்வாங்காதவர்கள் ஒருவர்கூட இருக்கமாட்டார். சிறிய அளவில் நாம் அனைவரும் மின்சாரத்தாக்கத்துக்கு உள்ளாகியிருப்போம்.

மின்சாரம் தாக்கியவர்களுக்கு முதலில் மின் இணைப்பைத் துண்டிப்பதே, நாம் செய்யும் முதல் உதவி

மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானவர் மின் கம்பியைத் தொட்டுக் கொண்டு இருந்தால், முதலில் பிரதான ஆழியை அணைக்க வேண்டும்.

ஆழியை எது எனக் கண்டறிய முடியவில்லை என்றால், மொத்த மின் இணைப்பையே துண்டிக்கலாம்.

அதுவும்முடியவில்லைஎன்றால், நன்கு உலர்ந்த மரக்கட்டைபோன்ற மின்கடத்தாப் பொருள்களைப் பயன்படுத்தி, மின் கம்பியில் இருந்து அவரது கையை நகர்த்தி மின் ஓட்டத்தைத் தடை செய்யலாம்.

மின் கடத்தாப் பொருள்களைக்கொண்டு மின் ஓட்டத்தைத் தடை செய்யும்போது, அப்படிச் செய்கிறவர் கண்டிப்பாக ரப்பர் செருப்பு அல்லது ரப்பர் கையுறைகளை அணிந்து இருக்கவேண்டும்.

உலோகப் பொருள்களைக் கொண்டு மின் இணைப்பைத் துண்டிக்கக் கூடாது.

பிறகு பாதிக்கப்பட்டவரின் நாடித்துடிப்புப் பரிசோதனை, சுவாசப்பாதை சோதனை போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்.

மின்சாரத்தால் கருகிப்போன உடல் பாகத்தைச் சுமார் 10 நிமிடங்கள் சுத்தமான ஈரத் துணியால் மூடி வைக்க வேண்டும். பின்னர் நீர் உறிஞ்சும் சுத்தமான துணி ஒன்றால் மூடிக் கட்ட வேண்டும்.

கழுத்துப்பகுதியைத்தொங்கவிடாமல், சீரான முறையில்முட்டுக்கொடுத்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

மின்அதிர்ச்சிஅடிபட்டவருக்குவெளிப்படையாகப் பாதிப்பு ஏதும் தெரியாமல் இருக்கலாம். மின்சாரம் எம் உடலில் பாயும்போது உள்உறுப்புகளைப்பாதிக்கச்செய்யலாம். எனவே மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை பெறுவது நல்லது.

# அதிர்ஷ்டக் கற்கள்

பிறவியிலேயேசிலருக்குஅதிர்ஷ்டஅமைப்புகள்அமைந்திருக்கும். சிலர்தங்கள்உழைப்பினாலும், தெய்வ வழிபாட்டினாலும், சாமர்த்தியத்தினாலும் அதிர்ஷ்டகரமான நல்வாழ்வை அமைத்துக் கொள்வார்கள். இந்த வகையில், ஒவ்வொருவரின் அதிர்ஷ்டத்தையும் மேன்மேலும் பெருகச் செய்யும் ஆற்றல் மிக்கவை நவரத்தினங்கள் ஆகும். நவரத்தினங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர்ஆற்றல்உண்டு. அவற்றில்தங்கள்பிறந்தஎண்ணுக்கேற்றஅதிர்ஷ்டக்கல்லைவாங்கி, தங்கள் உடலில் படும்படி அணிந்துகொண்டால், அந்தக் கற்களின் ஆற்றல் உடலில் பாய்ந்து, உடல் நலக் குறைபாடுகளைப் போக்குவதோடன்றி, அதிர்ஷ்டகரமான வாழ்வையும் அள்ளித் தருகிறது.

**அதிர்ஷ்டக் கற்கள் - மாணிக்கம்**

மாணிக்கத்துக்கு ஆங்கிலத்தில் ரூபி என்று பெயர். மாணிக்கம் சிவப்பு நிறமுடைய, பூமியில் விளையக்கூடிய ஒரு கல்லாகும். ரோஸ் கலந்த சிவப்பு நிறமுடையதாகவும் அல்லது சுத்த சிவப்பு நிறமுடையதாகவும் விளங்கும் இக்கற்கள் ஒளி ஊடுருவக் கூடியதாகவும், ஒளி ஊடுருவ இயலாத கல்லாகவும் இரு வகையாக கிடைகிறது. வெல்வெட் போன்ற தன்மையும் வைரத்துக்கு அடுத்த கடினத் தன்மையையும் கொண்டது மாணிக்கக் கல்லாகும்.

மாணிக்கம் மிகுந்த உயர்தரமானது. தற்போது கிடைப்பது அரிதாக இருப்பதால் இதற்கு இதுதான் விலை என்று நிர்ணயிக்க முடிவதில்லை. அதனால் தான் மாணிக்கத்தை விலையில்லா மாணிக்கம் என்கிறார்கள். மாணிக்கத்தை கரட் முறையில்தான் மதிப்பீடு செய்கிறார்கள். உண்மையான உயர்ந்த வகை மாணிக்கக் கற்கள் வைரத்தைவிடவும் விலை உயர்ந்ததாகும். மாணிக்கம் பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் கிடைக்கின்றன.

உயர்தர மாணிக்கங்கள் சாதாரண வெளிச்சத்தில் ஒரு சிவப்பு நிறத்தையும், அதிக வெளிச்சத்தில் நல்ல ஜொலிக்கும் சிவப்பையும் காட்டும். இந்தியாவில் தரம் குறைந்த ரூபிகளும் மற்றும் நல்ல அரிய வகையுள்ள ரூபிகளும் கிடைக்கின்றன. தரம் குறைந்த ரூபிகளுக்கு மைசூர் ரூபி என்று பெயர். இதில் ஒளியோ கவர்ச்சியோ இருக்காது. நேராக பூமியிலிருந்து கிடைக்கும் எந்தவொரு ரத்தினமும் ஒழுங்கற்றதாகத்தான் இருக்கும். அவற்றை சரியான முறையில் பட்டை தீட்டிப் பொலிஷ் செய்தால் மட்டுமே கற்களுக்கு அழகும் கவர்ச்சியும் உண்டாகும்.

மாணிக்கம் அலுமினியம் டிரை ஆக்ஸைடு என்ற வேதிப்பொருளால் ஆனது. கொரண்டம் என்கிற வகையைச் சேர்ந்த மாணிக்கக் கற்கள் புறா இரத்த நிறத்தில் கிடைப்பது முதன்மை தரம் ஆகும். கரும்புள்ளிகள் உடைய மாணிக்கத்தை அணிந்தால் நிறைய பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். பலவாறு பழுதடைந்த மாணிக்கம் இறப்பைக்கூட தந்துவிடும். மாணிக்கத்தை கையில் அணிந்திருக்கும் போது அதன் நிறம் மங்கினால் அவருக்கு துன்பங்கள் ஏற்படும். அந்த துன்பம் நீங்கிவிட்டால் மாணிக்கக்கல் மீண்டும் தன்னுடைய பழைய நிறத்தை அடைந்து விடும்.



(தொடரும்)

## நாளை

**பங்குனி-15**

செவ்வாய்க்கிழமை -28.03.2017
திதி: அமாவாசை கா.09.00
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.ப.02.19
சுபநேரம்:10.44-12.14 வரை
ராகுகாலம்:03.14-04.44 வரை

## வரலாற்றில் இன்றைய தினம்

**27.03.2017**

1625-முதலாம்சாள்ஸ்இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து அரசரானதுடன், பிரான்ஸின் அரசராகவும் உரிமை கோரினார்.

1794 -டென்மார்க்கும் சுவீடனும் நடுநிலையாகச் செயற்பட இணக்கம் கண்டன.

1915- முன்னர் கண்டறியப்படாத நோய் தொற்றுக்குள்ளான டைபோயிட் மேரி, குவாறன்ரைனில் தனித்து வைக்கப்பட்டார். தனது எஞ்சிய காலத்தை அவ்வாறே கழித்தார்.

1958 -சோவியத் யூனியன் அமைச்சர்கள் கவுன்சிலின் தலைவரானார் நிகிடா குருஷேவ்.

1964 -பெரிய வெள்ளி நிலநடுக்கம்; அமெரிக்க வரலாற்றில் பெரிய நிலநடுக்கத்தில் (9.2 மக்னியூட் அளவிலானது) அலஸ்கா பகுதியில் 125 பேர் உயிரிழந்ததுடன், நகர் பெருமளவாக அழிவடைந்தது.

1977 -வரலாற்றிலேயே மிக மோசமான விமான விபத்து ரெனெறிப் விமான நிலையத்தில் இரண்டு போயிங் 747 -விமானசேவை விமானங்கள் மோதிக் கொண்டதில் 583 பேர் உயிரிழந்தனர்

1980-நோர்வேக்குச் சொந்தமான எண்ணெய் மேடை அலெக்சாண்டர் எல்கீலன்ட் சரிந்து வீழ்ந்ததில் வடகடலில் அதன் மாலுமிகள் 212 பேரில் 123 பேர் உயிரிழந்தனர்.

1981 -போலந்து சொலிடாறிற்றி இலக்க செயற்பாட்டில் எச்சரிக்கை வேலை நிறுத்தமாக 12 மில்லியன் தொழிலாளர்கள் 4 மணிநேரப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

1988 -சிறைகளிலுள்ள தமிழ் இளைஞர்கள் விடுவிப்பது குறித்து ஆராய்வு.

1988 - பட்டம் விட்ட சிறுமி பட்டமாகப் பறந்தாள். விமானத்தால் 30 மீற்றர் தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்டாள். கலிபோர்னியாவில் சம்பவம்.

1993- சீனமக்கள் குடியரசின் ஜனாதிபதியாக சியாங் ஷெமின் நியமிக்கப்பட்டார்.

1998-ஆண்களில்வீரியத்தைத்தூண்டும்வயகார மாத்திரையைப் பயன்படுத்துவதற்கு உணவு மற்றும் அவுடத நிர்வாகம் அமெரிக்காவில் அனுமதி வழங்கியது.

2002 - பருத்தித்துறை ஊடாக தமிழக கப்பற் சேவையைத் தொடங்க முன்னேற்பாடு. அதிகாரிகள் குழு வருகை.

2007-புலிகளின் வான் தாக்குதல் தொடர்பாக முக்கிய நாடுகள் மௌனம்.

2008- 13ஆவது திருத்தச்சட்ட நடைமுறை ஒரு போதும் தமிழர் ஏற்கார் என சம்பந்தன் தெரிவிப்பு. அது மிக வும் பின்னடைவான சட்டம் எனவும் தெரிவிப்பு.

2008 - ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் நிறுத்துமாறு பன்னாட்டு ஊடக அமைப்புக்கள் மகிந்தவுக்குக் கடிதம்.

2009- போர் இடைவெளி கோருகிறது ஐ.நா.; ஐ.நாவின் கோரிக்கைக்கு அமெரிக்காவும், பிரிட்டனும் ஆதரவு. பொதுமக்கள் வெளியேற உதவும் எனக் கருத்து.

2009- உதயன் மீதான தாக்குதல். ஊடக அமைப்புக்கள் கண்டனம்.

2009 -புதுமாத்தளன் பகுதி மீது ஷெல் தாக்குதல். சிறுவர்கள் உட்பட 25 பேர் உயிரிழப்பு. மருத்துவர் வரதராஜா பி.பி.சிக்குப் பேட்டி

2014-மொறோ இஸ்லாமிய விடுதலை முன்னணியெனும் பெரிய முஸ்லிம் ஆர்ப்பாட்டக் குழுவுடன் பிலிப்பைன்ஸ் அரசு அமைதி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது.


2016-ஈஸ்டரைக்கொண்டாடும் கிறிஸ்தவர்களை இலக்குவைத்து லாகூர் குல்சானில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 70 பேர் உயிரிழந்ததுடன் வேறும் 300 பேர் காயமடைந்தனர்.




பெண்களுக்கான மேலாடை தற்பொழுது விற்பனையில் உள்ளது. பல வர்ணங்களை உள்ளடக்கிய இவ்வகையான மேலாடைகள் அனைத்துப் பெண்களுக்கும் ஏற்ற அளவுகளில் கிடைக்கும். இவற்றின் விலை 800, 900 ரூபா.

# போக்கும் வரவும்!

## மாற்றங்களை உணர்த்தும் சூரியசக்தியாலான வீதிகள்




காலஓட்டத்தில் மாற்றம் ஒன்று தான் மாறாதது என்பது எத்துணை பொருத்தமுடையது என்பது அறிவியலில் நன்றாகப் பொருத்தமுறுகிறது. முன்னதாக நெதர்லாந்து நாட்டில் அமைக்கப் பெற்றதான சோலர் மிதிவண்டிப் போக்குவரத்து வீதிகளை நோக்கும் போது இந்த வீதிகள் மூலம் ஒரு வீட்டுக்கு ஒரு வருடத்தில் தேவைப்படுவதான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடிகிறது. தற்போது பிரான்ஸ் நாட்டிலும் இன்னும் ஒரு படி மேலான தொழில்நுட்பத்தின் அதீதமாக சோலர் தகடுகளைப் பயன்படுத்தி வீதிகளை அமைத்துள்ளனர். இதில் குறித்து நோக்க வேண்டியவிடயம் பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளின் கோடை காலம் என்பது அண்ணளவாக அதிகபட்ச வெப்பநிலையாக 20 பாகை செண்டிகிரேட்டைக் கொண்டதாகவே அமைந்திருக்கும்.

பிரான்ஸ் நாட்டில் இருக்கும் பிரெச்சே என்ற சிற்றூருக்கு 1 கிலோமீற்றர் தூரத்துக்கு சோலர் தகடுகளைப் பயன்படுத்தி 2 ஆயிரத்து 800 சதுர மீற்றர் அளவுடையதான வீதியை அமைத்துள்ளனர். இதில் செல்லும் மகிழுந்துகள் (கார்) பயணத்தின் மூலமாக 5 ஆயிரம் பேர் வசிக்கும் சிற்றூரின் தெரு விளக்குகளுக்கு தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடிவதாக சொல்லப்படுகிறது. சிறிய அளவு அடர்த்தியுள்ளதான போட்டோவோல்டிக் (photovoltaic cells) செல்களை பதித்து இந்த வீதியை உருவாக்கியுள்ளனர். இந்தச் செல்கள் பொலிமர் மற்றும் றெசின்களால் (Polymer and resins) பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இதன் மேற்புறம் சாதாரண வீதிகளில் பயணிப்பதைப் போல இருப்பதற்கு ஏதுவாக வழவழுப்புத் தன்மையை நீக்கிய விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.


சிறிய அளவில் இப்போது தொடக்கப்பட்டிருக்கும் சோலர் வீதியை அண்ணளவாக ஆயிரம் கிலோமீற்றர்களுக்கு விரிவுபடுத்த பிரான்ஸ் அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

**காற்றாலை மரம்**
(Wind Tree)
பாரிஸ் நகரில் "காற்

>> 23

---

### மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி சண்முகம்

**(உரிமையாளர், பிரசன்னியா சலூன், நல்லூர்)**

இணுவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சண்முகம் நேற்று (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி குணமணி தம்பதியரின் அன்புப் புதல்வனும் புஸ்பவதியின் அன்புக் கணவரும் திலகா, துஸ்யந்தன், பிரசன்னியா, கேதீஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதீபனின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.03.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணியளவில் நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணிஇந்துமயானத்திற்குஎடுத்துச்செல்லப்படும். இந்தஅறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**565/2, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

---

### மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி ஆறுமுகம்



**தோற்றம்** 1927.09.05 **மறைவு** 2017.03.26

நாச்சிமார்கோயிலடி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வெண்டவல் பிளேஸ், தெகிவளை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி ஆறுமுகம் நேற்று (2017.03.26) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் (மெத்தவீடு) இன் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான கனகசபை - நாகரெத்தினம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம், கதிர்காமத்தம்பி, இராசமலர் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் (மலேசியா), வைத்திலிங்கம், அமரசிங்கம், கமலபூரணம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற அன்னலட்சுமி (பட்டு) காலஞ் சென்ற சந்தனராசா (ராசு) காலஞ்சென்ற சந்தனகோபால் (பவா) மற்றும் தனலட்சுமி (சின்னம்மா), குபேந்திரன் (பவி), புலேந்திரன் (மாம்பழம் - ஜேர்மனி), ரோஜாமலர் காலஞ்சென்ற ரவிச்சந்திரன் ஆகியோரின் தாயும் காலஞ்சென்ற தையல்பாகர் காலஞ்சென்ற சந்திரலேகா மற்றும் கமலாதேவி காலஞ்சென்ற இராஜதுரை மற்றும் காந்திமலர், அமுதா, சண்முகநாதன் ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற புஸ்பமாலா மற்றும் சத்தியமூர்த்தி காலஞ்சென்ற தயானந்தபோஸ் மற்றும் ஜீவா - வக்சலா, ரமேஸ் - கீதா, மேனகா - சிவநேசன், சுஜாதா - செந்தில்வாசன் காலஞ்சென்ற திசரூபன் - மிலா, விஜயரூபி காலஞ்சென்ற கஜேந்திரகுமார் காலஞ்சென்ற ரூபிகா மற்றும் சுபாஸ் சந்திரபோஸ் - ஜெயந்தி (செல்வி) காலஞ்சென்ற ராஜேந்திரபோஸ் மற்றும் கண்ணா - சர்மிளா, மணிமாலா, தனதாஸ் - கஜவதனா, பிரதீப் - நிவேஜா, பிரதிகா, தீபிகா, திலீபன் - தக்ஷாயினி, கிருஷ்ணன் - பிரவீனா, சுதந்திரன், அஜித்தா, நிஷ்யந்தன், அரவிந் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆரணி, சஜிகாந், லெனோஜன், அஸ்மிகா, சுலக்ஷன், றம்ஜிதா, ஸ்ரீகுமரன், அபிராமி, றிக்மன், கலைச்சுடர், தமிழ்ஓவியன், சஞ்சித், அபிஷேக், சாருஜன், ரொஷான், சிந்தியா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் 27.03.2017 திங்கட்கிழமை மு.ப. 9 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பி.ப. 3 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: பிள்ளைகள்**

**பவி - 077 461 8917, ரோஜா - 076 671 6161**

---

### மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகம்மா இரத்தினசிங்கம் (மல்லிகா ரீச்சர்)




இல. 73, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கனகம்மா இரத்தின சிங்கம் (மல்லிகா ரீச்சர்) நேற்று (26.03.2017) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர். 021 222 8582**

---

## ஆரோக்கிய றோக் மனோகரன்



320, 10 ஆம் தெரு, மணியந்தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆரோக்கிய றோக் மனோகரன் நேற்று (26.03.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.


அன்னார் முருகேசு-மேரி தம்பதியரின் அன்பு மகனும் பிலோமினா (அன்னரெத்தினம்) வின் அன்புக்கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (27.03.2017) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கத்தர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு ஆராதனை நடைபெற்று பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 432 9161**

**தகவல்**
**குடும்பத்தினர்**

---



## தவநாயகம் பிரேந்திரா

**(நீர்ப்பாசன திணைக்கள ஊழியர்)**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் அரியாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தவநாயகம் பிரேந்திரா நேற்று (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் தவநாயகம் (துவம்) கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் மதியழகன் (கண்ணன்) ரஞ்சிதமலர் தம்பதியரின் அன்பு மருமகனும் ரிஷாந்தினியின் அன்புக் கணவரும் மிருசுதனின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 3.00 மணியளவில் காரைமுனங்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(22ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# போக்கும் வரவும்!

றாலை மரத்தை" (Wind Tree) அமைத்துள்ளார் வின்ட் ட்ரீ (Wind Tree) என்ற நிறுவனத் தைச் சார்ந்த ஜெரோம் லாரிவிர். அண்ண ளவாக 26 அடி உயரம் உள்ளதான இந்தக் காற்றாலை மரத்தில் இலைகளுக்கு இடையே சிறிய அளவிலான காற்றாலைத் தகடுகள் இருக்கின்றன. காற்று வீசும் போது இந்தச் சிறிய தகடுகள் சுழன்று மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. காற்றின் வேகம் மணிக்கு 4.5 கிலோ மீற்றர்களாக இருந்தால் கூட இந்த மரத்தால் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரிய அளவிலான காற்றலைகளின் அமைப்புகளையும் அதற்கான செலவினங்களையும் பார்க்கும் போது இந்த புதியதான காற்றலை அமைப்பினை வடிவமைப்பதற்கான செலவுகள் குறைவாகக் காணப்படுகிறன. இந்தக் காற்றலை மரத்தின் மூலமாக 15 தெருவிளக்குகளுக்கு ஒரு வருடத்துக்கு தேவையான மின்சாரத்தையோ அல்லது ஒரு மின்கலத்தில் இயங்கு நிலைபெறும் கார் ஆயிரத்து 360 கிலோ மீற்றர்கள் செல்லத் தேவையான மின்சாரத்தையோ பெற்றுக் கொள்ள முடிவதாகச் சொல்லப்படுகிறது.

ஆக, சுற்றுச்சூழலை அதிகம் பாதிக்கும் விடயங்களைத் தவிர்த்து ஆரம்பச் செலவுகள் அதிகம் இருந்தாலும் யாருக்கும் பாதிப்பில்லாததான நீர்,காற்றுமற்றும்சோலார் போன்ற இயற்கை சார்ந்த மின்சாரத்தை (Alternative Green Energy) நோக்கி நாம் பயணிக்க வேண்டும். அதுவே எமைத் தொடர்வதான எதிர்காலத்தலைமுறைக்கான சிறத்தல். அவர்கள் மாசுறலில் இருந்து விடுபட்ட உயிரிகளாக வாழ்வதற்கான பரிசளித்தல்.


## தவறிவிட்டது

கொக்குவில் மேற்கு, கொக்குவில் மாதா கோயிலடி காந்திஜி வீதியில் இராசலிங்கம் ரதிக்குமார் ஆகிய எனது கட்டார் அடையாளஅட்டை, ATM காட்டுகள் ஆகியவை அடங்கிய போர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு-077 068 1776

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் நூலகப் பொறுப்பாளர் திருமதி ஜீவன் கேதீஸ்வரி அவர்களின் அன்புத்தந்தை

**கனகசபை வாமதேவன்**

அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிகழகம்,**
**யா/வட்டு இந்துக்கல்லூரி.**

## தசாக சபிண்டீகரண அழைப்பு



கடந்த 18.03.2017 சனிக்கிழமை அமரத்துவம் அடைந்த எமது அன்புத்தெய்வம்

**அமரர் நகுலாம்பிகைஅம்மா நடராசாக்குருக்கள்**

அவர்களின் தசாகம் ஏகோதிஷ்டம் இன்று (27.03.2017) திங்கட்கிழமை 28.03.2017 செவ்வாய்க்கிழமை மாசியம் சபிண்டீகரணம் 29.03.2017 புதன்கிழமை கிரகஞ்சும் நவக்கிர ஹோமம் எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குலனை வீதி,
நவிண்டில் கரவெட்டி.

**ந.சுந்தரேஸ்வரசர்மா**

Galaxy Star

வெற்றி வாரம் 147 | திகதி 26.03.2017

05 17 24 36 40

அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,000,000/-

இம்முறை தனயோகம் உங்களுடையதா? | 26.03.2017 | 2113

மகரம்

வெற்றி இலக்கங்கள்

02 37 43 51

செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 14. 700. 729/=

2017.03.28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | உதிர்வு |
|---|---|
| 08 | 12 |
| 06 | 02 |
| 1995 | 2017 |



**அமரர் பிரசன்னா கணேசமூர்த்தி**

சுதுமலை தெற்கு, சாவல்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரசன்னா கணேசமூர்த்தி கடந்த 12.02.2017 அகாலமரணமடைந்தார். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை [28.03.2017] செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்திய கிரியைகள் நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் மறைவுச்செய்திகேட்டு வைத்தியசாலைக்கு வந்த பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

முருகமூர்த்தி கோயிலடி,
சுதுமலை தெற்கு, சாவல்கட்டு.

**குடும்பத்தினர்.**

## யாழ் - காரை சிவதர்மவள்ளல் சிவத்திரு சண்முகம் சிவஞானம் அவர்களின்

(சிவதர்மவள்ளல், கலைமாடக் கோனார், அறப்பணிச் செம்மல், சிவநெறிக் காவலர், காரை பாரி வள்ளல், அறப்பணி வேந்தன், சமூகசேவகமாமணி, சமூக சேவக சிரஞ்சீவி, சிவப்பணி வித்தகர்.)

Congratulations

# மணிவிழா வாழ்த்து

Congratulations

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"



மணிவிழாக் காண்கின்ற கல்விக்கொடை அரசர்
அனைவருக்கும் அறம் செய்த அறக்கொடை செம்மலாளர்
நனிசிறந்த கலை வளர்க்கும் கலைமாடக் கோனார் இவர் கார்
வேணியன் அருளால் கலக்கமின்றி வாழியவே
நீர் பெற்றெடுத்த செல்வங்கள் நின்செயலால் உயர்வுபெறும்
ஊர் போற்றும் வாழ்த்துரைகள் உம் வாழ்வை வளர்த்து நிற்கும்
கார் அன்னகொடையோனே கருணையுள்ளம் கொண்டவரே
நீர்மலி வேணியனின் அருள்கொண்டு நீர் வாழியவே
அள்ளிக் கொடுத்த கைகள் அவனியில் வாழியவே
பள்ளிப் படிப்புக்கு பணி செய் மகான் வாழியவே
வாழிய வாழிய வள்ளல் சிவஞானம்
அகவை அறுபதென்ன அதுபோல் பலகண்டு
ஈழத்துச் சிதம்பரத்து தில்லைக்கூத்தன்
திருவருளால் பல்லாண்டு வாழியவே

**மனமுவந்து வாழ்த்துபவர்கள்:**
**காரைவாழ் அன்புள்ளங்கள்.**

## ஐ.நாவின்...

அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 3 தடவைகள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மகிந்த ஆட்சி தொடர்ந்திருந்தால் பொருளாதாரத் தடை கூட விதிக்கப்பட்டிருக்கும். இன்றுபன்னாட்டுக்களத்தில்நிலைமை மாறியுள்ளது. பன்னாட்டுச் சமூகத்துடன் இணைந்துச்செயற்படக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் கடந்த அரசு முரண்பட்டது. அதே வழியில் பயணிப்பதற்கு நல்லாட்சி அரசு தயாரில்லை. இருப்பினும் அந்த அமைப்பு சொல்வதற்கெல்லாம் தலையாட்டவும் முடியாது. இதுதான் மாற்றம். பன்னாட்டு நீதிபதிகள் அவசியம் எனக் கூறப்பட்டது. அதை நாம் நிராகரித்துவிட்டோம். இலங்கை சில பன்னாட்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது. பிரிட்டனில் மனித உரிமை மீறல் இடம்பெற்றால்கூட அதற்கு எதிராக எம்மால் முறைப்பாடு செய்ய முடியும். அதேபோல்தான் இங்கே நடைபெற்றால் அந்த நாட்டில் முறைப்பாடு செய்ய முடியும் - என்றார். (வ-5)

## யாழ்ப்பாண...

றுறை, சங்கானை, வேலணை, தெல்லிப்பழை, கரவெட்டி, நல்லூர், பருத்தித்துறை பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்களே இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலரினால் பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்பட்ட இடமாற்றப் பட்டியல், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த இடமாற்றம் அடுத்த மாதம் மேற்கொள்ளப்படக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ-5)

## புதிய...

முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

"சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகள் சுதந்திரத்தின் பின்னர் தமது நாட்டிலுள்ள சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசமைப்பைத் தயாரித்தன. நல்லிணக்கப் பணிகளுக்கே அவை முதன்மை இடம்வழங்கின. இவ்விரு நாடுகளுமே இன்று வளர்ச்சி கண்டுள்ளன.

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையில் என்ன நடந்தது? அரசியல் அதிகாரத்தைப் பிடிப்பதற்காக மதத்தையும், இனத்தையும் வைத்து அரசியல் நடத்தப்பட்டது. இதன் விளைவாகத்தான் 3 பத்தாண்டுகளாகப் போர் நடந்தது. ஆளும்கட்சி தீர்வை முன்வைத்தால் எதிர்க்கட்சி அதை எதிர்ப்பதும், இந்த எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் முன்வைக்கும் தீர்வை மற்றைய கட்சி எதிர்ப்பதும்தான் வழமையாக இருந்து வந்தது. தேசிய இனப் பிரச்சினையை கால்பந்தாட்டம்போல் எத்தி விளையாடி வந்துள்ளனர்.

68 வருடங்களாகத் தீர்க்க முடியாதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்காக அரச தலைவர் மைத்திரிபால, தலைமை அமைச்சர் ரணில் ஆகியோர் தலைமையில் கூட்டு அரசு உருவாக்கப்பட்டுள்ளது. இரண்டு பேருமே நாட்டின் நலன்கருதிச் செயற்படக் கூடியவர்கள். கடந்த காலங்களில் அரசமைப்பு உருவாக்கப் பணியின்போது தமிழ்க் கட்சிகள் ஆதரவு வழங்கவில்லை. இன்று நிலைமை மாறியுள்ளது. முதன்மை எதிர்க் கட்சியும், ஏனைய முஸ்லிம் கட்சிகளும் இணைந்துச் செயற்படுகின்றன. இது ஆரோக்கியமான சூழ்நிலையாகும்.

சிங்கள, பௌத்த மக்களைப் போன்று ஏனைய இன மக்களையும் பாதுகாக்கும் வகையிலேயே ஐக்கிய தேசியக்கட்சி செயற்படும். இதைச் சொல்வதற்கு வெட்கப்பட வேண்டியதில்லை. பெருமையுடனேயே இதைக் கூறுகின்றோம். பெரும்பான்மையினத்தவர்கள், சிறு பான்மையினத்தவர்களை அரவணைத்துச் செல்லும் நாட்டுக்கே பன்னாட்டுச் சமூக மட்டத்தில் மதிப்பு இருக்கின்றது" என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தார். (வ-5)

## உயர் பாதுகாப்பு...

பேசியோ எடுத்துச் செல்ல முடியாது என்று இராணுவத்தினர் கட்டுப்பாடு விதித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களின் வாகனத்தில் பயணித்தவர்களும் மட்டுமே அவற்றை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சோ.சேனாதிராசா, இ.சாள்ஸ் நிர்மலநாதன், சி.சிறிதரன் ஆகியோர் மக்களுடன் சென்றிருந்தனர்.

"இடம்பெயர்ந்து 27 ஆண்டுகளாகின்றபோதும் இன்று எமது கிராமத்தில் இந்தச் சேதமடைந்த ஆலயத்தைத் தவிர வேறு எந்தக் கட்டடமும் கிடையாது. அதேபோல் இந்தப் பகுதியில் ஓர் இராணுவக் காவலரண்கூட இல்லை. அந்த நிலையில் இந்தப் பகுதியை இராணுவத்தினர் மேலதிகமாகவே கையகப்படுத்தி வைத்துள்ளனர் என்பது புலனாகின்றது. எனவே இவற்றை விடுவித்து சொந்த மக்கள் குடியமர ஆவன செய்ய வேண்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"வலி. வடக்குக்கு காணிகள் விடுவிப்புத் தொடர்பில் கூட்டமைப்புத் தொடர்ந்தும் முயற்சித்தே வருகின்றது. இனியும் அது தொடர்பில் உரியவர்களுடன் தொடர்பு கொண்டு இந்தக் காரணிகள் விடுவிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

ஆலயத்தில் வழிபாடு இடம்பெற்று மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் வெளியேறும் வரையில் ஆலய வளாகத்தைச் சூழ இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-101)

## சிறையிலிருந்து...

அதனைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளும் வகையில் அலைபேசியை மீட்டதாக மன்றில் தெரிவித்தனர். ஆனால் அவ்வாறு மீட்டதாகக் கூறப்பட்ட அலைபேசி மற்றும் சார்ஜரை சிறைச்சாலைத் தரப்பினர் நீதிமன்றில் பாரப்படுத்தவில்லை.

"சிறைச்சாலைக்குள் இருந்து முக்கொலை வழக்கின் முதன்மைச் சாட்சிக்கு பல மாதங்களாகவே சந்தேகநபர் அச்சுறுத்தல் விடுத்து வந்துள்ளார். சிறைச்சாலைக்குள் அலைபேசி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. முறைப்பாடு செய்யப்பட்டதன் அடிப்படையில் ஒருவரிடமிருந்து மாத்திரம் அலைபேசி மீட்கப்பட்டிருக்கிறது" என்று சிறைச்சாலைத் தரப்பினர் மன்றில் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த அச்சுறுத்தல் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அலைபேசி நிறுவனத்திடமும் அறிக்கையைப் பொலிஸார் பெற்றனர். அந்த அறிக்கையை பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளனர். அச்சுறுத்தல் தொடர்பில் சுமார் ஒன்றரை மாதங்களுக்கு முன்னரே சாட்சி அச்சுவேலி பொலிஸில் முறையிட்டபோதும், பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காதிருந்தனர். இதுதொடர்பில் பொலிஸாரை நீதிமன்று கண்டித்திருந்தது. அது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு மன்று கட்டளையிட்டிருந்தது.

சிறைச்சாலைக்குள் சட்டவிரோதமாக அலைபேசி கொண்டு செல்லப்பட்டு அச்சுறுத்தல் விடுக்கும் அளவுக்கு நிலைமை உள்ளதனைச் சுட்டிக்காட்டி, அச்சுறுத்தல் தொடர்பில் அறிக்கையை சிறைச்சாலை ஆணையாளரிடமிருந்து நீதிமன்று கோரியிருந்தது.

இந்த முக்கொலை வழக்கு விசாரணை யாழ்ப்பாணமேல்நீதிமன்றில் இன்றுவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. (வ-4)

## இந்திய...

சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது.

இலங்கையிலிருந்து அவர் 22 வயதில் அகதியாகத் தமிழகம் சென்றுள்ளார். பல வருடங்களாக அங்கு வசித்து வரும் அவர் தமிழக உறவுகளுடன் இணைந்து கடற்றொழில் ஈடுபடுகிறார்.

"மன்னாரில்வாழ்ந்த காலப்பகுதியில் எனது உறவுகளில் 4 பேரை இழந்தேன். என்ன செய்வது என்று தெரியாது தவித்தவேளையிலேயே, தாய்த் தமிழகம் நோக்கி படகில் தப்பிச் சென்றேன். அங்கு சென்று ஆரம்பத்தில் பெரும் சிரமங்களைச் சந்தித்தேன். பின்னர் சிறிது சிறிதாக இயல்புக்குத் திரும்பி தொழில் தேட ஆரம்பித்தேன்.

எனக்கு தமிழக உறவுகள் கை கொடுத்தனர். நான் அகதியாகச் சென்று வாழ்ந்த ஆரம்பக் காலமே இளமைக்காலமாக இருந்தது. அதனால் அங்கு ஆரம்பத்தில் இருந்த சட்ட ஏற்பாடுகள் காரணமாக என்னால் தனிக் குடித்தனமாக வாழ முடியவில்லை. இன்று நான் திருமணமும் செய்யாது தனித்தே வாழ்கின்றேன். ஈழத்தில்பட்ட அவலத்தையும்வேதனையையும் இன்றும் மறக்க முடியவில்லை. இன்றும் ஈழத்தில் கால் பதித்தபோது அந்த நினைவுகள் மீண்டன. போரின்போது இறந்த எனது உடன் பிறப்புக்கள் 4 பேரையும் எண்ணிப் பார்க்கின்றேன். இருப்பினும் விரைவில் தமிழகம் திரும்பவே விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண்ணில் இருந்தால் எனக்கு பழைய நினைவுகளே எழுகின்றன. இதில் இருந்து மீட்டு ஒரு நிம்மதியான வாழ்வைத் தந்தது எனக்கு இந்தியாதான். அதனால் நான் தற்போதும் இந்தியா போகவே விரும்புகின்றேன் -என்றார். (வ-4, 101)

## வடக்கு...

சார்பற்ற நிறுவனம், கொழும்பில் முதலீட்டாளர் மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. வெளிநாடுகளிலுள்ள முதலீட்டாளர்கள், பெரும்பாலும் தமிழ் முதலீட்டாளர் கள் இந்த மாநாட்டில் பங்குபற்றவுள்ளனர். சுமார் 60 பேர் வரையில் கலந்துகொள்ள உள்ளனர்.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மாகாணங்களில் முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் தொடர்பில் இந்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளது. இந்தப் பிரதேசங்களில் தொழில் வாய்ப்புக்களை வழங்கக் கூடிய தொழிற்சாலைகளை அமைப்பது உள்ளிட்ட மிகப் பெரிய அளவிலான முதலீடுகள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட மாகாணங்களின் திட்டமிடல் கிளைகள் ஊடாக, முதலீட்டுக்கான வாய்ப்பு தொடர்பான அறிக்கைகள் ஏற்கனவே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் மாகாணங்களின் முதலமைச்சர்களுடனும் சந்திப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே போன்று இந்த மாகாணங்களின் கீழ் உள்ள மாவட்டச் செயலர்களுடனும் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. (வ-5)

## வாக்குறுதிகளை...

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"பன்னாட்டுக் கட்டளைகளுக்கு அடிபணிய ஒருபோதும் தயார் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் நகர்வுகள் மிகவும் மோசமான வகையில் அமைந்துள்ளன. வெகு விரைவில் கூட்டு அரசைக் கலைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார். (வ-5)

## யாழ்.பல்கலை...

வருகின்றன. முதலாம் வருட மாணவர்களின் வரவேற்புபசார நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. மறுநாள் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளின் காரணத்தால் மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான கற்றற்செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அந்த அசாதாரண நிலைமைகள் தொடர்பான ஆரம்ப விசாரணைகள் நிறைவடைந்துள்ளன.

கடந்த 22 ஆம் திகதி கலைப்பீடச் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் யாவும் நாளைமறுதினம் புதன்கிழமை மீள ஆரம்பிக்கப்படவுள்ளன" என்று கலைப்பீடாதிபதி அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)

## விபத்தில்...

என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தார். குடும்பத் தலைவர் தனது மகனுடன் மாங்குளம்சென்றுதிரும்பிக் கொண்டிருந்தார். மகன் மோட்டார் சைக்கிளைச் செலுத்த தந்தையார் பின் இருக்கையில் இருந்தார்.

திருமுறிகண்டியில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர் வீதியோரம் பேருந்துக்காகக் காத்திருந்தார். பேருந்து வந்ததும் பேருந்தில் ஏறுவதற்காக அவர் சாலையைத் திடீரெனக் கடந்தபோது, குறித்த மோட்டார் சைக்கிள் ஆசிரியருடன் மோதுண்டது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையிலிருந்த குடும்பத்தலைவர் அணிந்திருந்த தலைக்கவசம் கழன்றுள்ளது. சாலையில் விழுந்த போது அவரது தலை அடிபட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அந்த இடத்திலேயே குறித்த குடும்பத் தலைவர் மயங்கிவிட்டார். தலைக்கவசத்தை அவர் அணிந்திருந்தபோதும் அதன் நாடாவைச் சீராக அணிந்திருக்கவில்லை என்று விசாரணையில் கூறப்பட்டது.

இந்த விபத்தில் 3 பேரும் காயமடைந்தனர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மற்ற இருவரும் சுகமடைந்தபோதும் குடும்பத் தலைவர் இறுதிவரை சுயநினைவையிழந்த நிலையில் இருந்தார். சிகிச்சை பயனளிக்காமல் அவர் நேற்று உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாணைகளை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4)

## சங்குப்பிட்டி...

காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். அவர்கள் சாலையில் காயங்களுடன் காணப்பட்டனர். சாலையால் பயணித்தவர்களால் அவர்கள் மீட்கப்பட்டனர். இருவரும் நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். பிற்பகல் 2.30 அளவில் குடும்பத் தலைவர் உயிரிழந்தார். சடலம் வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (வ-4, 9)

## இலங்கை...

இந்தியக் கடற்படையின் ஐ.என்.எஸ். தர்ஸக் என்ற நீர்ப்பரப்பு ஆய்வுக் கப்பல் இந்த ஆய்வில் ஈடுபடுத்தப்படவுள்ளது. இலங்கைக் கடற்படையினரும் இணைந்து இந்த ஆய்வுப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

இந்த ஆய்வுப் பயணத்தின் போது, இந்திய கடற்படைக் கப்பல் கொழும்பு, காலி துறைமுகங்களுக்கும் செல்லவுள்ளதுடன், இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து கூட்டுப் பயிற்சியிலும் ஈடுபடவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## கைநழுவவிட்ட...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் கைநழுவ விடப்பட்டது. அந்த நிதி முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா தலைமையிலான செயலகத்துக்கு வழங்கப்பட்டது. அவ்வாறு சென்ற நிதியில் வடக்கில் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்தத்திட்டத்தில்எமது ஆலோசணைகளையும் பெற்று எம்மையும் பங்குதாரர்களாக இணையுங்கள் எனக் கேட்கும் நிலமையில் எமது முதலமைச்சர் உள்ளார். இது ஓர் வேதனைக்குரிய விடயம்.

உண்மையில் வடக்கு முதலமைச்சர் சாதுரியமாகச் செயற்பட்டிருப்பின், அந்த நிதி முழுமையாக எமது மாகாண சபையிடம் வந்து சேர்ந்திருக்கும். அவ்வாறு வந்து சேர்ந்திருப்பின் அந்த நிதிக்கான சகலதிட்டமிடல்களையும் தீர்மானிக்கும் சக்தியாக முதலமைச்சரே விளங்கியிருப்பார். அவ்வாறு எமக்கு நிதி கிடையாமல் கொழும்பு அரசின் ஊடாக சந்திரிகாவிடம் சென்றமைக்கும் எமது முதலமைச்சரே முழுப் பொறுப்பாளியாவார்.

வெளிநாடுகள் ஊடாகக் கிடைக்கவிருந்த அந்த நிதியின் இணைப்புச் செயலாளராக தனது உறவு முறையில் உள்ள ஒருவரை நியமிக்குமாறு வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கேட்டிருந்தார். அதற்கு அனுமதி கிடைக்கவில்லை என்பதால் அந்த நிதியையே வேண்டாம் என்று அவர் மறுத்துவிட்டார். பின்பு பிறரின் முயற்சியால் வேறு வடிவத்தில் எமது பகுதிக்குள் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இப்போது எம்மையும் பங்குதாரராக இணையுங்கள் எனக்கோரும் துர்ப்பாக்கிய நிலமையே காணப்படுகின்றது.

இதேபோன்றுதான் ஒரு நிறுவனம் வடக்கில் தனது சொந்தப் பணத்தில் 150 வீடுகளை அமைத்தது. அதன் கையளிப்பு நிகழ்வுக்கு தனக்கு விரும்பிய ஒருவரை சொந்தப்பணத்தில் கொண்டுவரவிருந்த நிலையில் அதற்கும் ஒரு காரணம் கூறி கலைஞனின் வருகையைத் தடுத்ததாகப் பெருமை கொள்கின்றோம்.

இந்த 150 வீடுகளை அமைத்த தனியார் நிறுவன உரிமையாளர் எமது பகுதியைச் சேர்ந்த ஒருபெரிய முதலீட்டாளர். அவர் மனம் விரும்பி இங்கு முதலீடு செய்தால், எமது பகுதியில் பல நூறு பேருக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும். ஆனால் நாம் அவரின் மனதைப் புண்படுத்தியதுதான் நிகழ்வாக உள்ளது. அவ்வாறானால் எப்படி நாம் முதலீட்டாளர்களைக் கவர்வது.

எமக்கு வரும் நிதியையும் பயன்படுத்தத் தெரியாது. அடுத்தவர் செய்யும் விடயத்தையும் செயற்படுத்தவிடாது அனைத்துக்கும் தடையாகவும் முட்டுக்கட்டையாகவும் மட்டும் இருப்பது மாகாண வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதனையே சுட்டிக்காட்டுகின்றேன் - என்றார்.

(வ-101)

**ஒவ்வொரு வரிசையிலும் தரப்பட்டுள்ள ஐந்து சொற்களுள் இரு சோடிச் சொற்கள் ஒத்த கருத்துடையவை எஞ்சியுள்ள சொல்லின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1. 1) எதிர்வு கூறல் 2) செலவிடுதல் 3)விரிவாக்கம் 4)வருவதுரைத்தல் 5) பெரிதாக்கல் (............)
2. 1)வளர்ச்சி 2) வெளிப்பாடு 3)இணக்கம் 4)பெருக்கம் 5) தோற்றம் (............)
3. 1) துணிவற்ற 2) வறண்ட 3)கோரமான 4)உலர்ந்த 5) கோழைத்தனமான (............)
4. 1)நிதானமான 2)துன்பம்நிறைந்த 3)முன்யோசனையுடைய 4)இருண்ட 5) இடரான (............)
5. 1) உட்படுத்து 2) விலக்கு 3)எடுத்துரை 4)வெளயிடு 5) தவிர் (............)
6. 1)அகற்று 2) இணங்காதிரு 3)வெளியேற்று 4)நிறுத்து 5) மறுப்புத் தெரிவி (............)
7. 1)வெளியேறல் 2) சிதறுதல் 3)செழிப்பு 4)ஒழுகுதல் 5) பரவுதல் (............)

**கீழ் வருவனவற்றுள் நான்கு சொற்கள் ஒரே கருத்துடையவை. எஞ்சியுள்ள சொல்லின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக**

8. 1) நட்பு 2) கேண்மை 3)உதவி 4) தோழமை 5) சிநேகிதம் (............)
9. 1) உரம் 2) குருதி 3)உதிரம் 4) சோரி 5) இரத்தம் (............)
10 1) ஆழி 2)வாவி 3)சாகரம் 4) கடல் 5) சமுத்திரம் (............)

விடைகள் செவ்வாய்க்கிழமை வெளிவரும்

# மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்

செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றை மேய்த்துக் கொண்டிருந்த சிறுவன். ஒரு மர நிழலில் இருந்து புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தான். அந்த பரந்த புல் வெளியைச் சுற்றி பாதுகாப்பான முள்வேலி போடப்பட்டிருந்தது. அந்த முள் வேலிக்கு அண்மையாக மூன்று ஆட்டுக்குட்டிகள் புல்மேய்வதும், துள்ளிக் குதித்து விளையாடுவதுமாக மகிழ்ச்சியாக இருந்தன. முள்வேலியை எக்காரணம் கொண்டும் தாண்டிச் செல்லக் கூடாதென முன்னதாகவே அவற்றின் பெற்றோர் எச்சரிக்கை செய்திருந்தனர்.

வேலியின் அப்பால் ஓநாய் ஒன்று பல நாள்களாக இந்த ஆட்டுக்குட்டிகளை அடித்து உண்ண வேளை பார்த்திருந்தது. அன்று வேலிக்கு மிக அருகில் வந்த ஓநாய் எதையோ தேடுவது போல அங்குமிங்கும் பார்த்து பசாங்கு செய்தது. இதனைக் கவனித்த ஒரு ஆட்டுக் குட்டி "உனக்கு என்ன வேண்டும் எதனைத் தேடுகிறாய்? என்றது. ஓநாயோ "நண்பா இந்தப் பக்கம் உண்ணுவதற்கு பசுமையான புல் கிடைக்குமா? மிகவும் பசியாக உள்ளது. பசும் புல்லையும் சாப்பிட்டு 'ஜில்' என்ற தண்ணீரையும் குடித்து விட்டால் எவ்வளவு ஆறுதலாக இருக்கும்" என்றது. "ஓ.... அப்படியா நீ புல்லும் சாப்பிடுவாயா? என் அம்மா நீ மாமிசம் மட்டும் சாப்பிடுபவன் என்றல்லவா எமக்குச் சொல்லியுள்ளார்" என்றது குட்டி. "சே.... அதெல்லாம் சும்மா சொல்லியிருக்கிறார். நான் சுத்த சைவம், மாமிச வாடையே எனக்கு ஒத்து வராது. நீ எனக்கு புல் நிலத்தைக் காட்டு வாயானால் நான் புல் சாப்பிடுவதை மெய்ப்பிப்பேன். அத்தோடு நீயும் வெளியே வந்து சுதந்திரமாக என்னுடன் தினமும் புல் சாப்பிடலாம்" என்றது நதி நயவஞ்சமாக. "சரி அப்படியென்றால் கொஞ்சம் பொறு. அதோ தெரியும் அந்த மலைப்பகுதியில் உள்ள புல்நிலத்தைக் காட்டுகிறேன். எதற்கும் இந்த முன் வேலியை முதலில் கடக்கிறேன்" என்று கூறி வேலியின் ஒரு இடுக்கு வழியே அப்பால் போக முயன்றது. இதனைக் கவனித்த மற்ற ஆட்டுக்குட்டிகள் "தம்பி.. தம்பி போகாதே அங்கே ஆபத்து உள்ளது" என்று கத்தின. ஆனால் அதற்குள் குட்டி வெளியேறியது. அந்தோ பரிதாபம். வேகமாக ஓடி வந்த ஓநாய் ஆட்டுக்குட்டியை அதன் தொண்டையில் பலமாகக் கௌவிக் கொண்டு காட்டுப் பக்கம் ஓடிக் கொண்டிருந்தது. ஆட்டுக்குட்டியின் அவலக் குரல் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கிப் போனது. அந்த இரு சகோதர ஆட்டுக் குட்டிகளும் ஓநாய் ஓடிய பாதையையே கவலையுடன் பார்த்துக் கொண்டு நின்றன.

**'துஷ்டரைக் கண்டால் தூர விலகு' தாய் சொல்லைத் தட்டாதே!**



# கடல்சாமந்தி

கடலில் வாழும் விந்தையான உயிரினங்களில் ஒன்று கடல் சாமந்தியாகும். இது பார்ப்பதற்கு ஒரு பூவைப் போல இருக்கும். வெள்ளை, பச்சை, நீலம், சிவப்பு ஆகிய பல வர்ணங்களில் கடற் சாமந்திகள் காணப்படுகின்றன. இடைவெப்ப வலயக் கடல்களின் கரையோரங்களில் இவை உயிர் வா்ழுகின்றன. இதன் உடல் மூன்று பகுதிகளாகப் பிரிந்திருக்கும். அடிப்பகுதி ஏதாவது ஒன்றில் ஒட்டிக் கொண்டிருக்கும். இடைப் பகுதி சிறிய உருளைபோல இருக்கும். இதன் மேலுள்ள பகுதி வாயாகும்.

இதன் உட்புறத்தில் தடித்த மயிர்த் தொகுதிகள் சுற்றியுள்ளன. இவற்றுக்கு பற்றுக் கொம்புகள் என்று பெயர். இப்பற்றுக் கொம்புகளில் நஞ்சு உள்ளது. கடல் சாமந்தியின் வாயில் ஒரு மீன் சிக்கி கொண்டால் இப்பற்றுக் கொம்புகள் அதனைக் கொட்ட நஞ்சு ஏறி மீன் இறந்துவிடும். உடனே பற்றுக் கொம்புகள் அதனை வாய்க்குள் தள்ளி தாமும் சுருங்கி விடுகின்றன.

பின்னர் மீன் உண்ணப்பட, அதன் எலும்புகள் வாய் வழியாக வெளியேறுகின்றன. கடல் சாமந்தியின் கருவில் இருந்து புழுப் போன்ற லார்வாக்கள் வெளிவந்து அவை ஒவ்வொன்றும் தனித் கடல் சாமந்தியாக வளர்கின்றன.




# எனது நாடு



1. எனது நாடு இலங்கை.
2. இது நாற்புறமும் கடலாற் சூழப் பெற்ற அழகிய தீவு.
3. இதன் தலைநகரம் ஸ்ரீ ஜெயவர்தனபுரம்
4. இது நீர்வளம், நிலவளம், மலை வளம், கடல் வளம். அனைத்தும் ஒருங்கமைந்த நாடாகும்.
5. இங்கு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என பல இனத்தவர் வாழ்கின்றார்கள்.
6. பௌத்தம், சைவம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களை இலங்கை மக்கள் பின்பற்றுகின்றனர்.
7. இலங்கையில் மத்தியில் உயர்ந்த மலைத்தொடர்கள் உள்ளன.
8. பீதுறுதாலகால மலையே அதிக உயர்ந்த மலையாகும் அடுத்து சிவனொளி பாத மலையைக் குறிப்பிடலாம்
9. மலைத் தொடர்களில் இருந்து பல ஆறுகள் உற்பத்தியாகி ஓடி நாட்டை வளப்படுத்துகின்றன.
10. பெரிய ஆறு மகாவலி கங்கையாகும். பெரிய ஆற்றுப் படுக்கைகளில் பெறுமதியான கனிமங்கள் அகழ்ந்தெடுக்கப்படுகின்றன.
11. இலங்கை விவசாய நாடு. இங்குள்ள மக்களின் பிரதான உணவு நெல் அரிசிச் சோறு.
12. மலைநாட்டில் உள்ள தேயிலை றப்பர் தோட்டங்களில் இருந்து உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
13. இலங்கையில் கடற்கரையோரங்களில் தென்னைகள் வளர்க்கப்பட்டு தெங்குப் பொருள்களும் ஏற்றுமதியாகின்றன.
14. இங்கு கைத்தொழிற்சாலைகளும் உள்ளன. சீனி, சீமெந்து, புடைவை கடதாசி, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் போன்றவை குறிப்பிடத்தக்கன.
15. திருகோணமலை இலங்கையின் இயற்கைத் துறைமுகம். இன்னும் கொழும்பு, காலி, காங்கேசன்துறை என்பன பெரிய துறைமுகங்களாகும்.
16. பெரிய விமான நிலையம் கட்டுநாயக்கா
17. யாழ்ப்பாணம், நல்லூர், அநுராதபுரம், பொலநறுவை, கண்டி கோட்டை என்பன இலங்கையின் புராதன இராசதானிகளாக இருந்தன.
18. திருகோணமலையில் திருக்கோணேச்சரம், மன்னாரில் திருக்கேதீச்சரம் சிலாபத்தில் முனீவரம், கீரிமலையில் நகுலேச்சரம், நல்லூரில் கந்தசுவாமி, கதிர்காமத்தில் கந்தன் திருத்தலங்கள் , மடுமாதா தேவாலயம் என்பன புனித யாத்திரைத் தலங்களாக உள்ளன.
19. கண்டியில் தலதா மாளிகையில் வைக்கப்பட்டிருக்கும் புத்தரின் புனித தந்தத்துக்கு எடுக்கப்படும் பெரஹரா நிகழ்வை பௌத்த மக்கள் கண்டுகளிப்பர்.
20. எமது நாட்டின் அழகையும் சிறப்பையும் கண்டுகளிக்க வருடம்தோறும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இங்கு வருகை தருவர்.





மேற்காகாட்டப்பட்டுள்ள உருக்களை அவதானிப்போம். அவற்றில் ஒன்று ஏதோ ஒரு வகையில் அத்தொடரில் அமையப் பொருத்தமற்றது. அதனை அடையாளம்கண்டு உருவின் கீழ் கோடிடுவோம்.



# மதுகம சென். மேரிஸ் வீழ்த்தியது மத்தியை

யாழ்ப்பாணம், மார்ச் 27

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்தும் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை வீழ்த்தியது மதுகம சென். மேரிஸ் கல்லூரி அணி.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 49.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சஜீவன் 36 ஓட்டங்களையும், நிதுசன் 22 ஓட்டங்களையும், ஜொறோசன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சஜீத், தசுன், உதயங்க ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.


182 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய சென். மேரிஸ் கல்லூரி அணி 48.1 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக உதயங்க 69 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் துசாந்தன் அதிகபட்சமாக 3 இலக்குகளை வீழ்த்தினார். (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

அரியாலையின் 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை திருமகள் சனசமூக நிலைய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

'பி' பிரிவில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மேற்படி ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி



இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக பி அணியுடன் மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மேற்படி ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி 8.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியுடன் மோதவுள்ளது. (ம-23)

# முன்னிலைபெறுவதற்கு நியூசிக்கு வாய்ப்புக்கள்



தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் முன்னிலை பெறுவதற்கு நியூசிலாந்துக்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் வெலிங்டனில் தற்போது நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 4 இலக்குகளை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதல்நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. பிளாசிஸ் 33 ஓட்டங்களுடனும் பவுமா 13 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர்.

29 ஓட்டங்களுடன் பவுமாவை வீழ்த்தினார் ஹென்றி. அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தார் பிளாசிஸ். மத்திய வரிசையின் பெரும்பலமான குயின்டன் டி ஹொக், வழக்கம் போல அடித்தாடி கிடுகிடு வேகத்தில் ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கினார். ஒரு முனையில் குயின்டன் நிலைத்தாலும் பிளன்டர், மகாராஜ் இருவரும் சொற்ப ஓட்டங்களுடன் பவிலியனுக்குத் திரும்பினர். 66 பந்துகளில் குயின்டனின் அரைச்சதம் பதிவானது. அவர் 90 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 314 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது தென்னாபிரிக்கா.

பந்துவீச்சில் ஹென்றி 4 இலக்குகளையும், வாக்னெர் 3 இலக்குகளையும், கிராண்ட்ஹோம் 2 இலக்குகளையும், சான்நெர் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு அந்த அணியின் ஆரம்ப வீரர்களே சிறந்த அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். நியூசிலாந்து இலக்குச் சரிவில்லாமல் 67 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நாள் முடிவுக்கு வந்தது. லாதம் 42 ஓட்டங்களுடனும், ராவல் 25 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

ஆட்டத்தின் இரு நாள்கள் முழுமையாக நிறை வடைந்துவிட்டன, ஆனால் ஓர் இன்னிங்ஸ்கூட இன்னும் முடிவு காணவில்லை. மழையும் அவ்வப்போது ஆதிக்கம் செலுத்துகிறது. இதனால் இந்த ஆட்டம் சமநிலையில் முடிவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று கருதப் படுகிறது. (ம)

# சிபுல்கோவா முன்னேற்றம்

மியாமி ரென்னிஸ் தொடரில், நேற்றுமுன்தினம் இடம் பெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் வெற்றிபெற்றார் சிபுல்கோவா.

குரொசிய வீராங்கனை சிபுல்கோவாவை எதிர்த்து பராகுவே வீராங்கனை செப்டிராக் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை பெற்றார் சிபுல்கோவா. அவர் அடுத்த செற்றிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி அந்த செற்றையும் 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். இதனால் நேர்செற் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார். (ம)



# இலங்கை அணி வீரரிடம் ஐ.சி.சி. தீவிர விசாரணை

இலங்கை கிரிக்கெட் வீரர் ஒருவரை பன்னாட்டு கிரிக்கெட் சபை தீவிர விசாரணைக்கு உட்படுத்தி வருகிறது என்று கொழும்பு ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டன.

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை தோல்வியடைந்த பின்னர், அமெரிக்காவில் இருந்துவந்த அலைபேசி அழைப்பை அடுத்தே இந்த விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவு இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)



# பிருந்திகா புதிய சாதனை

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் புதிய சாதனையொன்று நிலைநாட்டப்பட்டுள்ளது.

ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் கடந்த வாரம் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 1998ஆம் ஆண்டு நடைபெற்ற தடகளத் தொடரில் சென். தோமஸ் விளையாட்டுக் கழக வீராங்கனை அ. அனுசியா 2 நிமிடங்கள் 49 செக்கன்கள் 47 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்து படைத்த சாதனையை நடப்பு வருடத்துக்கான போட்டியில் வல்வை விளையாட்டுக் கழக வீராங்கனை பி. பிருந்திகா 2 நிமிடங்கள் 2 செக்கன்களில் ஓடிமுடித்து முறியடித்தார். (ம-23)

# இலங்கை பங்களாதேஷ் இரண்டாவது ஆட்டம் நாளை

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் தம்புள்ள மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

நேற்றுமுன்தினம் முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி 90 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. இதனால் அடுத்த இரு ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே இலங்கையால் கிண்ணத்தைக் கைப்பற்ற முடியும். முடிவடைந்த டெஸ்ட் தொடரையும் பங்களாதேஷ் அணி 1:1 என்று சமநிலையில் முடித்தது. இதனால் குறைந்தபட்சம் ஒருநாள் தொடரையாவது கைப்பற்ற வேண்டும் என்ற கௌரவச் சிக்கல் இலங்கைக்கு உள்ளது. கடந்த ஆட்டத்தில் தோல்வியடைந்ததன் காரணத்தால் இலங்கை அணியில் நாளை சில மாற்றங்கள் செய்யப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)




# ஆப்கான் சம்பியன்

அயர்லாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் சம்பியனானது ஆப்கானிஸ்தான் அணி.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது அயர்லாந்து.

அதிகபட்சமாக ஸ்ரேர்லிங் 51 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்துவீச்சில் ரசிட்கான் 4 இலக்குகளையும், பரீட் அகமட் 3 இலக்குகளையும், டவல்ட் சடான் 2 இலக்குகளையும், நயிப் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் 8 பந்துகள் மீதமிருக்க 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. ரக்மட் சாஜ் ஆட்டமிழக்காமல் 108 ஓட்டங்களையும், சென்வாரி ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆட்ட நாயகனாக ரக்மட் சாஜ், தொடராட்ட நாயகனாக ஸ்ரேர்லிங் இருவரும் தெரிவாகினர். (ம)



# போர்த்துக்கலின் நாயகனாக ரொனால்டோ தெரிவானார்

கடந்த வருடத்தின் சிறந்த போர்த்துக்கல் கால்பந்து வீரராக அந்த அணியின் தலைவர் ரொனால்டோ தெரிவுசெய்யப்பட்டார்.

கடந்த வருடம் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடர் நடைபெற்றது. ரொனால்டோ தலைமையில் போர்த்துக்கல் அணி சம்பியனானது. அதற்கு முன்னர் போர்த்துக்கல் அணி மிகப் பெரிய தொடர் ஒன்றையும் கைப்பற்றியதில்லை. யூரோ கிண்ணத் தொடரில் அரையிறுதிக்குத் தகுதிபெற்றதே ஆகச் சிறந்த அடைவாக இருந்தது. இதனால் கடந்த வருடம் யூரோ கிண்ணத்தைக் கைப்பற்றியமையே போர்த்துக்கல் கால்பந்தாட்ட அணியின் ஆகச் சிறந்த அடைவு. அந்த வரலாற்று வெற்றியைச் சாதித்த போர்த்துக்கல் கால்பந்தாட்ட அணியின் தலைவர் ரொனால்டோ அந்த நாட்டின் நாயகனாகக் கொண்டாடப்பட்டார். தற்போது அவர் கடந்த வருடத்தின் ஆகச் சிறந்த போர்த்துக்கல் வீரராகத் தெரிவானார்.

தேசியத்தில் ரொனால்டோ தலைமைதாங்கி வழிநடத்திய போர்த்துக்கல் அணி எவ்வாறு சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியதோ அதேபோல் கழகங்களின் மட்டில் ரொனால்டோ விளையாடி வரும் ரியல்மட்ரிட் அணியும் மிகச் சிறந்த பெறுபேறுகளை கடந்த வருடம் வெளிப்படுத்தியது. சம்பியன்ஸ் லீக் உள்ளிட்ட முக்கிய கிண்ணங்களைக் கைப்பற்றியது. இதனால் ரொனால்டோவுக்கு தங்கப்பந்து விருதும் பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனத்தில் சிறந்த வீரர் விருதும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# டெல்லி அணியா இந்திய அணியா

## தவிப்பில் ராவிட்

ஐ.பி.எல். டெல்லி அணி அல்லது இந்திய அணி இவற்றில் எதைத் தெரிவுசெய்வது என்ற குழப்பத்தில் உள்ளார் இந்திய அணியின் முன்னாள் வீரர் ராவிட்.

இந்திய ஏ அணி மற்றும் 19 வயதுக்குட்பட்ட இந்திய அணி ஆகியவற்றின் பயிற்சியாளராக ராவிட் செயற்பட்டு வருகிறார். அவர் ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணியின் ஆலோசகராகவும் செயற்பட்டு வருகிறார். ஆனால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட நிர்வாக மாற்றங்களின் படி இவற்றில் ஏதேனும் ஒன்றில் மட்டுமே ராவிட் இருக்கமுடியும். இதனால் டெல்லி அணி இந்திய அணி இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெரிவுசெய்ய வேண்டிய நெருக்கடிக்கு ராவிட் தள்ளப்பட்டுள்ளார்.


ராவிட்டின் பயிற்சியின் கீழ் இந்திய ஏ மற்றும் 19 வயதுக்குட்பட்ட அணி பல்வேறு வெற்றிகளைக் குவித்தன. இதனால் அவரை விட்டுவிட இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை விரும்பவில்லை. எனவே ஒப்பந்தத்தை தம்முடன் நீடிக்குமாறும் ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணியால் வழங்கப்படும் சம்பளத்தையும் தாமே சேர்த்துத் தருவதாகவும் ராவிட்டிடம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கேட்டுள்ளது.

முன்னதாக முடிவடைந்த ஐ.பி.எல். ஏலத்தில் டெல்லி அணியின் சார்பாக ராவிட் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



# ஆஸ்திரேலியா வென்றால் அது அதிசிறந்த சாதனை

## என்கிறார் அலன் போர்டர்



இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலியா அணி வெற்றிபெற்றால் அது ஆகச் சிறந்த சாதனையாக அமையும் என்று போர்டர் தெரிவித்தார்.

எந்த ஓர் அணிக்குமே இந்தியாவில் தொடரை வெல்வது ஒரு சிறந்த சாதனையாகவே அமையும். இந்திய மண்ணில் வைத்து ஆஸ்திரேலிய அணி தொடரைக் கைப்பற்றிச் சென்றால் இது போற்றுதலுக்குரிய ஓர் அபாரமான வெற்றியே. இந்தத் தொடர் ஆரம்பமாக முன்னர் இந்தியா அணி முழுமையாக ஆதிக்கம் செலுத்தும் என்று பலரும் தெரிவித்தனர். அவர்களில் நானும் ஒருவன். ஏனெனில் ஆஸ்திரேலிய அணி இந்திய மண்ணில் வெளிப்படுத்திய கடந்தகாலப் பெறுபேறுகள் அவ்வாறே அமைந்துள்ளன. ஆனால் நடப்பு வருடத் தொடரில் ஆஸ்திரேலிய அணி மிகப் பெரும் பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளது. தொடரைக் கைப்பற்ற வேண்டும் என்பதே தற்போது எனது எதிர்பார்ப்பு என போர்டர் மேலும் தெரிவித்தார். (ம)

# முன்னிலை பெறுவதற்கு இந்தியா கடும்முனைப்பு



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெறுவதற்காக கடுமையாகப் போராடுகிறது இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சிமித் 111 ஓட்டங்களையும், வேட் 57 ஓட்டங்களையும், வோர்ணர் 56 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 4 இலக்குகளையும், உமேஸ் யாதவ் 2 இலக்குகளையும், புவனேஸ்வர் குமார், அஸ்வின், ஜடேயா மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 21 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆரம்ப வீரரான முரளி விஜயை இழந்தது. எனினும் மறுமுனையில் அரைச்சதம் கடந்து அசத்தினார் ராகுல். மற்றொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களை எட்டியது இந்திய அணி. புஜாராவும் அரைச்சதம் கடந்தார். புஜாராவை வீழ்த்தினார் லையன். ராகுலை பவிலியனுக்கு அனுப்பினார் கும்மின்ஸ். மத்திய வரிசையில் நாயர் மற்றும் அஸ்வின் இருவரும் தடுமாறினர். நாள் முடிவில் இந்திய அணி 6 இலக்குகள் இழப்புக்கு 248 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. சகா 10 ஓட்டங்களுடனும், ஜடேயா 16 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

# கெர்பர் அபார வெற்றி



மியாமி ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் ஜேர்மன் வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பர் வெற்றிபெற்றார்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்திலுள்ள வீராங்கனையான கெர்பரை எதிர்த்து சீன வீராங்கனை டுயன் ஜிங் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 7:6, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கெர்பர் 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் சுற்றுக்கு முன்னேற்றம் கண்டார். (ம)

## ரபேல் நடால் முன்னேறினார்

மியாமி ரென்னிஸ் தொடரில் மூன்றாம் சுற்றுக்கு முன்னேறினார் முன்னணி வீரரான நடால். ஸ்பெய்ன் வீரர் நடாலை எதிர்த்து இஸ்ரேல் வீரர் டுடி செலா மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் நடால். அடுத்த செற்றிலும் அவர் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றதை அடுத்து, 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி கண்டு மூன்றாவது சுற்றுக்கு முன்னேற்றம் கண்டார்.

நடப்புவருடத்தில்நடால் இதுவரை முக்கிய கிண்ணமெதனையும்கைப்பற்றவில்லை. இதனால் அவர்மீது அதிக எதிர்பார்ப்பு உள்ளது. (ம)

## பிரான்ஸ் மிரட்டல்

கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பிரான்ஸ் வெற்றிபெற்றது. ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான சுற்றில் 'ஏ' பிரிவில் இடம்பெற்ற ஆட்டத்தில் பிரான்ஸை எதிர்த்து லக்சம்பேர்க் மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வெற்றிபெற்றது. 'ஏ' பிரிவின் ஏனைய ஆட்டங்களில் சுவீடன் 4:0 என்ற கோல் கணக்கில் பெலாரஸை வென்றது. பல்கேரியா 2:0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை வீழ்த்தியது. (ம)

**உடனடி வேலைவாய்ப்பு**

சர்வதேச ரீதியான அங்கீகரிக்கப்பட்ட எமது Import/Export நிறுவனமானது தனது பல கிளைகளை கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கவுள்ளது அதற்காக O/L, A/L படித்த இளைஞர், யுவதிகளை நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுசெய்யவுள்ளோம்.

076 864 3505, 077 985 6671

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 18 . 09 . 1941 |  | 25 . 02 . 2017 |

**திருமதி செல்லையா நாகரத்தினம்**

கடந்த 26.02.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி செல்லையா நாகரத்தினம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபங்களை தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு நாளை (28.03.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 76, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

**பொன்னையா பரமசாமி**



மலர்வு 1935.10.06 உதிர்வு 2017.03.25

மட்டுவில்தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மாவட்ட செயலக விடுதி (A9வீதி டிப்போ சந்தி அருகில்) வசிப்பிடமாகக் கொண்ட பொன்னையா பரமசாமி (25.03.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ் சென்றவர்களான சபாபதி - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவமலரின் அன்புக்கணவரும் கதிரவேலு, தர்மலிங்கம் காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் சந்திரசேகரம், குணசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரேணுகா (விலங்கு புலனாய்வுத்துறை அதிகாரி, கிளிநொச்சி), ரோகினி (ஆசிரியை கிளி/விவேகானந்தா வித்தியாலயம்), ஆரணி (பணிப்பாளர் வாழ்வின் எழுச்சித் திணைக்களம், கிளிநொச்சி), அகல்யா (உதவிப்பணிப்பாளர் திறைசேரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் கௌரிதிலகன் (உதவிப் பணிப்பாளர் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்), ஜெகதீஸ்கரன் (நு/டெரிக்கிளேயர் த.வி), தவபாலன் (பௌதிகவியல் ஆசிரியர்), லக்ஸ்மன் (பொறியியலாளர், D.M.S. எலக்ரோனிக் Pvt.Ltd) ஆகியோரின் அன்பு மாமனும் அகிம்சா, அருணிசா, அட்சனா, அட்சயன், அனுஷ்கர் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவட்ட செயலகவிடுதி,
(A9 வீதி, டிப்போ சந்தி அருகில்).

தகவல்:
குடும்பத்தினர்
தொ.பே. இல. 077 102 0542,
077 880 8997

**காணி தேவை**

யாழ். பல்கலைக்கழகம்
அல்லது மருத்துவ பீடத்துக்கு
மிக அருகில்
காணி விலைக்கு தேவை.
077 482 0128

**மாபெரும் வழிகாட்டல் கருத்தரங்கு**

**தமிழ்**

திரு. N. சத்தியவேந்தன் [B.A(HONS)M.phil]

கருத்தரங்கு 09 நாள்கள் நடைபெறும்
காலம்- 06.04.2017, 07.04.2017
யூலை மாதம் 19.07.2017- 25.07.2017 வரைநடைபெறும்.
நேரம்- 8.30am தொடக்கம் 1.30pm வரை

* வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்
* கையேடுகள் பின்னர் வழங்கப்படும்

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

வெளிமாணவர்கள் 4 ஆம் திகதிக்கு முன் உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.

**ஆங்கிலம் கற்க வேண்டுமா?**

உலகில் எல்லாக் குழந்தைகளுமே 2 தொடக்கம் 4 வயதிற்குள்ளேயே மொழியைப்பேசக்கற்றுக்கொள்கின்றன. ஆனால் பெரியவர்களான நாம் இன்று வரை ஆங்கிலமொழியைக் கற்றுக்கொள்ளமுடியாமலிருப்பதற்கான காரணம் தவறான வழிமுறையில் ஆங்கிலத்தை கற்றுக்கொண்டிருப்பதேயாகும்.

நேரடி உரையாடற் பயிற்சி மூலமான "ஷாம்சனின"
புதிய ஆங்கில பயிற்சிநெறிகள் ஆரம்பம்

3 மாத சனி,ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 01.04.2017
1. காலை 08.00-10.00 2. காலை 10.00-12.00

செவ்வாய், வியாழன் பிரிவுகள் ஆரம்பம் - 30.03.2017
1.காலை 08.00-10.00 2. காலை 10.00-12.00

SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

**பதவி வெற்றிடம்**

யாழ்.நகரிலுள்ளஎமதுமொழிகள்கற்கைநிறுவனத்திற்கு பின்வரும் மொழிகளுக்கு திறமையான ஆசிரியர்கள் தேவை. **அதி உயர் சம்பளம் வழங்கப்படும்.**

| | |
|---|---|
| ஆங்கிலம் | ஜேர்மன் |
| சிங்களம் | பிரெஞ்சு |

தொடர்பு 077 482 0128

**வேலை வாய்ப்பு**

யாழ்நகரில் பிரபல்யமான நிறுவனமொன்றிற்கு

- ✓ பூ மரங்கள் பராமரித்தல்.
- ✓ காரியாலயவளவை துப்புரவாக வைத்திருத்தல்

போன்ற வேலைகளுக்கு ஆள்கள் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் இன்று (27.03.2017) திங்கட்கிழமை
முற்பகல் 10 - பிற்பகல் 2.00 மணிவரை
நேரில் சமுகம் தரவும்.

E.S.பிறின்டேஸ்
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.